REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2023 ஜனவரி 3 செவ்வாய்க்கிழமை

# தினகரன்

THINAKARAN
1932 - 2022

வரு. 91 இல. 02 | Tuesday 03, January, 2023 | 12 பக்கங்கள் | 50/-




## நாட்டில் ஏற்பட்டுள்ள மருந்து பற்றாக்குறைக்கு விரைவில் தீர்வு

### சுகாதார அமைச்சர் கெஹலிய உறுதி

மருந்துப் பற்றாக்குறையினால் நாட்டில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கு இந்த வருடத்தின் முதல் காலாண்டுக்குள் தீர்வு காணப்படும் என சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த வருடத்திற்கான பட்ஜட்டில் சுகாதார அமைச்சுக்கு பெருமளவு நிதியை ஒதுக்கியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், இந்திய கடன் உதவி, ஆசிய அபிவிருத்தி வங்கி உள்ளிட்ட பல சர்வதேச

04

## அத்தியாவசிய ரயில் சேவைகளுக்கு அவசியமானோரை வைத்திருக்கவும்

### ரயில்வே அதிகாரிகளுக்கு ஜனாதிபதி அறிவுறுத்தல்

லோரன்ஸ் செல்வநாயகம்

அத்தியாவசிய ரயில் சேவைகளுக்காக அதிகாரிகளை வைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ரயில்வே திணைக்கள உயர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.



ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான ஸ்ரீகொத்தவில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் மாநாடொன்றின் போது,

04

## உலகப் பொருளாதாரத்திற்கு 2023 கடினமான ஆண்டாகும்

### IMF இன் பிரதானி கிறிஸ்டலினா தெரிவிப்பு

கடந்த ஆண்டை விட 2023 ஆம் ஆண்டு முழு உலகிற்கும் மிகவும் கடினமான ஆண்டாக இருக்கும் என்று சர்வதேச நாணய நிதியத்தின் பிரதானி கிறிஸ்டலினா ஜியோஜிவா கூறுகிறார்.

அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் சீனாவின்



மெதுவான வளர்ச்சியே இதற்கு காரணம் என்று அவர் செய்தியாளர் சந்திப்பொன்றில் கூறியுள்ளார்.

உக்ரைன் போர் மற்றும் அதிக வட்டி வீதங்கள் காரணமாக உலகப் பொருளாதார வளர்ச்சி 2.7 சதவீதம் என்று

04

# வளமான இலங்கைக்காக சகலரும் அர்ப்பணிப்புடன் செயற்படுவோம்

### புத்தாண்டில் அனைத்து அரச ஊழியர்களுக்கும் ஜனாதிபதி அழைப்பு

**நவீன உலகத்துடன் போட்டியிடக்கூடிய பொருளாதாரத்தை கட்டியெழுப்புவது அவசியம்**

இலங்கையின் பொருளாதாரத்தின் மிக முக்கிய வருடமான 2023 ஆம் ஆண்டில், தமது பொறுப்புகளை எவரும் தட்டிக்கழிக்கக் கூடாது எனவும் புதிய வருடத்தில் வளமான இலங்கைக்காக ஒன்றிணைந்து தம்மை அர்ப்பணிக்குமாறும் அனைத்து அரச ஊழியர்களுக்கும் ஜனாதிபதி அழைப்பு விடுத்தார்.

2023 புத்தாண்டில் ஜனாதிபதி அலுவலக ஊழியர்களுடன் இணைந்து நேற்று (02) காலை தமது கடமைகளை ஆரம்பிக்கும் நிகழ்வில் ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

புத்தாண்டில் கடமைகளை ஆரம்பிக்க முன்னர் ஜனாதிபதி தேசியக் கொடியை ஏற்றி வைத்தார். இதன் பின்னர் அனைத்து ஊழியர்களும் ஒன்றிணைந்து, அரச பணிக்கான சத்தியப்பிரமாணத்தை செய்துகொண்டனர்.

பின்னர் அனைத்து ஊழியர்களுடனும் ஜனாதிபதி, தேநீர் விருந்துபசாரத்தில் இணைந்து கொண்டதோடு பணிக்குழாமின் ஊழியர்களுக்கு, ஜனாதிபதி புத்தாண்டு வாழ்த்துக்களையும் தெரிவித்தார்.

புத்தாண்டில் பணிகளை ஆரம்பிக்க முன்னர் உரையாற்றிய ஜனாதிபதி,

"அனைவருக்கும் எனது புத்தாண்டு வாழ்த்துக்கள்!


ஐந்தரை மாதங்களுக்கு முன்னர் இந்த அலுவலகத்தில் ஒரு வரலாற்றுப் பணியை நாங்கள் ஆரம்பித்தோம். அரசாங்கம் வீழ்ச்சியடைந்து, பொருளாதாரம் உடைந்து வீழ்ந்திருந்த சந்தர்ப்பத்தில், நாட்டை வழமைக்குக் கொண்டுவர இந்த ஐந்தரை மாதங்களில் நடவடிக்கை எடுத்தோம். நமது பொருளாதார பிரச்சினைகள் அனைத்தும் முழுமையாக தீர்க்கப்படவில்லை. ஆனால் இன்று தேவைக்கேற்ப எரிபொருள், எரிவாயு, உணவுப் பொருட்கள், உரங்கள் ஆகியவற்றை வழங்கும் திறனைப் பெற்றுள்ளோம்.



இந்த ஐந்தரை மாதங்களில் இதற்காக நீங்கள் அனைவரும் வழங்கிய ஆதரவுக்கு எனது நன்றிகள். எங்கள் திட்டம் இத்துடன் முடிந்துவிடவில்லை. 2023ஆம் ஆண்டு மிக முக்கியமானது. நாட்டின் கடன் மறுசீரமைப்பு திட்டத்தை செயல்படுத்தி, நாட்டை கடன் சுமையிலிருந்து விடுவித்து நாம்

04

## டேவிட் கெமரூன் ஜனாதிபதி ரணிலுடன் நேற்று சந்திப்பு



தனிப்பட்ட விஜயமாக இலங்கை வந்துள்ள பிரித்தானியாவின் முன்னாள் பிரதமர் டேவிட் கெமரூனுக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கும் இடையில் சந்திப்பு ஒன்று இடம்பெற்றுள்ளது.

நேற்று (திங்கட்கிழமை) முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் குறித்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது. குறித்த சந்திப்பானது சிநேகபூர்வமாக இடம்பெற்றுள்ளதாக ஜனாதிபதி

04



## போதைக்கு அடிமையான மகனை பொலிஸாரிடம் ஒப்படைத்த தாயார்

முல்லைத்தீவில் தாய் ஒருவரின் துணிகர செயல்

03

### உள்ளூராட்சி சபை தேர்தல்கள்

## வேட்பு மனு ஏற்கும் தினம் குறித்து நாளை அறிவிப்பு



உள்ளூராட்சி சபை தேர்தலுக்கான வேட்புமனுவினை பொறுப்பேற்கும் தினம் தொடர்பான அறிவிப்பை தேர்தல்கள் ஆணைக்குழு நாளை அறிவிக்கவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் கூட்டம் நாளைய தினம் இடம்பெறவுள்ளது.

04

## மொட்டு சின்னத்திலேயே SLPP தேர்தலில் போட்டி

### UNPயுடன் இதுவரை எந்த உடன்பாடும் இல்லை

ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூட்டணி அமைப்பது தொடர்பில் இன்னும் இறுதி முடிவு எட்டப்படவில்லை என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று (திங்கட்கிழமை) நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

04



## சீனாவில் வேகமெடுக்கும் கொரோனா பரவல்

### உலக நாடுகள் பலவும் அச்சத்தில்




சீனாவில் கொரோனா தொற்று பரவல் அதிகரித்து வருவதன் காரணமாக உலக நாடுகள் மீண்டும் அச்சத்திற்குள்ளாகியுள்ளன.

இந்நிலையில் சீனாவில் இருந்து வரும் அனைத்து பயணிகளும் தங்கள் நாட்டுக்குள் நுழைய மொரோக்கோ அரசாங்கம் தடை விதித்துள்ளது. சீனாவில் தற்போது கொரோனா

04

## சாரதி அனுமதி பத்திரங்கள் இனிமேல் QR குறியீட்டுடன்

### இந்த வருடம் முதல் ஆரம்பிக்க திட்டம்



சாரதி அனுமதிப் பத்திரத்தை புதுப்பிக்கும் ஒவ்வொரு சாரதிக்கும் QR குறியீட்டுடன் கூடிய புதிய சாரதி அனுமதிப்பத்திரம் இந்த ஆண்டு முதல் வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் (அபிவிருத்தி) குசலானி டி சில்வா தெரிவித்துள்ளார்.

தற்போது இலங்கையர்களுக்கு நான்கு வகையான சாரதி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்

04

### இனப்பிரச்சினைக்கு விரைவான தீர்வு காணும் முயற்சி

## அரசு மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு TNA நிச்சயம் ஒத்துழைப்பு வழங்கும்

### கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவிப்பு



நாட்டில் தற்போது காணப்படுகின்ற அனைத்து பிரச்சினைகளுக்கும் தீர்வு காண்பதாக இருந்தால், அதற்கான அடிப்படையாக இருக்கின்ற தேசிய இனப்பிரச்சினைக்கும் நியாயமான தீர்வு எட்டப்பட வேண்டும். அவ்வாறான தீர்வினை வழங்குவது ஆட்சியில் உள்ள அரசாங்கத்தின் கடப்பாடாகும் என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

தற்போது தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக விரைவான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் அவை வெற்றி பெறுவதற்கு முழுமையான ஒத்துழைப்புக்களை வழங்கும் அதேநேரம், எமது மக்களின் அபிலாஷைகளை பூர்த்தி செய்யாத அர்த்தமற்ற தீர்வை ஏற்கப்போவதில்லை என்பது

04

## சமூக பாதுகாப்பு அறவீட்டு வரி மீள் பரிசீலனை செய்யப்படும்

### அடுத்த ஓரிரு மாதங்களில் தீர்க்கமான முடிவு காணப்படும்

சமூக பாதுகாப்பு அறவீட்டு வரி எதிர்வரும் ஓரிரு மாதங்களில் மீள்பரிசீலனை செய்யப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார். வரி அறவிடல் ஊடாகவே நிவாரணம் வழங்க முடியும். பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள 34 இலட்சம் குடும்பங்கள் அரசாங்கத்திடம் நிவாரணத்தை கோரியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

04



## நடுவானில் மோதிக்கொண்ட இரு ஹெலிகொப்டர்கள்

### அவுஸ்திரேலியாவில் சம்பவம்; நால்வர் பலி

அவுஸ்திரேலியாவின் கோல்ட் கோஸ்ட் அருகே இரண்டு ஹெலிகொப்டர்கள் வானில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

இந்த விபத்தில் நால்வர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் மூவர்


04



## கஞ்சிபான இம்ரானை கைது செய்யக் கோரிக்கை

பாட்டாளி மக்கள் கட்சி அன்புமணி போர்க்கொடி

03



## களனி பல்கலை மாணவர் ஒன்றிய தலைவர் கைது

இன்று கடுவலை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படுவார்

03

## சட்டவிரோதமாக வந்து சேர்ந்த பெருந்தொகை மருந்து வகைகள்

### புறக்கோட்டை சுற்றிவளைப்பில் ஒரு குழு கைது



சட்டவிரோதமாக நாட்டுக்குள் கொண்டு வரப்பட்ட பெருந்தொகை மருந்து வகைகளை ஏனைய பிரதேசங்களுக்கு பகிர்வதற்கு முற்பட்டவேளையில் குறிப்பிட்ட குழுவினர் கைது செய்யப்பட்டதாக தேசிய ஔடத ஒழுங்கமைப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்த அதிகார சபையைச் சேர்ந்த அதிகாரிகள் புறக்கோட்டையில் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்

04

## குறைந்த வருமானமுடைய குடும்பங்களுக்கு வீடுகள்

### கலைஞர்களையும் உள்ளடக்கி வீட்டுத்திட்டம்

குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்கள் மற்றும் கலைஞர்களுக்கு இவ்வருடம் கிட்டத்தட்ட 2,000 வீடுகளை நிர்மாணிக்க நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு தயாராகி வருகிறது.

தெமட்டகொட, பேலியகொட, மொரட்டுவ, மஹரகம மற்றும் கொட்டாவ ஆகிய பகுதிகளில் 1,996 வீட்டுத்

04



## தங்கத்தின் விலையில் வரலாறு காணா உயர்வு

### 24 கரட் தங்கம் 1,87,300 ரூபாவாக பதிவு



உலக சந்தையில் நாளுக்கு நாள் தங்கத்தின் விலை ஏற்ற, இறக்கத்துடன் பதிவாகி வருகின்றது. இதன்படி, நேற்றையதினம் ஒரு அவுன்ஸ் தங்கத்தின் விலை இலங்கை ரூபாவின் படி 663,618. ரூபாவாக பதிவாகியுள்ளது.

நாட்டில் கடந்த சில நாட்களாக தங்கத்தின் விலை உயர்ந்து வருகின்றது.

04

## நாட்காட்டி அச்சிடுதல் 90 வீதத்தால் வீழ்ச்சி

### டயரிகள் அச்சிடுவது கனவாகி விட்டது



நாட்காட்டிகள் மற்றும் நாட்குறிப்புகளை அச்சிடுவது 90 வீதத்தால் குறைந்துள்ளதாக இலங்கை அச்சகத்தின் தலைவர் ஆரியதாச வீரமன் தெரிவித்துள்ளார்.

நாட்காட்டிகள், புத்தகங்கள் மற்றும் நாட்குறிப்புகள் அச்சிடுவது கனவாகிவிட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

காகிதத்தின் விலை உயர்வால் புத்தகங்களை

04





2023 புத்தாண்டில் ஜனாதிபதி அலுவலக ஊழியர்களுடன் இணைந்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிகளை ஆரம்பித்து வைத்தார். இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, ஜனாதிபதி அலுவலகத்தின் சிரேஷ்ட அதிகாரிகள் மற்றும் ஊழியர்களும் கலந்து கொண்டனர்.








புதிய ஆண்டில் பணிகளை ஆரம்பிக்கும் நிகழ்வு லேக்ஹவுஸ் நிறுவனத்தில் நேற்று மும்மத வழிபாடுகளின் பின் ஆரம்பிக்கப்பட்டது. நிகழ்வில் நிறுவனத்தின் தலைவர் அனுஷ பெல்பிட்ட, ஆசிரிய பீடப் பணிப்பாளர் சிசிர பரணதந்திரி, நிறைவேற்றுப் பணிப்பாளர் பிரபாத் மஞ்சுள மாகந்துர, நிதிப் பணிப்பாளர் ஹரேந்திர காரியவசம், நீதிப் பணிப்பாளர் ஜனக ரணதுங்க, பொது முகாமையாளர் சுமித் கொத்தலாவல,தினகரன்,வாரமஞ்சரி ஆசிரியர் செந்தில் வேலவர் மற்றும் ஊழியர்கள் அனைவரும் கலந்து கொண்டனர். அத்தோடு ஒப்பந்த அடிப்படையில் ஆறு வருடங்களுக்கும் மேலாக சேவையாற்றி, முறையான மதிப்பீட்டின் பின்னர், தமது செயற்திறனில் அதி கூடிய முன்னேற்றத்தைப் பதிவு செய்த 16 ஊழியர்களுக்கு நிறுவனத் தலைவரால் நிரந்தர நியமனங்களுக்கான கடிதங்களும் வழங்கி வைக்கப்பட்டன.




# சேவையை முடித்து நாடு திரும்பவுள்ள குவைத் தூதுவருக்கு தூதரகத்தில் பாராட்டு

பணியை நிறைவு செய்துள்ள குவைத்துக்கான இலங்கை தூதுவர் உதுமான் லெப்பை முஹம்மத் ஜவ்ஹர்,நாட்டுக்கு திரும்பவுள்ளதால் அவரைப்பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு (26) குவைத் தூதரகத்தில் இடம்பெற்றது.

இக்ரஃ இஸ்லாமிய சங்கம் ஏற்பாடு செய்திருந்த இந்நிகழ்வில், இக்ரஃ இஸ்லாமிய சங்க ஆண்கள் மற்றும் பெண்கள் பிரிவு நிர்வாக சபை அங்கத்தவர்கள் கலந்து கொண்டனர்.



குவைத்தில், கடந்த முப்பது வருடங்களாக வாழும் இலங்கையருக்கு இவர் ஆற்றிய சேவைக்கு இக்ரஃ இஸ்லாமிய சங்கம் நன்றி தெரிவித்ததுடன் அவருக்கு பாராட்டையும் தெரிவித்தது. அதிலும் விஷேடமாக கொவிட்19 தொற்று காலங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஜம்மியத்துல் இஸ்லாஹ் வழங்கிய உலருணவுப் பொதிகளை தூதரகத்தின் ஊடாக இக்ரஃ இஸ்லாமிய சங்கம் வழங்கி உதவியமைக்கும் நன்றி தெரிவிக்கப்பட்டது. கடந்த காலங்களைப் போன்று அடுத்ததாக வரவுள்ள தூதுவருடனும், தூதரகத்துடனும் இணைந்து செயற்பட வேண்டும் எனவும் இதன்போது கேட்டுக் கொள்ளப்பட்டது. இக்ரஃ இஸ்லாமிய சங்கத்தின் ஸ்தாபக உறுப்பினர்களில் ஒருவரும், உப தலைவரும், தற்போதைய பதில் தலைவருமான சகோ. பஸ்லி பாஸி, கடந்த மூன்று வருடங்களாக இணைந்து குவைத் வாழ் இலங்கையர்களுக்கு செய்த பல்வேறு வகையான சேவைகளை பாராட்டிப் பேசினார்.

# வத்திக்கானின் முன்னாள் பாப்பரசருக்கு சர்வ மதத் தலைவர்கள் அனுதாபம்

(ருசைக் பாருக்)

வத்திக்கானின் முன்னாள் பாப்பரசர் மறைவுக்கு சர்வமதத் தலைவர்கள் ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்துள்ளனர்.

சர்வ மதத் தலைவர்களின் அனுதாபச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

சமய சகவாழ்வு மற்றும் சர்வதேச ஒற்றுமையை மதிக்கும் சமயத் தலைவராக 16வது பாப்பரசர் பெனடிக்ட் திகழ்ந்தார்.

உலகில் சமயங்களின் மற்றும் சர்வதேச ஒற்றுமையைக் கட்டியெழுப்புவதில் ஆற்றிய பங்குகள் வரலாற்றில் மறக்க முடியாதது. வத்திக்கானின் 16வது பாப்பரசராக அவர் பதவி வகித்த காலத்தில், சர்வதேச ஒற்றுமை மற்றும் மத நல்லிணக்கத்தை மேம்படுத்துவதில் வத்திக்கானுக்கும் முழு உலகிற்கும் பெரும் சேவை செய்தவர் அவர். அவருடைய மகிமையான செயல்களில், மாண்புமிகு இயேசுவின் மாபெரும் வழிகாட்டலை நாம் காண்கிறோம். மேலும் கிறிஸ்தவ மதப் பெரியார் என்ற வகையில் இன அமைதி மற்றும் சர்வதேச ஒற்றுமைக்காக பல பிரச்சினைகளை தீர்த்து வைத்துள்ளார்.

16வது பாப்பரசர் அவர்களின் மறைவு உலகிற்கு பெரும் இழப்பாகும், அவரது மறைவையிட்டு, வத்திக்கான் மற்றும் உலக அமைதியை மதிக்கும் சகல மக்களுக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2023 ஜனவரி 3 செவ்வாய்க்கிழமை

# தினகரன்
THINAKARAN
තිනකරන්

தொழுகை நேரம்
சுபஹ் - 05.00
லுஹர் - 12.15
அஸர் - 03.36
மஃரிப் - 06.06
இஷா - 07.21

இன்றைய சுபதினம்
சுபகிருது வருடம் மார்கழி 18
ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



### அலுவலக நேரங்களில் அரச ஊழியர்கள்:

# கையடக்கத் தொலைபேசியை தொடர்ந்து உபயோகிப்பதை கட்டுப்படுத்த நடவடிக்கை

**தவறினால் உரிய கண்காணிப்பு முன்னெடுக்கப்படும்**

**பொதுநிர்வாக அமைச்சின் செயலாளர் நீல் பண்டார ஹபுஹின்ன**

**லோரன்ஸ் செல்வநாயகம்**

அலுவலக நேரங்களில் அரச ஊழியர்கள் கையடக்கத் தொலைபேசியை தொடர்ந்து உபயோகிப்பதை தவிர்த்துக்கொள்ள வேண்டும் என்றும் அவ்வாறு அதை தொடர்ச்சியாக உபயோகிப்பவர்கள் தொடர்பில் உரிய கண்காணிப்பு மேற்கொள்ளப்படவேண்டும்என்றும்பொதுநிர்வாக அமைச்சின் செயலாளர் நீல் பண்டார ஹபுஹின்ன தெரிவித்துள்ளார்.

பொதுநிர்வாக அமைச்சில் நேற்றைய தினம் 2023 ஆம் ஆண்டுக்கான கடமைகளை ஆரம்பிக்கும் உத்தியோகபூர்வ நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத்தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதுதொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அவர், அரச ஊழியர்கள் தமது கையடக்கத் தொலைபேசியாகவிருந்தாலும் அதில் காலை முதல் தொடர்ச்சியாக பேஸ்புக் மற்றும் வட்செப் அல்லது குறுஞ்செய்திகளை பார்த்துக்கொண்டு இருப்பதைத் தவிர்த்துக்கொள்ளவும். ஏதாவதொரு சமயம் அவ்வாறு உபயோகித்தால் பரவாயில்லை. எனினும் அவ்வாறு நாள் முழுவதும் அதனோடு ஒட்டிக்கொண்டிருப்பவர்களை காணமுடிகிறது. அந்த சந்தர்ப்பங்களில் சேவைகளைப்

04



2023ஆம் ஆண்டின் புதுவருட பணிகளை ஆரம்பிக்கும் நிகழ்வு பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையில் பிரதமர் அலுவலகத்தில் நேற்று (02) வைபவரீதியாக ஆரம்பமானபோது எடுத்த படம்.

# முட்டை இறக்குமதி செய்வது தொடர்பில் அரசு தீவிர கவனம்

**அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவிப்பு**

**லோரன்ஸ் செல்வநாயகம்**



நாட்டில் முட்டை விலை அதிகரித்துவரும் நிலையில் வெளிநாட்டிலிருந்து முட்டையை இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் கவனம் செலுத்தி வருவதுடன் அதுதொடர்பில் இம்முறை அமைச்சரவைக் கூட்டத்தில் இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்படுமென வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

முட்டை விலையை கட்டுப்படுத்தும் வகையில் எவ்வாறான செயற்றிட்டத்தை முன்னெடுப்பது என்பது தொடர்பில் அமைச்சரவையில் விரிவாக கலந்துரையாடப்படுவதுடன் அங்கு எட்டப்படும் இறுதி முடிவுக்கிணங்க அடுத்தகட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார். அதற்கிணங்க, முட்டை இறக்குமதி செய்வதா இல்லையா என்பது தொடர்பில் தீர்மானிக்கப்படும். முட்டை விலையை கட்டுப்பாட்டுக்குள் வைப்பது தொடர்பிலும் முட்டையை இறக்குமதி செய்வது தொடர்பிலும் பொது மக்களும் பேக்கரி உரிமையாளர்களும் அரசாங்கத்திடம் தொடர்ந்தும் வேண்டுகோள்களை முன்வைத்து வருகின்றனர். அதேவேளை மேன்முறையீட்டு நீதிமன்றம் முட்டை கட்டுப்பாட்டு விலையை தற்காலிகமாக இடைநிறுத்தும் வர்த்தமானி ஒன்றை

04

### இலங்கை உள்ளிட்ட நாடுகளின் கடன் நெருக்கடிக்கு தீர்வுபெற்றுக்கொடுக்க;

# சர்வதேச நாணய நிதியம் தீவிர அர்ப்பணிப்புடன் செயற்படுகிறது

**நிதியத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜியேவா தெரிவிப்பு**

**லோரன்ஸ் செல்வநாயகம்**




இலங்கை உள்ளிட்ட கடன் நெருக்கடியை எதிர்நோக்கியுள்ள நாடுகளுக்கு தீர்வு பெற்றுக்கொடுப்பதற்காக சர்வதேச நாணய நிதியம் தீவிர அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகிறது என அந்த நிதியத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜியேவா தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு தொலைக்காட்சியொன்றுக்கு வழங்கியுள்ள நேர்காணலொன்றிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அந்த பேட்டியாளர் தமது கேள்வியின் போது, சர்வதேச நாணய நிதியம் தெரிவிப்பதுபோல் குறைந்த வருமானம் கொண்ட நாடுகள் பல கடன் நெருக்கடிக்கு உட்பட்டுள்ளமை உலக பொருளாதார நெருக்கடிக்கு எவ்வாறான அழுத்தங்களை வழங்கும் எனக் கேள்வியெழுப்பியுள்ளார்.

அதற்குப் பதிலளித்துள்ள கிறிஸ்டலினா ஜோர்ஜியேவா இதுவரை அவ்வாறான நாடுகள் எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடி உலக பொருளாதார நெருக்கடியை உருவாக்கும் அளவுக்கு குறிப்பிடத்தக்க மட்டத்தை கொண்டிருக்கவில்லை.

எதியோப்பியா, ஸாம்பியா, கானா, லெபனான், சூரினாம் மற்றும் இலங்கை போன்ற நாடுகளே இவ்வாறு கடுமையான கடன் நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளன. அந்நாட்டு மக்களுக்கு நாம் கூறுவது அத்தகைய பிரச்சினைகளுக்கு தீர்வுபெற்றுக்கொடுப்பது அவசியமென்பதே. வளர்ச்சியடைந்து வரும் நாடுகளில்

04

# தம்புள்ளையில் 05 Kg கேரள கஞ்சா மீட்பு



யாழ்ப்பாணத்தில் இருந்து தம்புள்ளைக்கு கொண்டு வரப்பட்டு தம்புள்ளை விகாரை சந்தியில் உள்ள வீடொன்றில் புதைத்து வைக்கப்பட்டிருந்த 5 கிலோவுக்கும் அதிகமான கேரள கஞ்சாவுடன் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டதாக தம்புள்ளை பொலிஸார் தெரிவித்தனர். தம்புள்ளை பிரதேசத்தில் சில காலமாக பாரிய போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டு வந்த நபரொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக தம்புள்ளை தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

04

# களனி பல்கலை மாணவர் ஒன்றிய தலைவர் கைது

**இன்று கடுவலை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படுவர்**



களனி பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவரும் மற்றுமொரு பிரதிநிதியும் தலங்கம பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தலங்கம பொலிஸ்நிலையத்திற்கு வருகைதந்த பின்னர் குறித்த இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த ஜூலை 10ஆம் திகதி கல்வி அமைச்சுக்கு அருகில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது, கல்வி அமைச்சின் வாயிலை சே தப்படுத்தியமைக்காக மேற்ப டி இருவர் மீதும் பொதுச் சொத்து சட்டத்தின் கீழ் குற்றம் சுமத்தப்பட்டுள்ளதாக சட்டத்தரணி நுவன் போபகே தெரிவித்தார்.

மாணவர் ஒன்றியத்தின் தலைவர் கலும் முதன்நாயக்க மற்றும் மாணவர் சங்கத்தின் பிரதிநிதி டில்ஷான் ஹர்ஷன ஆகியோரே இவ்வாறு கைதானவர்களாவர். இருவரது வாக்குமூலங்களும் பதிவு செய்யப்பட்டு வருவதாகவும், இன்று கடுவெல நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த உள்ளதாகவும் சட்டத்தரணி தெரிவித்தார்.



2023 ஆம் ஆண்டு பிறந்துள்ள புதுவருடத்தில் முதல் வேளை நாளான நேற்று முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்திலும் அரச அலுவலர்கள் தமது கடமைகளை தேசியக் கொடியை ஏற்றி தேசிய கீதம் இசைக்கப்பட்ட பின்னர் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர்களான அன்வர் அலி மற்றும் அலா அஹமட் ஆகியோரின் தலைமையில் சத்தியப் பிரமாணங்களை வாசித்து தமது கடமைகளை ஆரம்பித்தனர்.
படம் ஏ.எஸ்.எம்.ஜாவித்

# போதைக்கு அடிமையான மகனை பொலிஸாரிடம் ஒப்படைத்த தாயார்

**முல்லைத்தீவில் தாய் ஒருவரின் துணிகர செயல்**

முல்லைத்தீவு மாவட்டத்தில், முல்லைத்தீவு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வலைஞர் மடம் கிராமத்தில் போதைக்கு அடிமையான 24 வயதுடைய மகனை தாயொருவர் பொலிஸாரிடம் ஒப்படைத்த சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது.

24 வயதுடைய இளைஞன் வீட்டில் தந்தை இல்லாத நிலையில் தாயின் அரவணைப்பில் வாழ்ந்து வந்துள்ளார். தாயார் கஷ்டப்பட்டு உழைத்து மகனை பராமரித்து வந்துள்ளார்.

ஊசி, குடு உள்ளிட்ட போதைக்கு அடிமையான குறித்த இளைஞன் வீட்டில் இருந்த பொருட்கள் ஒவ்வொன்றாக விற்பனை செய்து போதைவஸ்த்து பாவணைக்காக பயன்படுத்தி வந்துள்ள நிலையில் தாயின் மோதிரத்தினை விற்க தருமாறு வற்புறுத்தியவேளை தாயார் மகனின் தொல்லை தாங்கமுடியாத நிலையில் (29.12.22) அன்று முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். தாயின் முறைப்பாட்டிற்கு அமைய முல்லைத்தீவு பொலிஸாரால் குறித்த இளைஞன் கைது செய்யப்பட்டு முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றில்

04

# கஞ்சிபான இம்ரானை கைது செய்யக் கோரிக்கை

**பாட்டாளி மக்கள் கட்சி அன்புமணி போர்க்கொடி**

போதைப்பொருள் கடத்தல்காரர்களின் தலைவன் என அழைக்கப்படும் 'கஞ்சிபான இம்ரான்' எனும் மொஹம்மட் நஜீம் மொஹம்மட் இம்ரானை உடனடியாக கைது செய்யுமாறு பாட்டாளி மக்கள் கட்சியின் தவிசாளர் அன்புமணி ராமதாஸ் கோரிக்கை விடுத்துள்ளார்.

இம்ரான், தமிழகத்திற்குள் ஊடுருவியதாக வெளியான தகவல், கடலோர எல்லைப் பாதுகாப்பில் உள்ள குறைபாடுகளை அம்பலப்படுத்தியுள்ளதாக அன்புமணி ராமதாஸ் குற்றம் சுமத்தியுள்ளார்.

இம்ரான் இலங்கையிலிருந்து தமிழகத்திற்குள் நுழைந்ததாக 'தி இந்து' நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தநிலையில் கடலோர காவல்துறையினரின் பாதுகாப்பை மீறி அவர் எப்படி தமிழகத்திற்குள் நுழைந்தார் என அன்புமணி ராமதாஸ் கேள்வி எழுப்பியுள்ளார்.

டிசம்பர் 25 ஆம் திகதி ராமேஸ்வரம் இராமநாதபுரம் மாவட்ட கடற்கரையில் கஞ்சிபான இம்ரானும் அவரது சகாவும் இறங்கியதாகவும், இது தொடர்பாக அவதானமாக இருக்குமாறு மாநிலம் முழுவதும் உள்ள சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளை உளவுத்துறை எச்சரித்துள்ளதாகவும் அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கொலை, கொலை அச்சுறுத்தல் விடுத்தமை உள்ளிட்ட பல்வேறு குற்றங்களுக்காக தேடப்பட்டு வந்த இம்ரான், கடந்த 2019ம் ஆண்டு டுபாயில் கைது செய்யப்பட்டு, நாடு கடத்தப்பட்டு, தலா 5 மில்லியன் ரூபாய் மதிப்பிலான இரண்டு சரீர பிணைகளில் கடந்த 20ம் திகதி நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டார்.

பிணையில் வெளிவந்த இம்ரான் இந்தியாவுக்குள் நுழையத் திட்டமிட்டுள்ளதாக உளவு அமைப்புகள் மற்றும் நம்பகமான ஆதாரங்களில் இருந்து தமிழக உளவுத்துறைக்கு தகவல் கிடைத்துள்ளதாக த ஹிந்து தெரிவித்துள்ளது. கஞ்சிபான இம்ரான் இந்தியாவுக்குத் தப்பிச் சென்றது குறித்து இலங்கை இன்னும் குறிப்பிட்ட பதிலை அளிக்கவில்லை என்றும், இந்திய புலனாய்வு அமைப்புகள் கஞ்சிபான இம்ரான் தங்கள் நாட்டுக்குள் நுழைந்தமை குறித்த உண்மைகளை நம்பகமான ஆதாரங்கள் மூலம் உறுதி செய்துள்ளதாகவும் 'தி இந்து' சுட்டிக் காட்டுகிறது.

# 142 ஏற்றுமதி இறக்குமதி பொருட்களுக்கான புதிய எச்எஸ் கோட் அறிமுகம்

**நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவிப்பு**



**லோரன்ஸ் செல்வநாயகம்**

ஏற்றுமதி இறக்குமதி பொருட்கள் சில வற்றிற்காக புதிய எச்எஸ் கோட் அறிமுகப்படுத்தும் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படவுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

அதற்கிணங்க, 142 பொருட்களுக்காக அந்த எச்எஸ் கோட் அறிமுகப்படுத்தப்படவுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார். அதுதொடர்பில் அவர் டுவிட்டர் செய்தியில் பதிவொன்றை மேற்கொண்டுள்ளதுடன் ஜனவரி முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் ஏற்றுமதி இறக்குமதித் துறையில் 142 பொருட்களை உள்ளடக்கியவாறு இந்த எச்எஸ் கோட் அறிமுகப்படுத்தப்படுவதாகவும் இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

# போதைப் பொருள் கடத்தலை தடுப்பதில் படையினருக்கு வெற்றி

**பெருமளவில் கட்டுப்படுத்த முடிந்துள்ளதாக தெரிவிப்பு**

பாதுகாப்பு அமைச்சு பொலிஸ் மற்றும் ஏனைய தரப்பினருடன் இணைந்து முன்னெடுத்த நடவடிக்கைகள் காரணமாக போதைப்பொருள் கடத்தல் நடவடிக்கைகளை பெருமளவிற்கு கட்டுப்படுத்த முடிந்துள்ளதாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கமல் குணரட்ண தெரிவித்துள்ளார்.

போதைப்பொருள் கடத்தலை முறியடிப்பதற்கான நடவடிக்கைகள் வெற்றியளித்துள்ளதன் காரணமாக சமூகத்தில் பாரிய தாக்கம் ஏற்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சமூக அமைதியின்மையின் போது பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் அத்தியாவசிய சேவைகள் விநியோகம் போன்றவற்றை உறுதி செய்வதற்காக ஆயுத படையினரும்

04



# இடமாற்றம் பெற்றுச் செல்லும் வெலி./ கல்பொக்கை கிராம உத்தியோகத்தர் கௌரவிப்பு




வெலிகம தினகரன் நிருபர்

கல்பொக்கை (கிழக்கு) கிராம உத்தியோகத்தராக பல ஆண்டுகளாகக் கடமை புரிந்து, இடமாற்றம் பெற்றுச் செல்லும் திருமதி சேபாளிகாவை கௌரவிக்கும் வைபவம் ஞாயிறு (01) பிற்பகல் வெலிகம ஹுஸைன் ஹாஜியார் நினைவு மண்டபத்தில் நடைபெற்றது.

கல்பொக்கை (கிழக்கு) மக்கள் பாதுகாப்புக் குழுத் தலைவர் ஏ.கே. எம். முஸ்னி ஆசிரியர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், வெலிகம நகர சபை உப தலைவர் எம்.ஜே.எம். மின்ஹாஜ், வெலிகம நகர சபை முன்னாள் தலைவர் எச். எச். முஹம்மத் உட்பட உலமாக்கள், கல்விமான்கள், சமூக சேவையாளர்கள், மக்கள் பாதுகாப்பு உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். மேலும் புதிதாக இப்பகுதிக்கு நியமிக்கப்பட்டுள்ள கிராம உத்தியோகத்தர் திருமதி பிருதி நுவன்திகாவை வரவேற்கும் நிகழ்வும் இதன்போது இடம்பெற்றது. இடமாற்றம் பெற்றுச் செல்லும் கிராம உத்தியோகத்தருக்கு அதிதிகளால் நினைவுச் சின்னங்கள் வழங்கப்பட்டன.

## முட்டை இறக்குமதி... (03 ஆம் பக்கத் தொடர்)

வெளியிடுவதற்கும் ஏற்கனவே அனுமதி வழங்கியிருந்தது. அதனையடுத்தே முட்டைவிலை மேலும் அதிகரித்தது. அந்த நிலையில் தற்போது 60 ரூபா மற்றும் அதற்கு மேற்பட்ட விலையில் முட்டை விற்பனை செய்யப்பட்டு வருகிறது. அகில இலங்கை முட்டை விற்பனையாளர் சங்கம் முட்டை விலை அதிகரிப்புக்கு தாம் பொறுப்பில்லை என்றும் இடைத்தரகர்களே அதற்கான பொறுப்பை ஏற்கவேண்டும் என்றும் தெரிவித்துள்ளனர்.இந்த பின்னணியிலேயே முட்டையை இறக்குமதி செய்வது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

## போதைக்கு அடிமையான... (03 ஆம் பக்கத் தொடர்)

கடந்த 30.12.22 முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளதுடன் இளைஞன் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். இதன்போது குறித்த இளைஞனிடம் மேற்கொள்ளப்பட்ட மருத்துவ பரிசோதனைகளில் போதைவஸ்த்து பாவனை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.இந்நிலையில் கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்தில் ஆறு மாத காலத்திற்கு இளைஞனை புனர்வாழ்விற்கு உட்படுத்துமாறு மன்று பணித்துள்ளது.

## சர்வதேச நாணய... (03 ஆம் பக்கத் தொடர்)

25% மான நாடுகள் இவ்வாறான கடன் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளதைக் காணமுடிகிறது.

அவ்வாறு நாடுகள் அதிகரித்து அந்தப் பட்டியல் நீளுமானால் அது உலக பொருளாதாரத்திற்கு அழுத்தத்தை ஏற்படுத்தலாம். அதனால்தான் சர்வதேச நாணய நிதியம் இவ்வாறான கடன் நெருக்கடிகளுக்கு தீர்வுபெற்றுக்கொடுப்பதில் தீவிர அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகிறது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## கையடக்கத் தொலைபேசியை... (03 ஆம் பக்கத் தொடர்)

பெற்றுக்கொள்வதற்காக அரச நிறுவனங்களுக்கு வருகை தரும் பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்க வேண்டி வருகிறது.

சிலர் சேவை பெறுவதற்காக வருகைதந்துள்ள மக்களையும் தனக்கு முன்னால் வைத்துக்கொண்டு கையடக்கத் தொலைபேசியுடன் காலத்தைக் கழித்துக்கொண்டிருப்பதையும் காண முடிகிறது. குறிப்பாக தனியார் துறை நிறுவனங்களின் வேலை நேரத்தில் கையடக்கத் தொலைபேசிகளை லொக்கருக்குள் வைத்து பூட்டிவிடும் வழக்கமுள்ளது. அவர்கள் வீடு செல்லும் போதே மீண்டும் அவர்களது கையில் தொலைபேசி வழங்கப்படும்.நாம் அவ்வாறான கண்டிப்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளப் பொவதில்லை. எனினும் தொடர்ச்சியாக இவ்வறான தவறுக் இடம்பெறும்போது அவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியும் வருக் அதனைக் கருத்திற் கொண்டு அனைத்து அரசாங்க ஊழியர்கள் தொடர்ச்சியாக கையடக்கத் தொலைபேசிகளை உபயோகிப்பதை கட்டுப்படுத்தவேண்டுமென்றும் அவர் தெரிவித்துள்ளர்.



வருமானம் குறைந்த 25 பாடசாலை மாணவ, மாணவிகளுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கப்பட்டன. மாளிகாவத்தை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மற்றும் இலங்கை வங்கியினர் இணைந்து இவற்றைை வழங்கினர். (படம்; மொஹமட் நசார்)

## அத்தியாவசிய ரயில் சேவைகளுக்கு...

ஊடகவியலாளர் எழுப்பிய கேள்வியொன்றுக்கு பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ரயில்வே ஊழியர்கள் பலர் ஜனவரி முதலாம் திகதி முதல் ஓய்வுபெற்றுச் செல்வதால் குறிப்பிட்டளவு ரயில் சேவைகள் ரத்துச்செய்யப்பட்டுள்ளதாகவும் அதுதொடர்பில் அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கை என்ன என்றும் அந்த ஊடகவிலாளர்கள் கேள்வியெழுப்பினார்.

அதற்குப் பதிலளித்துள்ள பாலித ரங்கே பண்டார, இந்த நடவடிக்கைகள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்தில் விடப்பட்ட தவறினால் நிகழ்ந்ததல்ல என்றும் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, இவ்வாறான நிலை ஏற்படுமென ரயில்வே பொதுமுகாமையாளரால் போக்குவரத்து அமைச்சருக்கும் அரசாங்கத்தின் உயர் அதிகாரிகளுக்கும் ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருக்க வேண்டும். ஏன் அவர் அதை மேற்கொள்ளவில்லை என்றும் அவர் கேள்வியெழுப்பியுள்ளார்.

எவ்வாறாயினும் இவ்வாறான பிரச்சினைகள் எழும்போது ஆரம்பத்திலேயே அதனை நிவர்த்தி செய்துகொள்ள வேண்டுமென்பதுடன் அதற்காக மேலும் சிலரை தயார்படுத்திக்கொள்வது ரயில்வே உயரதிகாரிகளின் பொறுப்பாகுமென்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## சமூக பாதுகாப்பு அறவீட்டு வரி...

வரி அறவிடல், பொருளாதார நிலைமை தொடர்பில் வினவிய போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

பொருளாதாரப் பாதிப்பில் இருந்து மீள்வதற்கு அரசாங்கம் கடந்த ஆறு மாத காலத்தில் முன்னெடுத்த கடுமையான தீர்மானங்கள் சாதகமான பெறுபேற்றை அளித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்று சபை உடன் இம்மாத நடுப்பகுதியில் பேச்சுவார்த்தையில் ஈடுபட திட்டமிட்டுள்ளோம்.

கடுமையான தீர்மானங்களினால் நாட்டு மக்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்பதை ஏற்றுக் கொள்கிறோம்.

கடுமையான தீர்மானங்களை எடுக்காமல் இருந்திருந்தால் நாட்டில் கடந்த வருடத்தில் ஏப்ரல், மே ஆகிய காலப்பகுதியில் இருந்த நிலை தற்போது பன்மடங்கு அதிகரித்து பாரிய விளைவை நாடு எதிர்கொண்டிருக்கும்.

பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள 43 இலட்ச குடும்பங்கள் அரசாங்கத்திடம் நிவாரண உதவியை கோரியுள்ளார்கள். இவர்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும். வரி அறவிடல் ஊடாகவே நிவாரணம் வழங்க முடியும்.

பொருளாதார மட்டத்தில் உயர் நிலையில் உள்ள 10 சதவீதமானோரிடமிருந்து உதவிகளை பெற்று நடுத்தர அல்லது ஏழ்மை நிலையில் உள்ளவர்களுக்கு நிவாரணம் வழங்க புதிய வரிகள் அமுல்படுத்தப்பட்டுள்ளன.

அரச வருமானத்தை 14 சதவீதமாக தக்கவைத்துக் கொள்ள பெறுமதி சேர் வரி 15 சதவீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

சமூக பாதுகாப்பு அறவீட்டு வரி இன்னும் ஓரிரு மாதங்களில் மீள் பரிசீலனை செய்யப்படும். சர்வதேச நாணய நிதியத்தின் நிதியுதவி பெற்றுக் கொள்ளப்பட்டவுடன் ஒருசில அத்தியாவசிய பொருட்களின் விலையை குறைக்க அவதானம் செலுத்தப்பட்டுள்ளது என்றார்.

## வளமான இலங்கைக்காக சகலரும்...

முன்னேற வேண்டும். நவீன உலகத்துடன் போட்டியிடக்கூடிய பொருளாதாரத்தை நாம் கட்டியெழுப்ப வேண்டும்.

நாட்டின் அரசியல் முறைமையில் மாற்றம் தேவை என்று பெரும்பாலானோர் கருதுகின்றனர். இந்த இரண்டு விடயங்களையும் நாம் நிறைவேற்ற வேண்டும்.

தற்போதுள்ள அரசியல் முறைமையில் உள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான புதிய வழிமுறைகளைக் கண்டறிய வேண்டும். இதற்காக கடந்த ஆண்டைவிட நாம் அனைவரும் ஒன்றிணைந்து பணியாற்ற வேண்டும்.

இந்த அரசாங்கத்தை ஒரே இயந்திரமாகவே பார்க்கிறோம். அமைச்சுக்களுக்கு பல திட்டங்கள் தனியாக பிரிக்கப்படவில்லை.

வேலைத் திட்டங்கள் அனைத்தும் ஒரு இயந்திரத்தின் துணைப் பகுதிகளாக முன்னெடுக்கப்படுகின்றன. எனவே, யாருக்கும் இடையில் போட்டியோ, கயிறிழுத்தலோ இருக்கக் கூடாது.

தங்களின் பொறுப்புக்களை வரையறுத்துக் கொள்ளக் கூடாது. நாட்டின் அடிப்படைக் கொள்கைகளை நடைமுறைப்படுத்த நீங்கள் அனைவரும் கட்டுப்பட வேண்டும். இந்தப் பணிகளின் போது ஜனாதிபதி அலுவலகம் மையப் பகுதியாக இருக்கும். அமைச்சரவை மற்றும் பிரதமர் அலுவலகம் ஆகியவற்றினால் இந்தப் பணிகள் முன்னெடுக்கப்படும்.

உங்களின் பணிகள் வாரத்தில் 05 நாட்களுக்கோ, நாளொன்றுக்கு 08 மணித்தியாலங்களுக்கோ மட்டுப்படுத்தப்படக் கூடாது. அனைவரும் அர்ப்பணிப்புடன் பணியாற்ற வேண்டும்.

2023 ஆம் ஆண்டு இறுதிக்குள் இந்த நாட்டில் சாதாரண சூழ்நிலையை உருவாக்கி, உங்கள் அனைவரின் ஆதரவுடன் இந்த நாட்டை முன்னோக்கி வழிநடத்த நான் எதிர்பார்க்கின்றேன்.'' என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, ஜனாதிபதி அலுவலகத்தின் சிரேஷ்ட அதிகாரிகள் உள்ளிட்ட அனைத்து ஊழியர்களும் கலந்துகொண்டனர்.

## அரசு மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு...

உறுதியானது என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் உட்பட சர்வகட்சிகளுடன் எதிர்வரும் 10ஆம் திகதி முதல் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்து தொடர்ச்சியாக பேச்சுக்களை முன்னெடுப்பதற்கு இணக்கப்பாடுகள் எட்டப்பட்டுள்ள நிலையில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போதைய அரசாங்கம் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு உட்பட இதர விவகாரங்கள் தொடர்பில் விரைவானதொரு நடவடிக்கைளை முன்னெடுத்துள்ளது. இந்த முயற்சி வெற்றிபெறுமா, இல்லையா என்பது குறித்து உறுதியான, நம்பிக்கையான கருத்துக்களை வெளிப்படுத்த முடியாது.

இருப்பினும், எமது மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வினை எட்டுவதற்குரிய சந்தர்ப்பமொன்று கிட்டியுள்ளது. அவ்விதமாக கிட்டியுள்ள சந்தர்ப்பத்தினை நாங்களாக புறமொதுக்கியதாக இருக்க முடியாது. ஆகவே, தற்போதைய விரைந்த முயற்சிகள் வெற்றி பெறுவதற்கு எம்மால் இயலுமான ஒத்துழைப்புக்களை வழங்கவுள்ளோம்.

அதேநேரம் தற்போது நாட்டில் காணப்படுகின்ற நெருக்கடியான நிலைமைகள் அனைத்தும் தீர்க்கப்பட வேண்டுமாக இருந்தால், அவற்றுக்கு அடிப்படையாக இருக்கின்ற தேசிய இனப்பிரச்சினைக்குரிய நியாயமான தீர்வு வழங்கப்பட வேண்டும்.

அவ்வாறான நிலைமையொன்று ஏற்படுத்தப்பட்டால் தான், நாட்டின் பொருளாதாரம் உட்பட அனைத்து சூழல்களிலும் மாற்றங்கள் நிகழும். சர்வதேச நாணய நிதியம் உள்ளிட்ட சர்வதேச நிதி முகவரங்கள் உதவிகளை வழங்கும்.

சர்வதேச நாடுகள் கடன் மறுசீரமைப்புக்களை செய்யும். ஆகவே தான் ஆட்சியில் உள்ள அரசாங்கம் தீர்வு விடயத்தில் கரிசனை கொண்டுள்ளது.

அந்த வகையில், ஆட்சியில் உள்ள அரசாங்கம் நியாயமான தீர்வினை வழங்குவதற்கான கடப்பாட்டை கொண்டிருக்கின்றது. எமது மக்களின் அபிலாஷைகளை பூர்த்தி செய்கின்ற வகையில் அந்த தீர்வு அமைய வேண்டும். மீளப்பெற முடியாத வகையில் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.

தமிழ் மக்கள் சரித்திர ரீதியாக வாழ்ந்து வருகின்ற வடக்கு, கிழக்கு இணைக்கப்பட்டு உள்ளக சுய நிர்ணய அடிப்படையில் சமஷ்டி அடிப்படையிலான அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும். அக்கருமங்கள் பிரிக்க முடியாத, பிளவுபடுத்தப்படாத ஐக்கிய இலங்கைக்குள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

எம்மை பொறுத்தவரையில், எமது மக்களின் அபிலாஷைகளை பூர்த்தி செய்யாத அர்த்தமற்ற எந்தவொரு தீர்வினையும் ஏற்றுக்கொள்வதில்லை என்பதில் நாம் உறுதியாக உள்ளோம் என்றார்.

## போதைப் பொருள்... (03 ஆம் பக்கத் தொடர்)

பொலிஸாரும் வழங்கிய ஒத்துழைப்பிற்காக கமால் குணரட்ண அவர்களிற்கு தனது நன்றியை தெரிவித்துள்ளார். நாடு அரசியல் ரீதியில் ஸ்திரமற்றதாக குழப்பம் மிக்கதாக மாறுவதை தடுப்பதற்கு அவசியமான ஆதரவை அவர்கள் வழங்கினார்கள் எனவும் கமல் குணரட்ண தெரிவித்துள்ளார்.

## தம்புள்ளையில்... (03 ஆம் பக்கத் தொடர்)

யாழ்ப்பாணத்தில் இருந்து தம்புள்ளைக்கு கஞ்சா கொண்டு செல்லப்படுவதாக பொலிஸ் விசேட பணியக குழுவிற்கு தகவல் கிடைத்ததையடுத்து, தம்புள்ளை தலைமையக பொலிஸ் பரிசோதகர் எஸ்.கே.அல்லெபொல தலைமையில் விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## நாட்டில் ஏற்பட்டுள்ள மருந்து...

நிறுவனங்கள் நாட்டில் மருந்துப் பற்றாக்குறையினால் ஏற்பட்டுள்ள பிரச்சினையை தீர்ப்பதற்கு தேவையான ஆதரவை வழங்கும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். அரசாங்க மருந்து நிறுவனங்களுக்கு 15 பில்லியன் ரூபாவும், இரண்டு அரச வங்கிகளுக்கு 16 பில்லியன் ரூபாவும் உள்ளடங்களாக சுகாதார அமைச்சு 52 பில்லியன் கடனில் உள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

## உலகப் பொருளாதாரத்திற்கு...

கடந்த அக்டோபர் மாதம் சர்வதேச நாணய நிதியம் அறிவித்தது.

மேலும், உலகின் இரண்டாவது பெரிய பொருளாதாரத்தை கொண்டுள்ள சீனா, தனது கொரோனா சுகாதாரக் கொள்கைகளைத் தளர்த்தியதையடுத்து, பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

இதனால் 40 ஆண்டுகளுக்குப் பிறகு முதல்முறையாக பொருளாதார வளர்ச்சி வீதம் குறைந்துள்ளதாக கிறிஸ்டலினா ஜியோஜிவா தெரிவித்தார்.

யுக்ரைன் போரினால் ஐரோப்பிய ஒன்றியத்தின் பொருளாதாரம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள நிலையில், கடுமையான பொருளாதார மந்தநிலைக்கான அறிகுறிகள் தென்படுவதாகவும் அவர் கூறினார்.

## டேவிட் கெமரூன் ஜனாதிபதி...

அலுவலகம் தெரிவித்துள்ளது.

குறித்த சந்திப்பில் தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க ஆகியோரும் இதில் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## வேட்பு மனு ஏற்கும் தினம்...

இதன்போது வேட்பு மனுவை பொறுப்பேற்கும் தினம் குறித்த தீர்மானம் எடுக்கப்படவுள்ளது. இந்த நிலையில், நாளை அது தொடர்பான அறிவிப்பை வெளியிடவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## மொட்டு சின்னத்திலேயே

அத்துடன், உள்ளூராட்சி மன்ற தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மொட்டு சின்னத்திலேயே போட்டியிடும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## சீனாவில் வேகமெடுக்கும்...

தொற்று பரவல் திடீரென வேகமெடுத்துள்ளது.

இதன் எதிரொலியாக இந்தியா, அமெரிக்கா, ஜப்பான் உட்பட பல நாடுகள் சீனாவில் இருந்து பயணிகளுக்கு கட்டாய கொரோனா பரிசோதனை உள்ளிட்ட பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்துள்ளன.

இதனிடையே வருகிற 5 ஆம் திகதி முதல் சீனாவில் இருந்து வரும் அனைத்து பயணிகளும் விமானத்தில் ஏறுவதற்கு முன் கொரோனா பரிசோதனை செய்து கொள்வதை அவுஸ்திரேலியா அரசாங்கம் கட்டாயமாக்கியுள்ளது.

அதேபோல் கனடாவும் சீன பயணிகளுக்கு கொரோனா பரிசோதனை தொடர்பான கட்டுப்பாட்டை விதித்துள்ளது. அங்கு இந்த கட்டுப்பாடு வருகிற 5 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் என கனடா அறிவித்துள்ளது.

## சாரதி அனுமதி பத்திரங்கள்...

படுகின்றன. அவைகள் புதுப்பிக்கப்படும்போது புதிய QR குறியிடப்பட்ட சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை கேட்டல் குறைபாடு உள்ளவர்களுக்கு சாரதி அனுமதிப் பத்திரம் வழங்கும் வேலைத்திட்டம் இந்த வருடம் மார்ச் மாதத்தின் பின்னர் நாடளாவிய ரீதியில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் நிஷாந்த அனுருத்த வீரசிங்க தெரிவித்துள்ளார்.

கேட்டல் குறைபாடுள்ளவர்களுக்கான இலகுரக வாகன சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கும் முன்னோடித் திட்டம் கம்பஹா மாவட்டத்தில் கடந்த வருடம் நவம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

இந்த முன்னோடி திட்டத்தின் கீழ் 75 பேருக்கு பயிலுநருக்கான தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டதாக அவர் கூறியுள்ளார்.

## நடுவானில் மோதிக்கொண்ட...

படுகாயமடைந்துள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

கோல்ட் கோஸ்ட்டின் பிரதான கடற்கரைக்கு அருகில் உள்ள மணல் திட்டில் விமானங்களின் சிதைவுகள் வீழ்ந்ததுடன், நேற்று (02) பிற்பகல் இரண்டு மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்விபத்தின் போது இரண்டு விமானங்களிலும் 13 பேர் பயணித்துள்ளதாகவும், அவர்களில் 4 பேர் உயிரிழந்ததாகவும், மேலும் 3 பேர் படுகாயமடைந்ததாகவும், 6 பேர் இலேசாக காயமடைந்துள்ளதாகவும் அந்நாட்டு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## சட்டவிரோதமாக வந்து சேர்ந்த...

போதே இந்த மருந்து தொகை கைப்பற்றப்பட்டது.

இந்த மருந்துத் தொகையின் பெறுமதி ஒரு கோடி ரூபாவுக்கும் அதிகமாகும்.

இந்தியா, துருக்கி, இத்தாலி உட்பட பல நாடுகளிலிருந்து இந்த மருந்து வகைகள் சட்டவிரோதமாக கொண்டு வரப்பட்டுள்ளன என்பது ஆரம்பகட்ட விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.இந்த சம்பவம் தொடர்பில் தற்சமயம் விரிவான விசாரணைகள் இடம்பெற்று வருவதாக அதிகார சபையின் உணவு மற்றும் மருந்து பரிபாலன அதிகாரி அமித் பெரேரா தெரிவித்தார்.

## குறைந்த வருமானமுடைய...

தொகுதிகளை நிர்மாணிக்க எதிர்பார்த்துள்ளதாக வீடமைப்பு அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு 1,888 வீடுகளும், கொட்டாவவில் நிர்மாணிக்கப்படும் 108 வீடுகள் கலைஞர்களுக்கும் வழங்கப்படவுள்ளன.

கடந்தாண்டு சீனாவுடன் ஒப்பந்தம் செய்யப்பட்ட 552 மில்லியன் யுவான் கடனின் கீழ் கட்டுமான பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தங்கத்தின் விலையில்...

24 கரட் தங்கப் பவுண் ஒன்று தற்போது நாட்டில் 187,300 ரூபாவாக பதிவாகியுள்ளது. அதேபோல 22 கரட் தங்கப் பவுண் ஒன்று 171,700 ரூபாவாகவும் 21 கரட் தங்கப் பவுண் ஒன்று 163,900 ரூபாவாகவும் நேற்றைய தினம் பதிவாகியுள்ளது.

எனினும், ஆபரணத் தங்கத்தின் விலை இந்த விலைகளில் இருந்து மாற்றம் பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.இதேவேளை, கடந்த மாதங்களில் 22 கரட் தங்கப் பவுண் ஒன்று வரலாறு காணாத வகையில் உயர்ந்து 200,000 ரூபாவை எட்டியிருந்தது.எனினும், அடுத்து வந்த சில நாட்களில் தங்கத்தின் விலை குறைவடைந்திருந்தாலும், தற்போது மீண்டும் தங்கத்தின் விலையில் அதிகரிப்பு பதிவாகி வருகின்றது.

## நாட்காட்டி அச்சிடுதல்...

வெளியிடுவதும், பிற பொருட்களை அச்சிடுவதும் கனவாகி விட்டது. அதிகாரிகள் நிலைமைகள் தொடர்பில் கவனம் செலுத்தி தீர்வு காண வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

# திருக்காட்சிப் பெருவிழா






கத்தோலிக்கத் திருச்சபை எதிர்வரும் ஜனவரி 8ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆண்டவரின் திருக்காட்சி திருவிழாவையும் மூன்று அரசர்கள் திருவிழாவையும் கொண்டாடுகின்றது.

இறைவன் தம்மையே இந்த உலகுக்கும் நமக்கும் குழந்தை உருவில் வெளிப்படுத்திய திருநாளாகவும் ஞானிகள் அல்லது மூன்று இராஜாக்கள் இயேசு பாலனைத் தேடி தரிசித்து பரிசுப் பொருட்களை வழங்கி அவரை வணங்கிய தினமாகவும் இந்த திருக்காட்சி திருவிழா சிறப்பிக்கப்படுகிறது.

வரலாற்றையே படைத்த இறைவன் வரலாற்றில் காலம், இடம் இவற்றிக்கு உட்பட்டவராக பிறந்தார். இவர் இஸ்ரயேல் குலத்தில் பிறந்திருந்தாலும் தன்னை எல்லா மக்களுக்கும் 'தானே இறை மீட்பர்' என்று புறவினத்தாருக்கும் வெளிப்படுத்தி தன்னுடைய மீட்பு திட்டத்தில் பங்கு கொள்ள அழைப்பு விடுக்கிறார்.

கிறிஸ்து பிறப்பு விழாவினைக் கொண்டாடிய ஒரு சில நாட்களுக்குப் பின் நாம் திருச்சபையோடு இணைந்து திருக்காட்சி அல்லது மூன்று அரசர்கள் பெருவிழாவினைக் கொண்டாடுகிறோம்.

இந்த நாள் இயேசு தன்னையே உலகிற்கு ஒளியாக வெளிப்படுத்திய நினைவு நாள். 'உலகின் மீட்பர்' (யோவா 4:42) தான் உதித்த யூத குலத்திற்கும், நாட்டிற்கும் அப்பாற்பட்டு, 'உலகனைத்திற்கும் உரியவன் நான்' எனப் பறைசாற்றும் நாள். புறவினத்தார்க்கு மூடியிருந்த மீட்பின் கதவுகள் அன்பின் இறைவன் கிறிஸ்து இயேசுவால் திறக்கப்பட்ட நாள் இந்நாள். நம் வாழ்வில் இவ்விழாவினை நம்பிக்கையின் அடிக்கல் நாட்டுவிழா எனச் சொல்லலாம். ஏனென்றால் இன்று இறைவன் தன்னையே நமக்குக் குழந்தை உருவில் வெளிப்படுத்துகின்றார்.

பழைய ஏற்பாட்டில் இறைவாக்கினர்களால் முன்னறிவிக்கப்பட்டவர்கள் 'இயேசு என்னும் ஒளியைத் தேடி' பல நாடுகளில் இருந்தும் "உன் உதயக் கதிர்நோக்கி நடைபோடுவர்" (எசா 60:3) என்று முன்மொழியப்பட்டதற்கு ஏற்ப மூன்று ஞானிகளும் இயேசுவைத் தேடி சென்றார்கள்.

மாந்தர் அனைவரும் இறைவனைத் தேடி வந்து அவரைக் கண்டுகொள்வார்கள் என்கிற கருத்தைத்தான் இத் திருவிழாவின் மூன்று வாசகங்களும் வலியுறுத்துகின்றன. கிறிஸ்து பிறந்தவுடன் வெட்ட வெளியில் கடுங்குளிரில் நடுங்கிக்கொண்டு சாமக்காவல் புரிந்துக்கொண்டிருந்த இடையர்களுக்குத்தான் முதன் முதலாக வானதூதர் தோன்றி நற்செய்தயை அறிவித்தார்.

நற்செய்தியை கேட்ட இடையர்கள் தேடிச் சென்று சந்தித்தனர். விண்மீன் அடையாளத்தைக் கண்ட கீழ்த்திசை ஞானிகள் குழந்தை இயேசுவை தேடிச் சென்று பொன்னும் சாம்பிராணியும் வெள்ளைப் போளமும் காணிக்கையாக செலுத்தி வணங்கி மகிழ்ந்தனர். இவ்வாறு



விண்மீனின் அடையாளத்தை வைத்து தேடிச் சென்றதால் அவர்களின் தேடல் தனித்துவம் பெறுகிறது.

ஞானிகள் அரசர்கள் என்று உலகத்தால் போற்றக்கூடியவர்கள். அப்படிப்பட்டவர்கள் சிறு குழந்தையிடம் நெடுஞ்சாண்கிடையாய் விழுந்து வணங்குகிறார்கள் (மத் 2:11). இயேசு கிறிஸ்து என்ற ஒளியை வாழ்வில் காண ஆர்வத்தோடு தேடிச் சென்று கண்டார்கள்.

மனதில் செருக்கில்லாமல், ஆணவமில்லாமல் தாழ்ச்சியோடும் பணிவோடும் இயேசுவை தேடுகின்றபோது உன்னத ஒளியாம் இயேசுவை நாமும் அந்த ஞானிகளைப் போல கண்டடைவோம்.

ஒளியானது பாவ இருளை சுட்டெரிக்கும் தீப்பிழம்பாகும். இருளை புறங்காணச் செய்யும். இருண்ட இதயத்தில் நம்பிக்கை தீபத்தை ஏற்றும். பகைமையை நீக்கி பாசத்தை பெருக்கும். இப்படிப்பட்ட ஒளியாய் ஞானிகள் இயேசுவைக் கண்டு வணங்கி மகிழ்ந்தனர். புறவினத்து ஞானிகள் (மத் 2:11). ஆனால் ஏரோது, ஞானிகள் "யூதர்களின் அரசராக பிறந்திருக்கிறவர் எங்கே?.... அவரை நாங்கள் வணங்க வந்தோம்" என்ற வார்த்தையை தவறாகப் புரிந்துகொண்டு இயேசுவைக் கொல்வதற்கு திட்டம் தீட்டினான். இங்குதான் ஒளியில் இருளின் செயல்பாடு தெரிகிறது.

அ. இராயப்பன்...

ஏரோது தவறான எண்ணத்தோடு தேடியதால் இயேசுவை அவரால் காண முடியவில்லை. ஆனால் எவ்வளவு கஷ்டங்கள், துன்பங்கள், இன்னல்கள் மத்தியிலும் விடாமுயற்சியோடும தன்னம்பிக்கையோடும் இயேசுவை ஞானிகள் தேடினார்கள். ஒளியாம் கிறிஸ்துவை கண்டார்கள்.

கிறிஸ்து என்னும் வாழ்வின் ஒளி திருமுழுக்குப் பெற்ற நம் ஒவ்வொருவருக்குள்ளும் இருக்கிறது. ஆனால் நமது சுய நலப்போக்கினால் தான், தனக்கு, என்னுடையது, எனக்கு என்ற பேராசை எண்ணத்தினால் வளர்ந்துவரும் அறிவியல் மாற்றத்தினால், நுகர்வு கலாச்சாரத்தினால், உள் ஒன்றும் புறம் ஒன்றும் பேசுவதினால், மற்றவர்களின் வளர்ச்சிக்கு தடையாக இருப்பதினால் இருளின் ஆதிக்கம் வாழ்வின் ஒளியை மறைத்துக் கொண்டுள்ளது.

எனவே கிறிஸ்து என்னும் ஒளி நமக்குள் இருக்குமானால் நாம் ஒளியின் மக்களாக, அன்பின் மக்களாக, சமாதானத்தின் மக்களாக இருப்போம். நம்மில் இருக்கும் தீய எண்ணங்கள், தீய குணங்கள், மனக்கவலைகள் போன்றவற்றை நீக்கி இடையர்களைப் போல, ஞானிகளைப் போல நம்பிக்கையோடு இயேசு என்னும் ஒளியைத்தேடுவோம். வாழ்வு பெறுவோம். எனவே நம்முடைய உள்ளத்திலும் இல்லத்திலும் இயேசு என்னும் ஒளியைக் கண்டு பெருமகிழ்ச்சியடைவோம், வாழ்வு பெறுவோம்.

## "ஆண்டவரே, நான் உம்மை அன்பு கூருகிறேன்"

## திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட் அவர்கள் இறப்பதற்கு முன் கூறிய இறுதி வார்த்தைகள்



*"ஆண்டவரே, நான் உம்மை அன்புகூருகிறேன்" என்பதே, முன்னாள் திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட் அவர்கள் இறப்பதற்கு சில மணிநேரங்களுக்குமுன் இரவில் கூறிய கடைசி வார்த்தைகள் என்று, அவரின் தனிப்பட்ட செயலரான பேராயர் Georg G□nsweinதெரிவித்துள்ளார். .*

*இத்திருத்தந்தையின் இதயத்துக்கு மிகவும் நெருக்கமான அவரது அன்புக்குரிய இயேசுவைத் தேடியதையே இச்சொற்கள் நினைவுபடுத்துகின்றன என்றும், ஜோசப் இராட்சிங்கர் என்ற முன்னாள் திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட் அவர்களின் அருள்பணித்துவப் பணியை அடையாளப்படுத்துவது இவையே என 2016ஆம் ஆண்டில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், அத்திருத்தந்தை பற்றி நினைவுகூர்ந்தார் என்றும் பேராயர் G□nswein குறிப்பிட்டுள்ளார்.*



*டிசம்பர் 31 அதிகாலை 3.00 மணியளவில் திருத்தந்தை 16ம் பெனடிக்ட் அவர்கள் இவ்விறுதி வார்த்தைகளை, தெளிவாக முணுமுணுத்தபோது அவரைக் கவனித்துக்கொண்டிருந்த தாதியர் கேட்டார் என்றும், அவரது வாழ்வின் இறுதிநேரங்களில் உடன்உழைப்பாளர்களும், உதவியாளர்களும் அவரைப் பராமரித்து வந்தனர் என்றும் பேராயர் G□nswein அவர்கள் தெரிவித்துள்ளார்.*

*"ஆண்டவரே, நான் உம்மை அன்புகூர்கிறேன்" என்ற வார்த்தைகளை முன்னாள் திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட் அவர்கள் கூறியபோது, ஜெர்மன் மொழி தெரியாத ஒரு தாதியர் மட்டுமே அங்கு இருந்தார் என்றும், இச்சொற்களை மெல்லிய குரலில் இத்தாலிய மொழியில் தெளிவாக விளங்கக்கூடிய முறையில் அவர் முணுமுணுத்தார் என்றும் அந்நேரத்தில் நான் அங்கு இல்லை என தழுதழுத்த குரலில் தெரிவித்த பேராயர் G□nswein அவர்கள், அதற்குப் பிறகு திருத்தந்தையால் எதுவுமே பேசமுடியவில்லை என்றும்தெரிவித்துள்ளார்.*

*"ஆண்டவரே, நான் உம்மை அன்புகூர்கிறேன்" என்ற வார்த்தைகள், முன்னாள் திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட் அவர்கள் தன்னைப் படைத்தவரை முகமுகமாய்த் தரிசிக்க பல ஆண்டுகளாகத் தன்னையே தயாரித்துவந்த தன் இரத்தின சுருக்கமாய் உள்ளன என்றும், 2016ஆம் ஆண்டு ஜூன் 26ஆம் திகதி அத் திருத்தந்தையின் அருள்பணித்துவ வாழ்வின் 65வது ஆண்டு நிறைவின்போது, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் அத்திருத்தந்தையின் இப் பண்பையே கோடிட்டுக் காட்டினார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.*

மேரி தெரேசா...

## கருணை என்பது உரையாடல் கலாசாரத்தின் முக்கிய அங்கம்



### திருத்தந்தை பிரான்சிஸ்

கருணை என்பது உரையாடல் கலாச்சாரத்தின் ஒரு முக்கியமான அங்கமாகும். அமைதியாக, உடன்பிறந்த உறவில் வாழ உரையாடல் இன்றியமையாததாக அமைகின்றது.

.காலத்தின் நிறைவில், மனிதராக உருவெடுத்த கடவுள் உயரமான வானத்திலிருந்து உலகத்திற்கு வரவில்லை. மாறாக மரியாளிடமிருந்து பிறந்தார். அவர் ஒரு சாதாரண பெண்ணுக்குப் பிறந்தவர் அல்ல, பெண்ணிடம் இருந்து பிறந்தவர்.

கடவுள் அவரைப் பயன்படுத்தவில்லை மாறாக அவரது உடலைப் பெற விரும்பி ஆகட்டும் என்று அன்னை மரியாளின் அனுமதி பெற்று மனுஉரு எடுத்தார். ஜென்மப்பாவமின்றிப் பிறந்த மரியாவின் கருவிலிருந்து, கருணை, அன்பு, உண்மை, நம்பிக்கையால் நிறைக்கப்பட்ட, பாவத்திலிருந்து விடுதலை பெற்ற மனித குலத்தின் கர்ப்பகாலப் பயணம் தொடங்கியது.

நல்ல அழகான, மற்றும் உண்மையான மனிதநேயம், கடவுளின் சாயலினாலும் விருப்பத்தினாலும் உருவாக்கப்பட்டுள்ளது. இச்சாயல் அன்னை மரியாளின் சம்மதத்துடன், அவர் வழியாக இன்றும் என்றும் எப்போதும் சுதந்திரமாக, இலவசமாக மரியாதையாக அன்பாக வழங்கப்படுகின்றது.

உலகிலும், வரலாற்றிலும் நுழைவதற்குக் கடவுள் தேர்ந்தெடுத்த இந்த வழி அவர் வருகையைப் போலவே மிகவும் சிறப்பானது. அன்னை மரியாவின் தெய்வீகத் தாய்மை, கன்னித் தாய்மை, கனிவான கன்னித்தன்மை போன்றவைகள் கடவுளின் மிகுந்த மரியாதையையும் நமது மீட்பையும் வெளிப்படுத்தும் வழியாக அமைகின்றது.

புனித அகுஸ்தீனார் கூறுவது போல, நம்மைப் படைத்தவர், நம் ஒத்துழைப்பு இல்லாமல் நம்மை மீட்க விரும்பவில்லை. அவர் நம்மைக் மீட்பதற்குத் தேர்ந்தெடுத்த வழியில் புதிய, சுதந்திரமான, சமத்துவமான மனிதநேயத்தைத் தொடர்ந்து உருவாக்க, அவரைப் பின்தொடர நம்மையும் அழைக்கிறார். சமத்துவமான மனிதநேயம் என்னும் வார்த்தை நமது வாழ்வின் நடைமுறையாக மாறி, மாண்போடு வாழும் மனித நற்பண்புகளின் பன்முகத்தன்மையைப் பெறுகிறது. இந்த நற்பண்புகளில் ஒன்றான கருணை, உடன்பிறந்த உறவு, மற்றும் சமூக நட்பை வளர்க்கும் ஒரு வாழ்க்கை முறையாக அமைகின்றது.

கருணையைப் பற்றி பேசுகையில், டிசம்பர் 31 ஆம் தேதி காலை நம்மை விட்டு பிரிந்த அன்பான முன்னாள் திருத்தந்தை 16 ஆம் பெனடிக்ட் அவர்களை என் மனம் நினைவுகூர்கின்றது. அவர் உயர்வானவர், அன்பானவர் என்பதை எண்ணி, திருஅவைக்கும் உலகிற்கும் அவரைக் கொடையாகக் கொடுத்தக் கடவுளுக்கு நன்றி கூறுகின்றேன்.

அவர் செய்த அனைத்து நன்மைகளுக்காகவும், குறிப்பாக, அவரது நம்பிக்கை மற்றும் செபத்தின் சான்றுள்ள வாழ்விற்காகவும் கடவுளுக்கு நன்றி செலுத்துகின்றேன். திருஅவையின் நன்மைகளுக்காக அவர் செய்த தியாகம், அவரது பரிந்துரைகளின் மதிப்பு மற்றும் வலிமையை கடவுள் மட்டுமே அறிவார்.

கருணை என்பது உரையாடல் கலாச்சாரத்தின் ஒரு முக்கியமான அங்கமாகும். அமைதியாக, உடன்பிறந்த உறவில் வாழ உரையாடல் இன்றியமையாததாக அமைகின்றது. ஒருவருக்கொருவர் செவிசாய்த்து, ஒருவரையொருவர் புரிந்துகொண்டு ஒருவரையொருவர் முன்னோக்கிச் செல்ல முயற்சி செய்யுங்கள். பொறுமையான உரையாடல்களால் குடும்பங்களையும் சமூகங்களையும் ஒன்றாக வைத்திருக்கும் பல தாராள மனம் கொண்ட நபர்களும் இவ்வுலகில் வாழ்ந்துகொண்டிருக்கின்றார்கள். நிலையான மற்றும் உறுதியான உரையாடல்கள் தலைப்புச் செய்திகளை உருவாக்காது, ஆனால், உலகம் அமைதியாக சிறப்பாக வாழ உதவுகின்றது. என்றும் திருத்தந்தை தெரிவித்தார்.

மெரினா ராஜ் ...

## மன்னாரில் புதுவருட சிறப்புத் திருப்பலி







மன்னார் மறைமாவட்ட புனித செபஸ்தியார் பேராலயத்தில் ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையின் தலைமையில் புத்தாண்டு நள்ளிரவு திருப்பலி நடைபெற்றது. ஆயருடன் அருட்தந்தையர்கள் இணைந்து கூட்டுத் திருப்பலி நிறைவேற்றப்பட்டதுடன் கலந்து கொண்ட விசுவாசிகளையும் படத்தில் காணலாம். படங்கள்: மன்னார் குறூப் நிருபர்

## மட்டக்களப்பு சீயோன் தேவாலயத்தில் புதுவருட ஆராதனை





புதுவருட தினத்தன்று மட்டக்களப்பு சீயோன் தேவாலயத்தில் புத்தாண்டினை வரவேற்கும் நள்ளிரவு ஆராதனை நடைபெற்றது. ஆலயத்தின் பிரதம போதகர் ரொஷான் மகேசன் நற்செய்தி வழங்குவதையும் கலந்து கொண்ட விசுவாசிகளையும் படங்களில் காணலாம்.

தினகரன் THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834

தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279

பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் மார்கழி மாதம் 19ஆம் நாள் செவ்வாய்க்ழமை

ஹிஜ்ரி வருடம் 1444 ஜுமாதல் ஆகிராஹ் பிறை 08


## குறள் தரும் சிந்தனை



உறின்நட்டு அறின்ஙருஉம் ஒப்பிலார் கேண்மை
பெறினும் இழப்பினும் என்

தமக்குப் பயன் கிடைக்கும் போது நண்பராக இருந்துவிட்டு, பயனில்லாதபோது பிரிந்து விடுகின்றவர்களின் நட்பு, இருந்தால் என்ன? இழந்தால்தான் என்ன?

# போதைவஸ்து பாவனை நாட்டில் அதிகரிப்பது ஆபத்தான அறிகுறி!

நாட்டில் போதைப்பொருள் பாவனை அதிகரித்துள்ளது. இதனை தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபை சுட்டிக்காட்டியுள்ளது. இந்நாட்டில் போதைப்பொருள் கட்டுப்பாட்டுக்கான அதிகாரபூர்வ நிறுவனமாக இச்சபை விளங்கி வருகிறது.

இந்நிறுவனத்தின் அறிவிப்பின்படி, நாட்டில் ஒரு இலட்சத்து 20 ஆயிரம் பேர் ஹெரோயின் போதைப்பொருளுக்கு அடிமையானவர்களாகவும், 04 இலட்சம் பேர் கஞ்சா பாவனையாளர்களாகவும் உள்ளனர். அதேநேரம் ஐஸ் போதைப்பொருள் பாவனையிலும் சடுதியான அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ள தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபையின் தலைவர் ஷக்ய நாணயக்கார, 'கடந்த வருடம் (2022) ஐஸ் போதைப்பொருள் பாவனையினால் ஏற்பட்ட உபாதைகளுக்காக சுமார் 90 ஆயிரத்து 100 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர்' என்றும் தெரிவித்துள்ளார்.

அத்தோடு 'ஹெரோயின், ஐஸ் உள்ளிட்ட போதைப்பொருட்களின் பாவனையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ள போதிலும் சிகரெட் மற்றும் மதுபாவனை அளவு குறைவடைந்துள்ளது' என்பதையும் அவர் குறிப்பிடத் தவறவில்லை.

இதன் ஊடாக அவர் இரண்டு விடயங்களை எடுத்துக் கூறியுள்ளார். அவற்றில் ஒன்று சிகரெட் மற்றும் மதுபாவனை அளவில் குறைவு ஏற்பட்டிருப்பதாகும். இது சாதகமான நம்பிக்கை தரும் செய்தி என்பதில் ஐயமில்லை. அதனால் அவை தொடர்பிலான விழிப்புணர்வை தொடர்ந்தும் முன்னெடுக்க வேண்டிய தேவையை இது வலியுறுத்தி நிற்கின்றது.

அதேநேரம் ஹெரோயின், ஐஸ் உள்ளிட்ட போதைப்பொருட்களின் பாவனையிலும் அவற்றுக்கு அடிமையாகி இருப்பவர்களின் எண்ணிக்கையிலும் அதிகரிப்பு ஏற்பட்டிருப்பது ஆரோக்கியமான நிலைமை அல்ல. இப்போதைப்பொருட்களின் பாவனையினாலும் அவற்றுக்கு பலர் அடிமையாவதாலும் உடல், உள ரீதியாகவோ சமூக ரீதியாகவோ எவ்வித நன்மையுமே கிடைக்கப் பெறுவதில்லை. அவை தனிப்பட்ட வாழ்வில் மாத்திரமல்லாமல் சமூக வாழ்விலும் தீங்குகளையும் கெடுதல்களையும் தேடிக் கொண்டு வரக்கூடியவை. மனித ஆரோக்கியத்திற்கோ, சமூக நலன்களுக்கோ எவ்விதத்திலும் நன்மைகள் பயக்காத இப்போதைப்பொருட்களின் பாவனையில் அதிகரிப்பு ஏற்படுவது சமூக ஆர்வலர்கள் மத்தியில் ஆச்சரியத்தையும் கவலையையும் ஏற்படுத்தியுள்ளது.

தனிப்பட்ட வாழ்வுக்கும் சமூக வாழ்வுக்கும் நன்மைகளைப் பெற்றுத் தராத இப்போதைப்பொருட்கள் ஆரோக்கிய ரீதியில் பாதிப்புகளையும் உபாதைகளையும் மாத்திரமல்லாமல் சமூக ரீதியில் சீரழிவுகளையும் தேடித்தரக் கூடியனவாக இருப்பதற்கு இப்போதைப் பொருட்களுக்கு அடிமையாகியுள்ளவர்களே நல்ல சாட்சியங்களாக விளங்குகின்றனர்.

மேலும், இந்நாட்டில் ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்டோர் ஹெரோயின் பாவனைக்கு அடிமையானவர்களாக இருப்பதும் சாதாரணமான விடயமல்ல. நாட்டின் சனத்தொகையின்படி ஹெரோயின் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகியுள்ளவர்களின் எண்ணிக்கை அதிக ஆபத்துக்கள் நிறைந்ததாகவே உள்ளது. அத்தோடு கஞ்சா மற்றும் ஐஸ் பாவனைக்கு அடிமையாகி இருப்பவர்களின் எண்ணிக்கையும் சாதாரணமாக நோக்கக்கூடிய மட்டத்தில் இல்லை. இவை நாட்டினதும் சமூகத்தினதும் நலன்களுக்கு கெடுதல்களையும் தீங்குகளையும் நிச்சயம் கொண்டு வரக்கூடியதாகவே இருக்கும்.

அதனால் போதைப்பொருள் பாவனையில் இருந்து தூரமாவதும் அதனைத் தவிர்த்து கொள்வதும் இன்றியமையாததாகும். அதுவே தனிப்பட்ட மற்றும் சமூக வாழ்வுக்கு பெரிதும் நன்மை பயக்கக் கூடியதாக இருக்கும். அதன் காரணத்தினால் இப்போதைப்பொருட்களின் பாவனையைத் தவிர்த்துக் கொள்வதில் ஒவ்வொருவரும் கூடுதல் கவனம் செலுத்தத் தவறலாகாது.

இதேவேளை சிகரெட் மற்றும் மதுபாவனையின் அளவில் குறைவு ஏற்பட்டுள்ள போதிலும், போதைப் பொருட்களின் பாவனையில் அதிகரிப்பு ஏற்பட்டிருப்பதற்கு காரணங்கள் இல்லாமலும் இல்லை. அவற்றில் சிகரெட் மற்றும் மதுப்பாவனைக்கு எதிராக முன்னெடுக்கப்படும் விரிவான விழிப்புணர்வு அறிவூட்டல் வேலைத்திட்டங்கள் பெரிதும் பயனளித்திருப்பது தெளிவாகிறது. குறிப்பாக சிகரெட் மற்றும் மதுபாவனையால் உடல் உள ரீதியாக ஏற்படும் உபாதைகள், கெடுதல் உட்பட சமூகரீதியிலான பாதிப்புகள் குறித்தும் பரந்த அடிப்படையில் அறிவூட்டப்படுகின்றது.

இவ்வாறான விழிப்புணர்வு அறிவூட்டல் நடவடிக்கைகள் ஐஸ், ஹெரோயின் உள்ளிட்ட போதைப்பொருட்களுக்கு எதிராகவும் முன்னெடுக்கப்பட வேண்டிய தேவை காணப்படுகிறது. இதற்கு சிகரெட் மற்றும் மது பாவனையின் அளவில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி நல்ல முன்னுதாரணமாகும். அதன் ஊடாக போதைப்பொருட்களின் பாவனையிலும் வீழ்ச்சி ஏற்பட வழிவகுக்கும். அது உடல் உள ரீதியிலான தீங்குகளை மாத்திரமல்லாமல் சமூக ரீதியிலான சீரழிவுகளையும் தவிர்த்துக் கொள்ளப் பெரிதும் துணைபுரியக்கூடியதாக இருக்கும். அதுவே இப்போதைய தேவையாகும்.

editor.tkn@lakehouse.lk

# ஸ்ரீ ஸ்ரீ ராதாகிருஷ்ண ஆலயத்தின் மஹாகும்பாபிஷேகம் விரைவில் நிகழ வேண்டுமென பக்தர்கள் எதிர்பார்ப்பு

கொழும்பு, கொட்டாஞ்சேனை புதுச்செட்டித் தெருவையும், ஜம்பட்டா வீதியையும் இணைத்து பிரமாண்டமாக உருவாகிக் கொண்டிருக்கும் ஸ்ரீஸ்ரீ ராதாகிருஷ்ண ஆலய மகாகும்பாபிஷேகம் நடைபெறும் நாளை மக்கள் பக்திபூர்வமாக எதிர்பார்த்துள்ளனர்.

ராதாகிருஷ்ண ஆலயத்தின் மூலஸ்தானத்தில் ராஜகோபாலர் வடிவத்தில் ராதையுடன் இணைந்த ராதா ராஜ கோபாலரும், ஜகந்நாதர், பலராமர், சுபத்ரா, கிருஷ்ண சைதன்யர் கௌரநித்தாய் ஆகியோரும் எழுந்தருளுவர். மூலமூர்த்தியாக விளங்கும் ராஜகோபாலர், இந்தியா திருமலை திருப்பதி தேவஸ்தானத்தில் இருந்து 1982 ஆம் ஆண்டு வருகை தந்து, பிரதிஷ்டா சிரோன்மணி ஸ்ரீலஸ்ரீ விஸ்வநாத குருக்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டு பக்தர்களுக்கு வாத்சல்ய குழந்தையாக ஆட்சி புரிந்து 1990ஆம் ஆண்டு அங்கிருந்து வருகை தந்த ஸ்ரீமதி ராதா ராணியுடன் இணைந்து ராதா ராஜா கோபாலராக திருக் கல்யாணம் கண்டு அருளினார்.

இதையும் விஸ்வநாதக் குருக்களே நிகழ்த்தி வைத்தார். ராதா ராஜகோபாலரிடம் ஈடுபாடு கொண்ட பக்தர்கள் அநேகர் வெளிநாடுகளில் வசித்து வருகிறார்கள். அவர்கள் ஆலயத்துடன் தொடர்பில் இருக்கின்றனர். ஜகந்நாத், சுபத்ரா, பலராம் மூவரும் ஜகந்நாத் ஷேத்திரத்திலிருந்து வரவழைக்கப்பட்டு, 1996ஆம் ஆண்டு ஸ்ரீல பிரபுபாதாவின் நூற்றாண்டு விழாவன்று பிரதிஷ்டை செய்யப்பட்டு, பீடத்தில் எழுந்தருளினர்.

1999 ஆம் ஆண்டு முதன் முதலாக கொழும்பு புதுச் செட்டி தெருவில் இருந்து புறப்பட்டு வெள்ளவத்தை



இ ராமகிருஷ்ண மிஷன் மண்டபம் வரை சென்று, அங்கு நான்கு நாட்கள் தங்கியிருந்து மீண்டும் வருகை புரிந்தனர். நாட்டில் அமைதி வேண்டி நடாத்தப்பட்ட இந்த இரத யாத்திரை, தொடர்ந்து 2017ஆம் ஆண்டு வரை விமர்சையாக நடத்தப்பட்டு வந்தது. எதிர்வரும் காலத்தில் பகவான் அகிலாண்ட நாயகன் திருவருளுடன் கும்பாபிஷேகம் கண்டு, ஸ்திரமாக நிலை கொண்ட பின், இந்த இரத யாத்திரை தொடர்ந்து நிகழ வேண்டும் என்பதே பக்தர்களின் ஆசையும் எதிர்பார்ப்புமாகும்.

புதுச்செட்டித்தெரு வாயில் வழியாக வரும்போது முதலில் காண்பது ஆஞ்சநேயர் திருவுருவம். அவரைப் பார்த்து திரும்பும் பொழுது, இராமர் சந்நிதி காணப்படுகின்றது. இராமர் சந்நிதிக்கான திரு உருவங்களும் வெங்கடேஸ்வரர் சந்நிதிக்கான திருவுருவங்களும் கட்சிலா விக்கிரங்களாக இந்தியாவிலிருந்து வருகைபுரிந்து இங்கு தானிய வாசம் செய்து வருகின்றனர்.

புதிதாக அமையும் இந்த ஆலயத்தின் தற்போதைய நிலை பற்றி இந்த ஆலய வடிவமைப்பாளர் விஷ்வ ஸ்ரீ சந்தனகுமார் ஸ்தபதி பல தகவல்களைத் தெரிவித்தார். அதன்படி கோயிலின் பிரதான கோபுரம் 61 அடி உயரத்தில் அமைகிறது. 7 தலங்கள் (நிலைகள்) கொண்ட கோபுரம் பூர்த்தி அடைந்துள்ளது. இவற்றுக்கான வர்ணப்பூச்சு வேலைகளும் நிறைவடைந்து விட்டன.

பிரதான மண்டபத்தில் பகவானின் தசாவதார வடிவங்கள் காட்சியளிக்கின்றன. ஸ்ரீ ராமபிரான், ஸ்ரீவெங்கடேஸ்வரர் மூர்த்திகள் நிலைகொள்ளும் ஆலயங்களின் விமானங்கள் அமைக்கும் வேலைகள் நடைபெற்று வருகின்றன. இன்னும் நில அமைப்பு வர்ணம் தீட்டல் போன்ற பல வேலைகள் உள்ளன. பக்தர்களின் உதவிகளும் எதிர்பார்க்கப்படுகின்றன. 2023 ஆம் ஆண்டு மத்திய பகுதியில், எப்படியாவது மகாகும்பாபிஷேகத்தை நிகழ்த்த வேண்டும் என்னும் உறுதியுடன் வேலைகள் தொடர்கின்றன.

இத்திருபணியில் பக்தர்கள் அனைவரும் பங்கு கொண்டு இறை அருளை பெற்றுக்கொள்ளுமாறு சந்தன குமார் ஸ்தபதியும் ஆலய பக்தர்களும் வேண்டுகோள் விடுக்கின்றனர். ஹரே கிருஷ்ணா.

**கிருஷ்ணபிரியன்**
**ஸ்ரீஸ்ரீ ராதாகிருஷ்ண ஆலயம்**

# மனிதாபிமான, மேம்பாட்டு உதவிகள் வழங்கும் நாடுகள் பட்டியலில் சவூதி அரேபியா முதலிடம்

குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளின் வளர்ச்சிக்கான உத்தியோகபூர்வ உதவிகளை (மனிதாபிமான மற்றும் மேம்பாடு) வழங்கும் நாடுகள் பட்டியலில் சவூதி அரேபியா முதலிடத்தைப் பெற்றுள்ளதாக இலங்கைக்கான சவூதி அரேபிய தூதுவர் ஹாலித் ஹமூத் அல் கஹ்தானி தெரிவித்துள்ளார்.

பிரான்ஸ் நாட்டின் பாரிஸை தளமாகக் கொண்ட பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டுக்கான அமைப்பின் (OECD) வளரச்சிக்கான உதவிக்குழு இதனை உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:

பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டுக்கான அமைப்பின் (OECD) வளர்ச்சிக்கான உதவிக்குழு விடுத்துள்ள அறிக்கையில், 2021 ஆம் ஆண்டில் குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளின் வளர்ச்சிக்கான உத்தியோகபூர்வ உதவிகளை (மனிதாபிமான மற்றும் மேம்பாடு) வழங்கும் நாடுகளில் சவூதி அரேபியா 7.12 பில்லியன் அமெரிக்க டொலர்களை நன்கொடையாக வழங்கி முதலிடத்தைத் தக்கவைத்துக் கொண்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளது.

இந்த உதவித்தொகையானது சவூதி



அரேபியாவின் மொத்த தேசிய வருமானத்தில் 1.05% ஆகும். மேலும் இத்தொகை, உதவி வழங்கும் நாடுகள் தங்களது மொத்த தேசிய வருமானத்தில் 0.7% என்ற தொகையை மேற்குறிப்பிட்ட நாடுகளின் வளர்ச்சிக்காக உத்தியோகபூர்வ உதவியாக ஒதுக்க வேண்டும் என்ற ஐக்கிய நாடுகள் சபையால் நிர்ணயிக்கப்பட்ட இலக்கை விடவும் அதிகமாகும்.

இரு புனிதத்தலங்களின் பாதுகாவலர், மன்னர் சல்மான் பின் அப்துல் அசிஸ் அல்சவூத் மற்றும் பட்டத்து இளவரசரும் பிரதமருமாகிய இளவரசர் முஹம்மது பின் சல்மான் பின் அப்துல் அசிஸ், ஆகியோரின் வழிகாட்டல்கள், அனைத்து தகுதியுடனும் உரிமையுடனும் சர்வதேச மனிதாபிமான நடவடிக்கைகளில் சவூதி அரேபியாவை முன்னணியில் வைத்திருக்கும் இம்மாபெரும் சாதனைக்கு பங்களிப்புச் செய்துள்ளது.

அவ்வாறே சவூதி அரேபியா அதன் வரலாறு முழுவதும் கஷ்டத்தில் வாடுபவர்களுக்கு உதவுவதற்கும், அவ்வாறானவர்கள் எங்கிருந்தாலும் அவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கும் நன்னோக்குடன் உதவிக்கரம் நீட்டும் ஒரு கருணையுள்ள நாடாக தொடர்ந்தும் செயற்பட்டு வருகிறது. மேலும் புத்திசாதுர்யமும் தூரநோக்கும் கொண்ட அந்நாட்டின் தலைமைகள், தாராள மனப்பான்மை கொண்ட அந்நாட்டு மக்களின் நிலையான உயர்பெறுமானங்களைப் பிரதிபலிக்கும் அதே உன்னத அணுகுமுறையில் இந்நடவடிக்கைகள் மேலும் தொடர்கிறது. மேலும் விதிவிலக்கான மற்றும் தொடர்ச்சியான சாதனைகள் சவூதி அரேபியாவின் 'விஷன் 2030' எனப்படும் மூலோபாய நோக்கின் விளைவாகவே கருதப்படுகிறது.

பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டு அமைப்பின் (OECD), 2021 ஆம் ஆண்டுக்கான தரவுகளின்படி, மேற்படி குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளின் மனிதாபிமான நடவடிக்கைகள், உணவுப் பாதுகாப்பு, தங்குமிடம், கல்வி, நீர், சுற்றுச்சூழல் மற்றும் சுகாதாரம் போன்ற மிக முக்கிய துறைகளுக்கு சவூதி அரேபியாவின் இவ்வுதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

# மதவாக்குளம் ஷரபிய்யா வளர்ச்சியில் பணியாற்றிய மௌலவி பஷீர் (பஹ்ஜி)

## மதவாக்குளம் அஹ்லுஸ்ஸுன்னா வல்ஜமாஅத் ஒன்றியம் அனுதாபச் செய்தி


மதவாக்குளம் ஷரபிய்யா அரபுக்கல்லூரியின் உபஅதிபர் சங்கைக்குரிய மௌலானா மௌலவி பஷீர் (பஹ்ஜி) கடந்த டிசம்பர் 30 ஆம் திகதி காலமானார். அன்னார் இலங்கையின் புகழ்மிக்க முன்னணி அரபுக் கல்லூரியான காலி கோட்டை அல்பஹ்ஜதுல் இப்ராஹீமிய்யாவில் தனது சன்மார்க்க கல்வியைப் பூர்த்தி செய்து அல் ஆலிம் பட்டம் பெற்றார்.

மதவாக்குளம் ஷரபிய்யா அரபுக் கல்லூரியின் ஸ்தாபக பணிப்பாளர் மர்ஹூம் கலீபத்துல் குலபா ஜே. அப்துல் ஹமீத் பஹ்ஜி அவர்களுடன் இணைந்து ஷரபிய்யாவின் வளர்ச்சிக்கு பெரும்பங்காற்றி வந்தார். அவர் ஓர் உஸ்தாதாக, ஓர் அதிபராக, மாணவர்களுக்கு ஓர் அறிவுத் தந்தையாக ஷரபிய்யாவின் ஓர் முத்தாக திகழ்ந்தார். மேற்படி மத்ரஸாவின் வளர்ச்சியில் முன்னின்று உழைத்தவர் அவர். அதற்கான தனது நேரத்தை அர்ப்பணித்தார். ஷரபிய்யாவிற்கு மாத்திரமின்றி மதவாக்குளம் கிராமத்திற்கும் அன்னார் பல சேவைகளை ஆற்றி அக்கிராமத்தின் வளர்ச்சிக்கும் பாடுபட்டுள்ளார்.

ஆன்மிகத்திலும் அறிவிலும் அமைதியான, ஆரவாரமற்ற முன்மாதிரிமிக்க ஓர் ஆசானாக திகழ்ந்தவர் உஸ்தாத் மர்ஹூம் பஷீர் பஹ்ஜி.

ஷரபிய்யா வளாகத்திற்குள் அவர் விட்டுச் சென்ற தடயங்கள் ஏராளம் உள்ளன. காலை, மாலை என்றில்லாமல் அவர் ஷரபிய்யாவை வலம்வந்து கொண்டேயிருப்பார். நேரமுகாமைத்துவத்தை பேணுவதிலும் நேரத்திற்கு மேலதிகமாக பணிபுரிவதிலும் சிறந்து விளங்கியவர் அவர், ஓர் ஆசானாக மட்டுமன்றி சிறந்த நிர்வாகியாகவும் ஷரபிய்யாவைக் கட்டிக் காத்த காவலனாகவும் இருந்தவர். கட்டடக் கலையில் அவரின் கைவித்தைகள் ஷரபிய்யாவில் மாத்திரமின்றி மதவாக்குளத்தில் பல இடங்களில் காணப்படுகின்றன.

ஷரபிய்யாவில் கற்கும் மாணவர்கள் ஆங்கில மொழியில் தேர்ச்சி பெற வேண்டும் என்பதற்காக மேலதிக வகுப்புக்களை நடத்தி ஆங்கிலம் கற்பதை கட்டாயப்படுத்தியவர். அரபுமொழியை கற்பிக்கின்ற போது நவீன சொற்களை அறிமுகப்படுத்துவது அவரின் சிறந்த விடயமாகும். தஹஜ்ஜுத் தொழுகையை



பர்ளு தொழுகையைப் போன்று பேணி தொழுது வந்தமை ஆன்மீகத்தின் உச்சத்தில் மெச்சத்தக்கதாகும்.

அமைதியான சுபாவம், எளிமையான தோற்றம், தர்மம் போன்ற பல விடயங்களை முன்மாதிரியாக விட்டுச் சென்றுள்ளார். அன்னாரின் மறைவு ஷரபிய்யாவுக்கு மாத்திரமின்றி முழு மதாவாக்குளத்திற்கும் பாரிய இழப்பாகும். கடந்த வருடங்களில் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா மதவாக்குளம் கிளை தலைவராகவும்,நிர்வாக சபை பொருளாளராகவும்,ஷரபிய்யா அரபுக் கல்லூரியின் உப அதிபராகவும், தாருஸ் சாலிஹாத் பெண்கள் அரபுக் கல்லூரியின் ஸ்தாபகராகவும் தனது சன்மார்க்கப் பணியை வியாபித்தார்.

சென்ற வருடம் ஜமாத்துல் ஆகிர் மாதம் கலீஃபத்துல் குலபா அப்துல் ஹமீத் பஹ்ஜி பிறை 05 அன்று அவர் காலமானார். இந்த வருடம் ஜமாத்துல் ஆகிர் மாதம் பிறை 05 அதே நாளில் அவரது வலதுகரமாகத் திகழந்த மௌலவி பஷீர் (பஹ்ஜி) அவர்களும் காலமானார்.

அல்லாஹு தஆலா அன்னாரின் மகத்தான சேவைகளை அங்கீகரித்து, அருள்புரிவானாக.

**மௌலவி:**
**M.S.M ஆஸாத் ஸஹாப்தீன் (அஜ்வாதி)**
**மதவாக்குளம்**

# மாவனல்லை பதுரியா மத்திய கல்லூரி அதிபர் நிஸ்தார் ஓய்வு பெற்றார்

ஹெம்மாதகம அல்அஸ்ஹர் மத்திய கல்லூரி மற்றும் மாவனல்லை பதுரியா மத்திய கல்லூரி உட்பட பல பாடசாலைகளில் அதிபராகக் கடமையாற்றிய எம்.ஏ.எம்.நிஸ்தார் 39 வருடகால தனது அரச சேவை கல்விப் பணியிலிருந்து கடந்த முதலாம் திகதி ஓய்வு பெற்றுள்ளார். 1964.02.03ஆம் திகதி ஹெம்மாதகம கொடேகொடையைச் சேர்ந்த மர்ஹூம் எம்.ஆரிப் மற்றும் ஹலீமா பீபி தம்பதியருக்கு மகனாகப் பிறந்த அதிபர் நிஸ்தார் தனது ஆரம்பக் கல்வியை வாடியதன்னை முஸ்லிம் கனிஷ்ட வித்தியாலயத்திலும் பின்னர் இடைநிலை மற்றும் க.பொ.த உயர் தரக் கல்வியை ஹெம்மாதகம அல்அஸ்ஹர் மத்திய கல்லூரி மற்றும் மாவனல்லை ஸாஹிராக் கல்லூரியிலும் தொடர்ந்தார்.

ஹெம்மாதகம அல்அஸ்ஹர் மத்திய கல்லூரியின் சிரேஷ்ட ஆசிரியை பீஉல் ஜன்னத்துடன் திருமண வாழ்வில் அவர் இணைந்தார். 1984.12.27 ஆம் திகதி நுவரெலியா மாவட்டத்திலுள்ள பன்மூர் தமிழ் வித்தியாலயத்தில் ஆசிரியர் பணியை ஆரம்பித்த நிஸ்தார், 1986/1987 காலப்பகுதியில் அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் இரண்டு வருட ஆசிரியர் பயிற்சியை நிறைவு செய்து கொண்டார்.



இவர் பேராதனை பல்கலைக்கழகத்தில் வெளிவாரி மாணவராக கலைமாணி பட்டத்தை அவர் நிறைவு செய்தார். அத்துடன் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் கல்வித் துறையில் பட்டப் பின் படிப்பு டிப்ளோமா கற்கை நெறியை நிறைவு செய்தார்.

அவர் தனது மாணவர்கள் மற்றும் பாடசாலை சமூகத்தினர் உட்பட ஊர்மக்கள் மத்தியிலும் கௌரவத்தை பெற்றுக் கொண்டார். இரண்டு வருட ஆசிரியர் பயிற்சியை நிறைவு செய்த ஆசிரியர் நிஸ்தார், நாவலப்பிட்டி கடபுலா தமிழ் வித்தியாலயத்திலும் பின்னர் 1990 ஆம் ஆண்டு முதல் ஹெம்மாதகம தும்புளுவாக முஸ்லிம் வித்தியாலயத்திலும் பின்னர் ஹெம்மாதகம அல்அஸ்ஹர் மத்திய கல்லூரியிலும் ஆசிரியர் பணியை தொடர்ந்தார்.

அவர் 1991 ஆம் ஆண்டு முதல் ஹெம்மாதகம அல்அஸ்ஹர் மத்திய கல்லூரியில் உதவி அதிபராகவும் பிரதி அதிபராகவும், 2006.06.02 ஆம் திகதி முதல் 2017 ஆம் ஆண்டு வரை அக்கல்லூரியின் அதிபராகவும் பணியாற்றியுள்ளார்.

2017 முதல் 2019 வரை இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தில் இரண்டு வருட கல்வி முதுமாணி பட்டப் படிப்பைத் தொடர்ந்த அதிபர் நிஸ்தார், சிறிதுகாலம் ஹெம்மாதகம நகரகிரி மகாவித்தியாலயத்தில் பிரதி அதிபராக பணியாற்றியுள்ளார். மாவனல்லை பதுரியா மத்திய கல்லூரியின் அதிபராக சேவையாற்றிய பின்னர் கடந்த முதலாம் திகதி ஓய்வு பெற்றார்.

அவர் தான் சேவையாற்றிய அனைத்துப் பாடசாலைகளினதும் வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் தன்னால் இயன்ற அனைத்து முயற்சிகளையும் முன்னெடுத்துள்ளார்.

மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் மாத்திரமின்றி ஆசிரியர்களுக்கான வாண்மை அபிவிருத்தி மற்றும் பாடசாலையின் பௌதிக வள அபிவிருத்தி உட்பட பாடசாலைக்கும் சமூகத்திற்கும் இடையிலான ஆரோக்கியமான உறவை கட்டியெழுப்புவதிலும் முன்னின்று உழைத்துள்ளார்.

கல்வி அமைச்சின் ஊடாக கொடுக்கப்படும் சிறந்த அதிபருக்கான 'குரு பிரதிபா' விருதினை நான்கு தடவை பெற்றுக்கொண்ட அவர், சர்வதேச மாணவர் தர வட்ட மகாநாட்டில் இரண்டு தடவை கலந்து கொண்டுள்ளார். ஆசிரியர்கள், அதிபர்கள், சமூகத் தலைவர்களுக்கான பயிற்சி செயலமர்வுகளிலும் சிறப்பு வளவாளராக கலந்து கொண்டுள்ளார்.

**எம்.எல்.எஸ்.முஹம்மத்**

# கிழக்கின் குரல்

## பெரும்போக நெல் கொள்வனவுக்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்

### கிண்ணியா பிரதேச விவசாயிகள் கோரிக்கை

**தம்பலகாமம் குறூப் நிருபர்**



பெரும்போக நெற்செய்கைக்கான அறுவடை மேற்கொள்ளப்படவுள்ள நிலையில், நெல்லை உரிய முறையில் கொள்வனவு செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென, கிண்ணியா விவசாய சம்மேளனங்களின் ஊடகப் பேச்சாளர் எம். எம். மஹ்தி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பெரும்போகச் செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளின் சார்பில் இவ்வேண்டுகோளை முன்வைப்பதாக, கிண்ணியாவில் நேற்று (01) முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் தெரிவித்துள்ளார்.

உரம் இறக்குமதி செய்வது நிறுத்தப்பட்டமையாலும் நெற்செய்கைக்கான மூலப் பொருட்களின் விலை உயர்வினாலும் கடந்த காலத்தில் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டு, வருமான இழப்பு மற்றும் கடன் போன்றவற்றால் பாரிய கஷ்டத்துக்குள்ளாகியுள்ளனர்.

கடந்த பல வருடங்களாக விவசாயிகளினால் அறுவடை செய்யப்பட்ட நெல்லை, அரசாங்க நெல் களஞ்சியசாலையானது கொள்வனவு செய்யாமையினால், உத்தரவாத விலையைப் பேண முடியாத நிலையில், குறைந்த விலையில் தனியாருக்கு நெல் விற்பனை செய்ய வேண்டிய நிலைமை விவசாயிகளுக்கு ஏற்பட்டது. இதன் மூலம் விவசாயிகள் பாதிப்பை எதிர்நோக்கியதாகவும், அவர் தெரிவித்துள்ளார்.

இன்னும் சில நாட்களில் பெரும்போகநெற்செய்கைக்கானஅறுவடை முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் இந்நிலையில், அறுவடை செய்யப்பட்ட நெல்லை உரிய முறையில் கொள்வனவு செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும், அவர் கோரியுள்ளார்.

## காத்தான்குடியில் திருட்டில் ஈடுபட்ட இருவர் கைது



**மட்டக்களப்பு குறூப் நிருபர்**

மட்டக்களப்பு மாவட்டத்தின் காத்தான்குடி ஹைராத் நகரிலுள்ள வீடொன்றை உடைத்துத் திருடிய குற்றச்சாட்டில் இருவரை கைது செய்துள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி வீட்டிலுள்ளோர் தமது வீட்டைப் பூட்டி விட்டு, கல்முனை கடற்கரை பள்ளிவாசல் மௌலீது வைபத்துக்குச் சென்று விட்டு மீண்டும் நேற்று (01) முன்தினம் வீட்டுக்குத் திரும்பிய போது, வீட்டின் முன் கதவை உடைத்து பொருட்களைத் திருடியமை தெரிய வந்தது.

இதனைத் தொடர்ந்து, இச்சந்தேக நபர்களை நேற்று (02) கைது செய்துள்ளதுடன், அவர்களிடமிருந்து 2 காஸ் சிலிண்டர்கள், ஒரு டெப் கணினி, ஒரு கையடக்கத் தொலைபேசியை மீட்டுள்ளதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

## காட்டு யானை தாக்கியதில் குடும்பஸ்தர் உயிரிழப்பு

**றொட்டவெவ குறூப் நிருபர்**

திருகோணமலை மாவட்டத்தின் கோமரங்கடவலவின் புளிக்கண்டிகுளம் பகுதியில் காட்டு யானையின் தாக்குதலில் ஒருவர் உயிரிழந்ததாக, பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த சனிக்கிழமை வீட்டு முற்றத்தில் நின்ற யானையை துரத்துவதற்கு முற்பட்ட போது, இந்த அசம்பாவிதம் இடம்பெற்றது.

புளிக்கண்டிகுளம் பகுதியைச் சேர்ந்த 74 வயதுடைய 4 பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்தார்.

## கஞ்சா செடிகள் வளர்த்த ஒருவருக்கு விளக்கமறியல்

**றொட்டவெவ குறூப் நிருபர்**

திருகோணமலை மாவட்டத்தின் றொட்டவெவ பகுதியில் 5 கஞ்சாச் செடிகளை வீட்டில் வளர்த்து வந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட ஒருவரை இன்று (03)வரை விளக்கமறியலில் வைக்குமாறு, திருகோணமலை நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் சுபாஷினி சித்திரவேல் உத்தரவிட்டார்.

வீடொன்றில் கஞ்சாச் செடிகளை வளர்த்து வருவதாக பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் 34 வயதுடைய இச்சந்தேக நபரை பொலிஸார் கைது செய்தனர்.

இதனைத் தொடர்ந்து சந்தேக நபரை நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்திய போதே, இவ்விளக்கமறியல் உத்தரவு வழங்கப்பட்டது.

## ஆரையம்பதி சரீரம் நிஷ்தபதி ஆலயத்தின் 33ஆவது நிறைவு விழா



**மட்டக்களப்பு விசேட, பெரியபோரதீவு தினகரன் நிருபர்கள்**

வைகுண்ட ஏகாதசி சொர்க்க வாசல் திறப்பு நாளான நேற்று (02) மட்டக்களப்பு மாவட்டத்தின் தாழங்குடா ஆரையம்பதி சரீரம் நிஷ்பதபதி ஆலயத்தின் 33ஆவது ஆண்டு நிறைவையொட்டிய வருடாபிஷேகம் நடைபெற்றது.

சரீரம் நிஷ்ப்தபதி ஸ்ரீ லங்கா தேசிய மன்றத்தின் தலைவர் கலாநிதி கர்மயோகி ஆறுமுகம் யோகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், 'நல்வாழ்வுக்கு நல்வழி செய்வோம்' எனும் தொனிப்பொருளில் சிறப்பு யாகம், சங்காபிஷேகம், கும்பாபிஷேகம் நடைபெற்றதுடன் கல்வியியலாளர்கள், ஊடகவியலாளர்களை கௌரவிக்கும் நிகழ்வும் நடைபெற்றது.

சிவஸ்ரீ சண்முக நாராயணக் குருக்கள் தலைமையில் சிவாச்சாரியார்கள் கலந்துகொண்டு மருத்துவத்துக்குப் பாவிக்கும் மூலிகைகளைப் பயன்படுத்தி யாகம் நடத்தினர். அத்துடன், திருப்பல்லாண்டு நாலாயிரத் திவ்வியப்பிரபந்த பாடல்கள் ஓதப்பட்டன.

## நாட்டுக்கு அந்நிய செலாவணியை பெற்றுக்கொடுக்க ஒத்துழைப்பு தேவை

### தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் தெரிவிப்பு

**ஒலுவில் விசேட நிருபர்**

தென்கிழக்கு பல்கலைக்கழகத்தை சர்வதேச மயப்படுத்தி நாட்டுக்கு அந்நியச் செலாவணியை பெற்றுக் கொடுக்க அனைவரும் ஒத்துழைக்க வேண்டுமென, அப்பல்கலைக்கழக உபவேந்தர், பேராசிரியர் அபூபக்கர் றமீஸ் தெரிவித்தார்.

தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் 2023ஆம் ஆண்டுக்கான கடமையை ஆரம்பிக்கும் சத்தியப் பிரமாண நிகழ்வு, ஒலுவில் வளாகத்தில் நேற்று (02) நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே, அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இந்நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய அவர்,

பல்கலைக்கழகத்தை வருமானம் ஈட்டும் நிறுவனமாக மாற்றுவதற்கு எம் அனைவருக்கும் கடமைப்பாடு இருப்பதுடன், நலிவடைந்துள்ள நாட்டின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவதற்கு பல்கலைக்கழகத்தில் இவ்வருடம் முதல் புதிய வெளிவாரி, டிப்ளோமா மற்றும்



சான்றிதழ் கற்கைநெறிகளை ஆரம்பிப்பதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது. அந்த வகையில், ஒவ்வொரு பீடங்களிலும் வெளிவாரிக் கற்கைநெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளது.

பட்ட மேற்படிப்புகள் புதிய கற்கைநெறிகளை ஆரம்பிப்பதனூடாக வெளிநாட்டு மாணவர்கள் இங்கு வருகை தருவார்கள். இதனூடாக நாட்டுக்கு அந்நியச் செலாவணியை பெற்றுக்கொடுக்க முடியும்.

அத்துடன், நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு அரசாங்கமானது வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளது. இதற்கு அரசாங்க ஊழியர்களின் பங்களிப்பு இன்றியமையாததாக காணப்படுகின்றது" என்றார்.

## நாணல்சேனை கிராமத்தில் காட்டு யானைகள் தொல்லை

**மூதூர் தினகரன் நிருபர்**

மூதூரின் நாணல்சேனைக் கிராமத்தில் காட்டு யானைகள் நுழைந்து இரண்டு குடியிருப்புகளையும் பயன் தரும் மரங்களையும் சேதப்படுத்தியுள்ளன.

இக்கிராமத்தினுள் நேற்று (01) முன்தினம் நள்ளிரவு நுழைந்த காட்டு யானைகள் தோட்டச் செய்கையாளர்களின் குடியிருப்புகளை சேதப்படுத்தியுள்ளதுடன் தென்னை, நிலக் கடலை, மரவள்ளி பயிர்களுக்கும் சேதம் விளைவித்துள்ளன.

யானைகளின் தொல்லையினால் தாம் பெரும் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளதாக, பாதிப்பட்ட குடியிருப்பாளர்கள் தெரிவித்தனர்.

## கல்முனையில் டெங்கு நுளம்புகள் பரவும் இடங்களில் ஆய்வு நடவடிக்கை

**ஒலுவில் விசேட நிருபர்**

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவில் அதிகளவில் டெங்கு நுளம்புகள் பரவும் இடங்களாக அடையாளப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் நுண்ணுயிரியல் ஆய்வாளர்கள் ஆய்வு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக, அப்பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், வைத்தியக் கலாநிதி ஐ.எல்.எம்.றிபாஸ் தெரிவித்தார்.

ஆலையடிவேம்பு, அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, கல்முனை வடக்கில் அதிகளவான டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாகவும், அவர் தெரிவித்தார். சில கிராம அலுவலகர் பிரிவுகள் சிவப்பு எச்சரிக்கை வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அப்பிரிவுகளில் வாழும் பொதுமக்களை அவதானமாக இருக்குமாறும், அவர் கேட்டுக்கொண்டார்.

பொதுமக்கள் விழிப்புடன் செயற்பட்டு வீடுகளில் காணப்படும் குப்பைகள், நீர் தங்கியுள்ள இடங்களை சுத்தம் செய்து, நுளம்புகள் பெருகுவதற்கு இடங்கொடுக்காத வகையில் இருக்குமாறும், அவர் தெரிவித்தார்.

நுளம்புகள் பரவுவதற்கு ஏதுவாக வெற்றுக்காணிகளை வைத்திருப்பவர்கள் இரண்டு வார காலத்துக்குள் சுத்தம் செய்யுமாறும் தவறும் பட்சத்தில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும், அவர் தெரிவித்தார்.

## அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தின் ஒன்றுகூடல்

**திராய்க்கேணி தினகரன் நிருபர்**

அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தின் கடந்த 2022ஆம் ஆண்டுக்கான இறுதி ஒன்றுகூடல் நிகழ்வு, 'ஒன்றாக பயணிப்போம்' எனும் தொனிப்பொருளின் கீழ் அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் எம்.ஏ. சி.அகமது ஷாபிர் தலைமையில் நேற்று (01) முன்தினம் நடைபெற்றது.

இந்நிகழ்வில் இறக்காமம் பிரதேச செயலாளர், உதவிப் பிரதேச செயலாளர், அக்கரைப்பற்று பிரதேச செயலாளர், அட்டாளைச்சேனை உதவிப் பிரதேச செயலாளர் உட்பட பிரதேச செயலக அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.





இதன்போது, அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் கடமையாற்றி 2022ஆம் ஆண்டில் இடமாற்றம் பெற்றுச் சென்றவர்களும் ஓய்வு பெற்றுச் சென்றவர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

## போதைப்பொருள் பாவனையை ஒழிக்கக் கோரி கிண்ணியாவில் விழிப்புணர்வுப் பேரணி

**தம்பலகாமம் குறூப், கிண்ணியா மத்திய நிருபர்கள்**





போதைப்பொருள் பாவனையை ஒழிக்கக் கோரி விழிப்புணர்வுப் பேரணியொன்று, திருகோணமலை மாவட்டத்தின் கிண்ணியா பகுதியில் நேற்று (01) முன்தினம் இடம்பெற்றது.

இப்பேரணியைத் தொடர்ந்து புஹாரி சந்தியில் கிண்ணியா அரபா மகா வித்தியாலய மாணவர்களினால் போதைப்பொருள் ஒழிப்புத் தொடர்பான வீதி நாடகமும் நடத்தப்பட்டது.

'போதைப்பொருள் பாவனையற்ற சமுதாயத்தை உருவாக்க ஒன்றுபட்டு வாருங்கள்' எனும் தொனிப்பொருளின் கீழ் இடம்பெற்ற இவ்விழிப்புணர்வுப் பேரணியை, கிண்ணியா டைட்டனிக் விளையாட்டுக்கழகம் மற்றும் மரத்தடி விளையாட்டுக்கழகம் ஏற்பாடு செய்திருந்தனர். இப்பேரணியில் கலந்துகொண்டோர், போதைப்பொருள் பாவனைக்கு எதிராக வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளைத் தாங்கியிருந்ததுடன், கோஷங்களையும் எழுப்பினர்.

## மட்டு. பஸ் நிலைய வாவியில் குப்பை; சுகாதாரத்துக்கு பாரிய அச்சுறுத்தல்



**மாளிகைக்காடு குறூப் நிருபர்**

மட்டக்களப்பு பிரதான பஸ் தரிப்பு நிலையத்துக்குப் பின்புறத்திலுள்ள வாவியோரமாக நாளாந்தம் குப்பைகள் கொட்டப்படுவதினால், வாவி அசுத்தமடைவதுடன், துர்நாற்றமும் வீசுவதாக, பொதுமக்கள் தெரிவித்தனர்.

நாளாந்தம் சேரும் குப்பைகளுடன் வெற்றுச் சாராயப் போத்தல்கள் உள்ளிட்டவையும் காணப்படுகின்றன. இக்குப்பைகளில் காணப்படும் பொருட்களில் நீர் தேங்கி நிற்கக்கூடிய நிலைமையும் காணப்படுவதால், டெங்கு நுளம்புகள் பெருகக்கூடிய சாத்தியமும் காணப்படுகின்றது. இதனால் சுகாதாரத்துக்கு அச்சுறுத்தல் காணப்படுவதாகவும், பொதுமக்கள் தெரிவித்தனர்.

எனவே, இவ்விடயத்தில் உரிய அதிகாரிகள் கவனம் செலுத்துவதுடன், மேற்படி வாவியோரத்தை சுத்தமாக வைத்திருப்பதற்கு உதவுமாறும், பொதுமக்கள் கேட்டுக் கொண்டனர்.

## பட்டிருப்பு வலய கல்விப் பணிப்பாளராக மகேந்திரகுமார்

**காரைதீவு குறூப் நிருபர்**



பட்டிருப்பு வலயக் கல்விப் பணிமனையின் புதிய வலயக் கல்விப் பணிப்பாளராக செபமாலை மகேந்திரகுமார் நேற்று (02) தனது கடமையைப் பொறுப்பேற்றுக்கொண்டார்.

ஏற்கெனவே கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளராக இருந்த நகுலேஸ்வரி புள்ளநாயகம், இதே பட்டிருப்பு வலயக் கல்விப் பணிப்பாளராகவும் கடமையாற்றி நேற்று (01) முன்தினம் ஓய்வு பெற்றதனால் இவ்வெற்றிடம் ஏற்பட்டது.

இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் 1 ஐச் சேர்ந்த இவர், இதுவரை அதே வலயத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றி வந்தார்.

மட்டக்களப்பு புனித மைக்கேல் கல்லூரியின் அதிபராகவும் கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களம், திருக்கோவில், மட்டக்களப்பு மேற்கு, பட்டிருப்பு ஆகிய வலயங்களில் பிரதிக் கல்விப் பணிப்பாளராகவும் இவர் கடந்த 15 வருடங்களாக பணியாற்றியிருந்தார்.

# அ/தெலும்புகஹவத்தை முஸ்லிம் வித்தியாலயத்தின் மாடிக்கட்டடத்திற்கான அடிக்கல்நாட்டு விழா





## கட்டடத்தை நிர்மாணித்து தர முன்வந்த பெருந்தகை அஹமத் ஷஹீத்


அல்ஹாஜ் A S M இல்யாஸ்


அல்ஹாஜ் A S ரியாஸ் முஹம்மத்


மர்ஹூம் அல்ஹாஜ் A S M ரம்சீன்


அல்ஹாஜ் K. G. H. அஹமத் சஹீத்

தெலும்புகஹவத்தை பாடசாலை வரலாற்றில் இன்றைய நாள் மறக்க முடியாத ஒரு நன் நாள் ஆகும். இந்நாளில் அல்லாஹ் எமக்கு அளித்துள்ள அருட்கொடைகளில் ஒன்றான செல்வத்தை அவனின் பாதையில் செலவழிக்க வாய்ப்பளித்துள்ளான். அனைத்துப் புகழும் அவனுக்கே அல்ஹம்து லில்லாஹ்.

இப்பாடசாலையில் நீண்ட காலக் குறைபாடாக இருந்து வந்த வகுப்பறைத் தேவை பற்றி அதிபர் ஜனாப் S. H. M. ரியால்தீன் எம்மோடு கதைத்த போது இதனை சமூகப் பணியில் இணைந்து கொள்வதற்கான ஒரு சந்தர்ப்பமாகக் கருதி பெருமனதோடு அத்தேவையை நிவர்த்தி செய்வதற்கு முன் வந்தோம். அந்த வகையில் இப்பணியை செய்வதற்கு K. G. H. அஹமட் சஹீட் ஆகிய நானும் எனது மகன்மார்களான A. S. M. இல்யாஸ், மர்ஹூம் A. S. M. ரம்ஸீன், A. S. ரியாஸ் முஹம்மது ஆகியோரின் ஒத்துழைப்புடன் இன்று இக் கட்டடத்திற்கான அடிக் கல்லினை நடுவதற்கு வாய்ப்பளித்த அல்லாஹ்வுக்கு நன்றி கூறியவர்களாக பொறுப்பெடுத்த இப்பணியை சிறந்த முறையில் செய்து முடிக்க இறைவன் அருள் புரிய வேண்டும் என பிரார்த்தித்தவர்களாக இவ்வாறான ஒரு சமூகப் பணி ஆற்றுவதற்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தித் தந்த அதிபர் அவர்களுக்கும் பாடசாலை சமூகத்திற்கும் நன்றியைத் தெரிவித்து கொள்கின்றோம்.

## பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளர் முஜாஹித்

நன்கு திட்டமிட்டு வளர்ச்சிப் பாதையில் வேகமாகப் பயணிக்கும் தெலும்புகஹவத்தை முஸ்லிம் வித்தியாலயம் அதன் வளர்ச்சிப் பாதையில் மற்றுமொரு தடயத்தைப் பதித்து வரும் இச்சந்தர்ப்பத்தில் இச்செய்தியை வழங்குவதில் பெருமிதம் அடைகின்றேன்.

பல துறைகளிலும் துரித வளர்ச்சி அடைந்து வரும் இப்பாடசாலையின் பெருங் குறையாக இருந்த வகுப்பறைத் தேவையை அடைந்து கொள்ள பெரும் முயற்சிகள் பல செய்தும், அரசியல் ரீதியாகவும், வேறு வழிகளிலும் பலரை நாடியும் அடைந்து கொள்ள முடியாத ஒரு காரியமாகக் காணப்பட்ட இக்குறையை நிவர்த்தி செய்து தர முன் வந்த K.G.H. அஹமத் சஹீத் அவர்களையும், அவர்களது மகன் மார்களான A.S.M. இல்யாஸ், மர்ஹூம் A.S.M.ரம்ஸீன், ரியாஸ் முஹம்மத் ஆகியோரின் இச்சேவையினை நாம் பெரு மனதுடன் வரவேற்கின்றோம்.

இது எமது சமுதாயத்தினருக்கான ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக திகழ்கின்றது .

இவர்களுக்கு அல்லாஹ் மென்மேலும் நன்மைகளை அருளி, அதன் மூலம் தொடர்ந்தும் நன்மைகள் செய்ய எல்லாம் வல்ல அல்லாஹ் அருள் புரிவானாக.

அத்துடன் எமது பாடசாலையை பல்வேறு வகையிலும் முன்னேற்றி அதன் புகழ் ஓங்கிட அயராது உழைத்து ஓய்வு பெற்றுச் செல்லும் அதிபர் S.H.M Riyaldeen அவர்களுக்கு எமது இதய பூர்வ நன்றிகள் என்றும் நிறைவாக உரித்தாகட்டும்.

## அதிபராக பொறுப்பேற்றிருக்கும் திருமதி R.F.ரியாஸாவின் ஆசிச் செய்தி

ஒரு பாடசாலையின் அபிவிருத்தியில் அதிபர் உட்பட ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம், ஏனைய நலன் விரும்பிகளின் பங்களிப்பு மிகவும் முக்கியமானதாகும். அந்த வகையில் எமது பாடசாலையின் வளர்ச்சியில் கடந்த 13 வருட காலமாக பெறும் பங்காற்றிய எமது அதிபர் S.H.M. ரியால்தீனின் சேவை அளப்பரியது. அவரது முயற்சியால் அண்மைக் காலங்களில் துரித எழுச்சிப் பாதையில் செல்லும் ஆரம்பப் பாடசாலையான தெலும்புகஹவத்தை முஸ்லிம் வித்தியாலயம் அதன் வளர்ச்சிப் பாதையில் மற்றுமொரு அடைவைப் பெற்று வரும் இச் சந்தர்ப்பத்தில் இச்செய்தியை வழங்குவதற்கான சந்தர்ப்பம் கிடைத்தமைக்கு இறைவனுக்கு முதற் கண் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.



பல வித்தியாசமான பெறுமதி மிக்க செயற்றிட்டங்களை முன்னெடுத்து வரும் எமது தெலும்புகஹவத்தை முஸ்லிம் வித்தியாலயம் ஒரு மாதிரி ஆரம்பப் பாடசாலையாக மிளிரும் இக்கட்டத்தில் இப்பாடசாலையின் பெருங் குறையாக இருந்தது வகுப்பறை கட்டடமே.

இக்குறையை முன் வந்து நிவர்த்தி செய்து தரும் அல்ஹாஜ் K. G. H. அஹமத் சஹீத், அவர்களது புத்திரர்களான அல்ஹாஜ் A. S. M. இல்யாஸ், மர்ஹூம் அல்ஹாஜ் A. S. M. ரம்ஸீன், அல்ஹாஜ் ரியாஸ் முஹம்மத் ஆகியோரையும் எமது பாடசாலைச் சமூகம் என்றும் மறக்காது.

இப்பாடசாலையின் பழைய மாணவர்களான இவர்களுக்கு அல்லாஹ் மென்மேலும் நன்மைகளை அருளி, அதன் மூலம் தொடர்ந்தும் எமது பாடசாலையின் வளர்ச்சிக்கும் சமூகத்தின் வளர்ச்சிக்கும் இவர்களைப் போன்ற நல்லுள்ளம் படைத்தவர்களின் உதவிகள் கிடைக்க எல்லாம் வல்ல அல்லாஹ் அருள் புரிவானாக.

## ஓய்வு பெற்றுச் செல்லும் அதிபர் S. H. M ரியால்தீன்

துரித வளர்ச்சி கண்டு வரும் இப்பாடசாலையின் பெருங் குறையாக இருந்த விடயம் போதிய வகுப்பறைகள் இல்லாமையேயாகும்.



இந்நிலையில் இது சம்பந்தமாக அரசியல் ரீதியாகவும், வேறு வழிகளிலும் பலரை நாடியும் அடைந்து கொள்ள முடியாத ஒரு காரியமாக் காணப்பட்ட இக்குறையை நிவர்த்திக்க முன்வந்த K. G. H. அஹமத் சஹீத் அவர்களையும், அவர்களது புத்திரர்களான அல்ஹாஜ் A. S. M. இல்யாஸ், மர்ஹூம் அல்ஹாஜ் A. S. M. ரம்ஸீன், அல்ஹாஜ் ரியாஸ் முஹம்மத் ஆகியோரின் இச்சேவையினை இம்மண் என்றும் மறக்காது. இது எமது சமூக மக்களுக்கு ஒரு எடுத்துக்காட்டாக திகழ்கின்றமை அவர்களுடன் சிறு வயது முதலே பழகி வந்த எனக்கு மிகுந்த மகிழ்வைத் தருகின்றது.

இப்பாடசாலையின் பழைய மாணவர்களான இவர்கள் வறுமை ஒழிப்பு வேலைத்திட்டங்களிலும் நிரந்தர நன்மை தரும் பல சமூக வேலைத்திட்டங்களிலும் தம்மை அர்ப்பணித்து ஊருக்கும் நாட்டுக்கும் சேவையாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இவர்களுக்கு அல்லாஹ் மென்மேலும் நன்மைகளை அருளி, பொருளாதார விருத்திகள் செய்து அதன் மூலம் தொடர்ந்தும் சமூகத்தின் விருத்திக்கு எல்லாம் வல்ல அல்லாஹ் அருள் புரிவானாக.

அத்துடன் எனது சேவைக் காலத்தில் பல்வேறு வகையிலும் உதவிகள் புரிந்த சகலருக்கும், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்று குழு, பழைய மாணவர்கள் சங்கம், தக்வா மஸ்ஜித் நிர்வாகம், We Care Welfare Association, Faizal Foundation, பிரதி அதிபர் Mrs R F ரியாஸா, ஆசிரியர்கள், மாணவர்கள் ஏனைய ஆளணியினர்கள் மற்றும் மத்திய மாகாண மேலதி கல்விப் பணிப்பாளர் A.L.M. ஸாருதீன் அவர்களுக்கும் ஏனைய கல்விப் பணிப்பாளர்களுக்கும் என் இதய பூர்வ நன்றிகள் என்றும் நிறைவாக உரித்தாகட்டும்.

# தெலும்புகஹவத்தை முஸ்லிம் வித்தியாலய வரலாறு

கண்டி மாவட்டத்தில் அக்குறணைப் பிரதேசத்தில் எழில் கொஞ்சும் கிராமமான தெலும்புகஹவத்தைக் கிராமத்தில் கம்பீரமாய் அமையப்பெற்று ஊருக்கே பெயரையும் புகழையும் ஈட்டித்தரும் கலைக்கூடமே தெலும்புகஹவத்தை முஸ்லிம் வித்தியாலயம். இங்கு சுமார் 580 மாணவர்கள் கல்வி கற்பதுடன் 21 ஆசிரியர்கள், 03 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், 02 கல்விசாரா ஊழியர்கள் பணியாற்றுகின்றனர்.

இப்பாடசாலையானது 1959 ஜுன் 19ஆம் திகதி 38 மாணவர்களுடன் ஓர் ஓலைக் குடிசையில் ஆரம்பிக்கப்பட்டது. பாடசாலையின் உருவாக்கத்தில் ஈடுபாடு காட்டிய பலரில் M.M.H முஹம்மத், H.M.M முபாரக், M.J.M..தாஹா ஆகியோர் பெயர் குறிப்பிடத்தக்கவர்கள்.

பாடசாலையின் முதல் அதிபராக H.M.M.இஸ்மாயீல் கடமையாற்றியதைத் தொடர்ந்து பாடசாலையை முன்னெடுத்துச் சென்ற அதிபர்களான மர்ஹூம் அல்ஹாஜ் S.L.A ரஸீத், I.ஹாஜிதீன், N.M.M.இஸ்ஹாக், M.I.S.முஹம்மத், ஹாஜியானி M.S.S.நஸீமா, K..அஸீஸ், M.C.M.ரிபாய், S.M.ஹம்ஸி ஆகியோரின் சேவை பாராட்டத்தக்கது. அவர்களைத் தொடர்ந்து இப்பாடசாலையின் வரலாற்றில் 1973 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் முதன் முதலில் சித்தியடைந்த மாணவரான இறுதியாக அதிபராகக் கடமையாற்றிய S.H.M.ரியால்தீன் இப்பாடசாலையைப் பொறுப்பேற்றார். இவரது சிறந்த தலைமையின் கீழ் கடமையாற்றும் ஆசிரியர்களின் அயராத சேவையின் மூலம் வெற்றிப்பாதையில் சென்று கொண்டிருக்கும் தெலும்புகஹவத்தை முஸ்லிம் வித்தியாலயம் கட்டுகஸ்தோட்ட வலயத்துக்கு புகழ் சேர்க்கும் ஒரு பாடசாலையாகத் திகழ்கிறது என்பதில் ஐயமில்லை.

பலரின் கல்விக் கண்களைத் திறந்து நாட்டிற்கும் சமூகத்திற்கும் பல கல்விமான்களைத் தந்துள்ள இப்பாடசாலையில் கற்றுத் தேர்ந்தவர்களில் 16 பேர் வைத்தியர்களாகத் திகழ்வதுடன், பல பொறியியலாளர்கள், சட்டத்துறையினர், கணக்கியலாளர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் எனப் பலரும் காணப்படுகின்றனர். நாட்டின் புகழ் பெற்ற வைத்தியர்களில் ஒருவரான வைத்தியக் கலாநிதி கமால் அப்துல் நாஸர், ஸ்ரீ லங்கா டெலிகொம் நிறுவனத்தின் உதவிப் பொது முகாமையாளர் நவ்ஸர், விவசாயத் துறை ஆராய்ச்சியாளர் M.A.C.M.மஸீன் போன்றவர்களையும் இப்பாடசாலையே எமது சமூகத்திற்களித்துள்ளது.

இடைக்காலத்தில் ஏற்பட்ட நிர்வாக நெருக்கடிகளால் மிகவும் பின்தள்ளப்பட்டு, இக்கிராமப் பகுதி மாணவர்கள் அயற்கிராமப் பாடசாலைகளை நாடிச் செல்லும் காலகட்டத்திலே 2009 மே மாதம் 25ஆம் திகதியன்று, அதிபர் S.H.M.ரியால்தீன் அவர்களிடம் கையளிக்கப்பட்டது. அத்துடன் சகல துறைகளிலும் முன்னேறி வரும் இப்பாடசாலையானது தற்போது ஆரம்ப பாடசாலை என்ற வகையில் மாணவர்களின் ஆரம்பக் கல்வியில் பாரிய அடைவுகளைக் கண்டு வருவதுடன் புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளிலும் தொடர்ச்சியான சிறந்த முன்னேற்றங்களைக் கண்டு வருகின்றது.

இணைப்பாடவிதானச் செயற்பாடுகளான விளையாட்டுப் போட்டிகள்,தமிழ்தினப் போட்டிகள்,மீலாத் தினப் போடடிகள் மற்றும் ஆங்கில தினப் போட்டிகளிலும் வலய, மாகாண,தேசிய மட்டங்களில் பங்குபற்றி சிறந்த அடைவுகளைப் பெற்று வருவது




விஷேட அம்சமாகும். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினால் நடாத்தப்படும் 'எங்கள் பாடசாலை' என்ற நிகழ்ச்சியிலும் எமது பாடசாலை ஒரே வருடத்தில் இரு முறை பங்குபற்றியதுடன் எமது மாணவிகளின் கஸீதா நிகழ்ச்சி ரமழானில் 15 தடவைகளுக்கும் மேல் ஒலிபரப்பப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

இறுதி அதிபராகக் கடமையாற்றிய S.H.M.ரியால்தீன் பாடசாலையைப் பொறுப்பேற்ற காலப்பகுதியில் இப்பாடசாலையில் முதன் முதலாக Automatic Bell System மற்றும் Indoor Sound System என்பன ஏற்படுத்தப்பட்டன. அத்துடன் இக்காலப் பகுதியிலே பாடசாலை நுழைவாயில்,பாதுகாவலர் அறை,மைதானம் புனர்நிர்மாணம்,புதிய கட்டடம் போன்றனவும் பெறப்பட்டதுடன், நீண்ட காலக் குறையாகக் காணப்பட்ட காரியாலய சிற்றூழியர், பாடசாலைப் பாதுகாவலர் ஆகியோரும் நியமிக்கப்பட்டனர்.பாடசாலையின் சகல வகுப்பறைகளுக்கும் மின்சார மற்றும் குடிநீர் வசதிகள், பாடசாலைக்கான wifi இணையத்துடன் கூடிய தொலைபேசி வசதிகள் என்பன "We Care" அமைப்பின் உதவியுடன் பெறப்பட்டு பாடசாலைக் காரியாலயமும் நவீன வசதிகள் கொண்டதாக மாற்றியமைக்கப்பட்டது.

இவ்வாறாக கல்வி நடவடிக்கைகளை வெற்றிப் பாதையில் இட்டுச் செல்வதற்கான பௌதிக வளங்களைப் பெற்று பாடசாலைச் சூழலை சிறந்த கல்விச் சூழலாக மாற்றுவதற்கு அதிபர் S.H.M.ரியால்தீன் பெரும் பங்காற்றினார் என்பது மிக முக்கியமான விடயமாகும். அந்த வகையில் ஆரம்ப வகுப்பு மாணவர்களின் ஆக்கப்பூர்வமான உடலியற் செயற்பாடுகளுக்குப் பொருத்தமான அழகிய விளையாட்டு முற்றமொன்றும் ஒழுங்கமைக்கப்பட்டது.

எமது பாடசாலையானது எமக்கென்று தனித்துவமான தளபாட வசதிகளுடன் பிள்ளைகள் விரும்பக் கூடியவாறான கற்றல் சாதனங்களைப் பயன்படுத்தும் கவர்ச்சிகரமான பிள்ளை நேய வகுப்பறைகளாக வடிவமைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்க விசேட அம்சமாகும். இப்பாடசாலையின் பெரும்பாலான வகுப்பறைகள் ஆரம்பத்தில் தொலைக்காட்சி வசதிகளுடன் ஒழுங்கமைக்கப்பட்டு தொடர்ந்து Projector வசதிகளும் இணைக்கப்பட்டன.

தற்போதைய நிலையில் சில வகுப்பறைகள் நவீன முறையிலான Smart Learning வகுப்பறைகளாக மாற்றப்பட்டு, கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் வினைத்திறன் மிக்க விளைவுகளைக் கண்டு வருகின்றன.

இவற்றுக்கு மேலதிகமாக அண்மையில் Room to Read நிறுவனத்தின் பாடசாலை மாணவர்கள் மத்தியில் வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்துவதற்கான வேலைத்திட்ட முன்னெடுப்பினை எமது பாடசாலையும் பெற்றுக் கொண்டது. மாணவர்கள் மத்தியில் சிறந்த வாசிப்புக் கலாசாரத்தை உருவாக்குவதற்கு எமது பாடசாலையிலும் பிள்ளை நேய நூலகமொன்று அழகிய முறையில் வடிவமைக்கப்பட்டிருப்பது மற்றுமோர் அடைவாகும்.

இப்பாடசாலையானது தனது வரலாற்றில் படிப்படியான பல முன்னேற்றங்கள் அடைவுகளைக் கண்டு வரும் நிலையில் தற்போது துரித வளர்ச்சி கண்டு தரம் ஒன்றுக்கான மாணவர் அனுமதியில் கடும் போட்டி நிகழுமளவிற்கு உயர் நிலையை



அடைந்துள்ளது என்பது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

மேலும், எமது பாடசாலையானது, சுமார் 19 வருட காலமாக மூடப்பட்டிருந்த வட்டகொட சிங்கள ஆரம்ப பாடசாலையை மீண்டும் 2019 ஆம் ஆண்டு திறந்து வைப்பதில் பெரும் பங்கற்றியதுடன்,அதன் விசாலமான பெயர்ப் பலகை மற்றும் பல பொருட்களையும் மாணவர்களுக்குத் தேவையான கற்றல் உபகரணங்களையும் வழங்கியதுடன் அன்று தொடக்கம் 2022 வரை தேவையான சகல தளபாடங்களையும் வழங்கி வருகின்றது.

இன நல்லிணக்கத்தை மிக முக்கியமானதாகக் கருதி வரும் எமது பாடசாலை மாணவர்கள்,ஆசிரியர்கள் அதிபர் மற்றும் தக்வா ஜும்ஆப்பள்ளி தலைவர் ஆகியோர் தீகல்ல பௌத்த வித்தியாலயத்திற்கு பரிசுப் பொருட்களுடன் சினேகபூர்வ விஜயமொன்றினை மேற் கொண்ட போது அங்கு இரு பாடசாலை மாணவர்களும் பல சினேகபூர்வ நிகழ்ச்சிகளிலும் ஈடுபட்டனர்.

எமது பழைய மாணவர்களின் உதவியுடன் அக்குறணை ஸியா வைத்தியசாலைக்கு அவர்களின் அத்தியாவசியத் தேவைகளாக இருந்த சில மருத்துவ உபகரணங்களை வழங்கி பாடசாலைக்கும் வைத்தியசாலைக்குமான தொடர்பை வலுப்படுத்தியது.

எமது ஆசிரியர் குழாத்துடன் பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம், தக்வா பள்ளி நிர்வாகம், We Care நலன்புரிச் சங்கம் Faizal Foundation ஆகிய அமைப்புக்களின் உறுப்பினர்கள் மற்றும் ஊர் தனவந்தர்கள் பெற்றோர்கள், நலன் விரும்பிகள்,ஆகியோரின் பங்களிப்பு இப்பாடசாலையின் வளர்ச்சியில் பாராட்டத்தக்கது.

சமூக வளர்ச்சியில் தலைசிறந்தவர்களை உருவாக்கி வரும் இப்பாடசாலையானது ஆண்டாண்டு காலம் நிலைத்தோங்கி புகழ் பெற்று சிறந்த எதிர்கால தலைமுறையினை உருவாக்கி பாரினில் உயர்ந்திட எல்லாம் வல்ல இறையோன் அருள் புரிவானாக.

2022.12.31 அதிபர் ஜனாப் S.H.M ரியால்தீன் இப்பாடசாலைக்கு தமது சேவையை செவ்வனே செய்து விட்டு ஓய்வு பெற்ற நிலையில், 2023.01.01 ஆம் திகதி இது வரை இப்பாடசாலையில் பிரதி அதிபராகக் கடமையாற்றிய திருமதி R.F.ரியாஸா அதிபராக நியமனம் பெற்றார் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இப்பாடசாலையின் மாணவர் தொகைக்கேற்ப வகுப்பறை வசதிகள் இல்லாமை நீண்ட காலமாக பெரும் குறைபாடாகவே இருந்தது. இந்நிலையில் இக்குறைபாட்டை நிவர்த்தி செய்வதற்காக அரசியல் வாதிகளையும் மற்றும் பலரை நாடியும் விடை காண முடியாத நிலையில் K.G.H.அஹமட் ஷஹீட்,அவரின் புத்திரர்களான A.S.M இல்யாஸ், மர்ஹூம் A.S.M.ரம்ஸீன், A.S.ரியாஸ் முஹம்மத் ஆகியோர் எமக்குத் தேவையான வகுப்பறைக் கட்டடம் ஒன்றின் தரை மாடியை கூடிய விரைவில் முடித்துத்தர முன்வந்தனர். இன்றைய தினம் அதற்கான அடிக்கல் நாட்டு விழா மிக விமர்சையாக நடைபெறுகின்றமை எமது பாடசாலை சமூகத்திற்கான வரப்பிரசாதம் என்றால் மிகையாகாது. இவ்வாறு இக் குடும்பம் எமது பாடசாலைக்கும் கிராமத்திற்கும் முழு நாட்டிற்கும் பணத்தாலும் பொருளாலும் பாரிய உதவிகளை செய்து வரும் அன்னாரின் குடும்பத்திற்கு அல்லாஹ் மென்மேலும் அருள் புரிவானாக!



தொகுப்பு
எம்.சதுர்தீன் j.p
மாத்தளை சுழற்சி நிருபர்

# சீன நகரங்களில் அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் சீன ஜனாதிபதி உணர வேண்டுமென தெரிவிப்பு

மூன்றாவது தடவையாகவும் சீன ஜனாதிபதியாகவும் சீன கம்யூனிஸ்ட் கட்சித் தலைவராகவும் பதவியேற்றிருக்கும் ஸின் ஜின்பிங், தன்னைச் சுற்றியுள்ள ஆமாம் சாமி கூட்டத்தினரின் பேச்சைக் கேட்காமல் மக்களின் உண்மையான எண்ணங்களை புரிந்து கொள்ள முயல வேண்டும் என ஒரு கொள்ளை ஆய்வு அறிக்கை தெரிவித்துள்ளது.

கடந்த நவம்பர் 24ம் திகதி 21 மாடிக் கட்டடமான உரும்கி குடியிருப்பில் தீவிபத்து ஏற்பட்டபோது தீயணைப்பு வண்டிகள் அக்கட்டட வளாகத்தை சென்றடைய தாமதமானதற்குக் காரணம் பாதைகள் எங்கும் போடப்பட்டிருந்த தடைகளே என்றும் சீன ஜனாதிபதியின் கடுமையான கோவிட் தடுப்பு உத்தரவுகளுக்கு அமையவே இத் தடைகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன என்றும் இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இதே சமயம் ஸின் ஜின்பிங், திபெத் மற்றும் ஹொங்கொங்கில் சீனா மேற்கொண்டுவரும் அத்துமீறல்களை எதிர்த்து ஐரோப்பிய நாடுகளிலும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்று வருகின்றன. ஆம்ஸ்ட்ரடாமில் நிகழ்ந்த சீன எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் முன்னாள் டச்சு பாராளுமன்ற உறுப்பினரும் கலந்து கொண்டார். ஜெனீவா, லண்டன், டொரன்டோ நகரங்களிலும் சீன எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நிகழ்ந்துள்ளன.

# உல்லாசபுரியாக மாறிவரும் குரேஸ் பள்ளத்தாக்கு

பயங்கரவாதத்தாலும், இராணுவ கெடுபிடிகளாலும் பாதிப்படைந்திருந்த ஜம்மு – காஷ்மீர் கடந்த மூன்று வருடங்களாக அபிவிருத்தி அடைந்து அதன் சுய பொருளாதாரம் மீட்சி பெற்று வருவதாக ஊடகங்கள் தெரிவித்து வருகின்றன. இதற்கு உதாரணமாக காஷ்மீரின் பன்டிபோரா மாவட்டத்தின் மிக அழகிய குரேஸ் பள்ளத்தாக்கு குறிப்பிடப்படுகிறது. காஷ்மீரின் வனப்புக்கு கட்டியம் கூறுவதாக அமைந்திருக்கும் இப்பள்ளத்தாக்கு பிரதேசத்துக்கு 2021 இல் 0.4 மில்லியன் சுற்றுலா பயணிகள் வந்து போனதாகவும் இதற்கான ஏற்பாடுகளை இந்திய இராணுவம் செய்திருந்ததாகவும் பன்டிபோரா மாவட்ட பிரதி ஆணையாளர் ஒவாசிஸ் அஹ்மட் தெரிவித்துள்ளார். இராணுவ உதவியுடன் கூடிய சிவில் நிர்வாகம் தொடர்ச்சியாக மேற்கொண்டுவரும் முயற்சிகளின் விளைவாய் குரேஸ் பள்ளத்தாக்கின் அழகை இந்திய சுற்றுலாப் பயணிகளுக்கு தெரிவு வந்திருப்பதாகவும் இவர் குறிப்பிடுகிறார். முன்னரை விட தொலைத் தொடர்பு வசதிகளில் பெருமளவும் முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதாகவும் தற்போது 4ஜி வசதி ஏற்படுத்தப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. ஜம்மு – காஷ்மீருக்கான விசேட அந்தஸ்த்து நீக்கப்பட்ட பின்னர் அபிவிருத்தி நடவடிக்கைகள் வேகம் பெற்று வருகின்றன.

# நுளம்பு கட்டுப்பாட்டு செயற்றிட்டம்

***யாழ். விசேட நிருபர்***

யாழ்.மாவட்டத்தில் ஜனவரி மாதம் நுளம்பு கட்டுப்பாட்டு செயற்றிட்டமொன்றை முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. இன்று முதல் எதிர்வரும் 5ஆம் திகதி வரை தொடர்ச்சியாக மூன்று நாட்கள் விசேட நுளம்பு கட்டுப்பாட்டு செயற்றிட்டமொன்றை நடைமுறைப்படுத்தவுள்ளனர்.

யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் ஊடகங்களுக்கு அனுப்பியுள்ள செய்திக் குறிப்பிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, யாழ்ப்பாண மாவட்டத்தில் கடந்த சில மாதங்களாக டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதுடன் அதிக மரணங்களும் பதிவாகியுள்ளன.

யாழ்.மாவட்டத்தில் 2022 இல் இதுவரையான காலப்பகுதியில் 3421 நோயாளர்கள் உறுதிசெய்யப்பட்டதுடன் ஒன்பது மரணங்களும் பதிவாகியுள்ளன.

மேலும் பருவப்பெயர்ச்சி மழையின் பின்னர் அதாவது 2022ஆம் ஆண்டின் ஒக்டோபர், நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களிலேயே யாழ்.மாவட்டத்தில் இனங்காணப்பட்ட டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துள்ளது. ஒக்டோபர் மாதத்தில் 231 டெங்கு நோயாளர்களும், நவம்பர் மாதத்தில் 306 டெங்கு நோயாளர்களும் மற்றும் டிசம்பர் மாதத்தில் 633 டெங்கு நோயாளர்களும் இனங்காணப்பட்டுள்ளனர். டெங்கு தொற்றாளர்களின் எண்ணிக்கை குறைக்கப்பட வேண்டும்.

எனவே அனைத்து பிரதேசங்களிலும் நுளம்புகள் பெருகக்கூடிய இடங்களை கருத்திற் கொண்டு எந்தவித காலதாமதமும் இன்றி சமூக பங்களிப்புடன் நுளம்புகள் உருவாகும் மூலங்களை அழிக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். ஜனவரி மாதம் 3ஆம் திகதி முதல் 5ஆம் திகதி வரை தொடர்ச்சியாக மூன்று நாட்கள் யாழ்.மாவட்டத்தில் விசேட நுளம்பு கட்டுப்பாட்டு செயற்திட்டத்தினை முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்நாட்களில் சுகாதார உத்தியோகத்தர்கள், பாதுகாப்புப் படையினர். பொலிஸ், கிராம உத்தியோகத்தர்கள், உள்ளூராட்சி மன்ற உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் அடங்கிய குழுக்கள் கிராம உத்தியோகத்தர் பிரிவுவாரியாக உள்ள அரச தனியார் நிறுவனங்கள், மத ஸ்தலங்கள், பாடசாலைகள், உயர் கல்வி நிறுவனங்கள், வீடுகள், தொழிற்சாலைகள், கட்டடநிர்மாணங்கள் நடைபெறும் இடங்கள், மற்றும் மீன்பிடி துறைமுகங்கள் என்பனவற்றுக்கு நுளம்புகள் பெருகக்கூடிய ஆபத்துள்ள இடங்களை அடையாளம் காணும் நோக்கத்துடன் பரிசோதிப்பதற்காக வருகை தருவர்.

# கல்லுண்டாய் பகுதியில் வாள் வெட்டு சம்பவம் : ஒருவர் படுகாயம்

***யாழ்.விசேட நிருபர்***

யாழ்.கல்லுண்டாய் பகுதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற வாள் வெட்டு சம்பவத்தில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். 34 வயதுடைய நபரொருவரே இவ்வாறு படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். கல்லுண்டாய் பகுதியிலுள்ள வைரவர் ஆலயத்திற்கு அருகிலுள்ள வீடொன்றில் வசிக்கும் நபரொருவர் நேற்று முன்தினம் இரவு வீட்டின் வெளியே நின்றிருந்த வேளை முச்சக்கர வண்டி மற்றும் மோட்டார் சைக்கிளில் வந்த 6ற்கும் மேற்பட்டவர்கள் அடங்கிய வன்முறை கும்பலொன்று அவர் மீது சரமாரியாக வாள் வெட்டு தாக்குதலை மேற்கொண்டு விட்டு அங்கிருந்து தப்பி சென்றுள்ளது. இச்சம்பவத்தில் காயமடைந்த நபரை அயலவர்கள் மீட்டு , நோயாளர் காவு வண்டி மூலம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்று சிகிச்சைக்காக அனுமதித்துள்ளனர்.

# நாவலர் பெருமானின் 200 ஆவது ஜனனதினம்

***கரவெட்டி தினகரன் நிருபர்***



வடமராட்சி தொண்டமனாறு செல்வச் சந்நிதியான் ஆச்சிரமத்தில் ஸ்ரீல ஸ்ரீ ஆறுமுகநாவலரின் 200ஆவது ஆண்டு ஜனனதினம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மிக சிறப்பாக இடம் பெற்றது.

முன்னதாக நாவலர் பெருமானின் திருவுருவம் பல்லக்கில் செல்வச்சந்நிதியான் ஆலயத்திலிருந்து ஊர்வல மாக செல்வச் சந்நிதியான் ஆச்சிரமம் வரை எடுத்து வரப்பட்டு அங்கு ஆசியுரையை சிவ ஸ்ரீ சோ. தண்டபாணிக தேசிகர் சுவாமிகள் நிகழ்த்தினார்.

அருளுரை ஸ்ரீசோமசுந்தர பரமாச்சாரியார் 2 ஆவது மகா சந்நிதானம் நிகழ்த்தினர்.

ஆறுமுக நாவலரின் தமிழ்ப்பணி, சைவப்பணி தொடர்பாக கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் வேல் நந்தகுமார், சைவப்புலவர் ச. முகுந்த ஆகியோர் நினைவுரை நிகழ்த்தினர்.

தொடர்ந்து கந்த . சத்தியதாஸன் குழுவினராலும் வில்லுப்பாட்டு, பண்ணிசை, என்பனவும் நிகழ்த்தப்பட்டதுடன் பாமலையை என்.எஸ். பிரதீபன் குழுவினர் நிகழ்த்தினர். அதனை தொடர்ந்து அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன.

இதேவேளை ஆறுமுக நாவலரின் நினைவு மலர் வெளியீடும் இடம் பெற்றது. இதில் அறிமுகவுரையை திரு.இரா. செல்வவடிவேல் நிகழ்த்தினார். மதிப்பீட்டுரையை மு.கௌரிகாந்தன் நிகழ்த்தினார்.

படுகொலை செய்யப்பட்ட முன்னாள் இந்து கலாசார அமைச்சர் தியாகராசா மகேஸ்வரன் ஞாபகர்த்தமாக தரம் 01 தொடக்கம் உயர்தரம் வரையான மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் ஆன்மீக தலைவர்கள், கல்வியலாளர்கள், அடியார்கள், சந்நிதியான் ஆச்சிரம சுவாமிகள் கலாநிதி மோகனதாஸ், மற்றும் தொண்டர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.


# ஆசிய அபிவிருத்தி வங்கியினால் விவசாயிகளுக்கு நிதியுதவி

***(பரந்தன் குறூப் நிருபர்)***

கிளிநொச்சி மாவட்ட விவசாயிகளுக்கு ஆசிய அபிவிருத்தி வங்கியினால் 263 மில்லியன் ரூபா உதவி வழங்கப்பட்டுள்ளது.

ஆசிய வங்கியால் கிளிநொச்சி மாவட்ட விவசாயிகளுக்கு 263 மில்லியன் ரூபா கிடைத்துள்ளதாக கிளிநொச்சி மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்கள பிரதி ஆணையாளர் பா.தேவரதன் தெரிவித்திருந்தார். கிளிநொச்சி மாவட்டத்தில் இம்முறை பெரும்போகத்தில் 19772 விவசாயிகள் 28778 ஹெக்டேயர் நிலப்பரப்பில் பயிர்ச்செய்கையில் ஈடுபடுகின்ற போதும் ஆசிய அபிவிருத்தி வங்கியால் ஒரு ஹெக்டேயருக்கு குறைவான விவசாயிகளுக்கு 10000 ரூபாவும் இரண்டு ஹெக்டேயருக்கு மேற்பட்ட விவசாயிகளுக்கு 20000 ரூபா வீதமும் தனிப்பட்ட வங்கிக்கணக்கில் வைப்பில் இடப்படவுள்ளது.

# பண்டிதர் வீரகத்தி நூற்றாண்டு நினைவு நிகழ்வு



இலக்கண இலக்கியப் பேராசான் பண்டிதர் க.வீரகத்தியின் நூற்றாண்டு நிறைவு நிகழ்வு வடமராட்சி கரவெட்டி சாமியன் அரசடி தச்சை ஐங்கரன் அறநெறிப்பாடசாலை மண்டபத்தில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (8/1) பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

கரவெட்டி அபிவிருத்தி ஒன்றியத்தின் தலைவர் உபாலி பொன்னம்பலம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் நினைவுப்பேருரைகளை பேராசிரியர் அ.சண்முகதாஸ், பேராசிரியர் சி.சிவலிங்கராசா, ஓய்வுநிலை அதிபர் கி.நடராசா ஆகியோர் நிகழ்த்துவர். தலைமையுரையை ஓய்வுநிலை அதிபர் இ.இராகவனும் தொடக்கவுரையை யாழ்ப்பாண மாவட்ட சிரேஷ்ட சமுர்த்தி முகாமையாளர் ஆ.இரகுநாதனும் சிறப்புரைகளை கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலை விரிவுரையாளர் வேல் நந்தகுமாரும் யாழ்ப்பாண மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரனும் நிகழ்த்துவர். நிகழ்வை பண்டிதர் வீரகத்தி நூற்றாண்டு நிறைவு நினைவுக்குழு ஏற்பாடு செய்துள்ளது.

# திருகோணமலை மாணவர்கள் படுகொலை நினைவேந்தல்



***யாழ். விசேட நிருபர்***

திருகோணமலையில் சுட்டுப்படுகொலை ஐந்து தமிழ் மாணவர்களின் 17ஆம் ஆண்டு நினைவேந்தல் நேற்றைய தினம் திங்கட்கிழமை வல்வெட்டித்துறையில் எம்.கே.சிவாஜிலிங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

இதன்போது ஐந்து மாணவர்களின் உருவப்படத்திற்கு சுடரேற்றி அஞ்சலிக்கப்பட்டது. சுடரேற்றிய பின்னர் கருத்து தெரிவிக்கையில்,

தமிழ் இனப்படுகொலை உட்பட்ட சர்வதேச குற்றங்களுக்கான குற்றவாளிகளைச் சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்தி நீதியைப் பெறத்தொடர்ந்து போராடுவோம் என தெரிவித்த எம்.கே.சிவாஜிலிங்கம் , இலங்கைத் தீவின் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வாக தமிழ்த் தேசிய இனம் தனக்கே உரித்தான சுய நிர்ணய உரிமையின் அடிப்படையில் சுதந்திரமா? சுயாட்சியா? என்ற பொதுசன வாக்கெடுப்பு ஒன்றை நடாத்த முன்வருமாறு சர்வதேச சமூகத்துக்கு அழைப்பு விடுக்கிறோம் என்றார். கடந்த 2006ம் ஆண்டு ஜனவரி மாதம் 2ம் திகதி மாலை திருகோணமலை கடற்கரை பகுதியில் பொழுது போக்குக்காக கூடியிருந்த ஐந்து மாணவர்கள் அழைத்துச் செல்லப்பட்டு காந்தி சிலை சுற்று வட்டத்திற்கு அருகாமையில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டனர்.

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**
**7 ஆம் பிரிவின் கீழான பிரகடனம்**

சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சின் குறிப்பு இல : 13/99/D/260

பிரதேச செயலாளர் குறிப்பு இல : DIVPANN/LND/ACDEP/1/4/6

இங்கே கீழ்க்காணும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட கிரியுல்ல பொலிஸ் நிலையத்திற்காக காணித் துண்டை எடுத்துக் கொள்ள அரசாங்கம் எண்ணியுள்ளது. இக்காணி தொடர்பாக காணி எடுத்தற் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ்வுள்ள விசாரணை தொடர்பாக 7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல் ஒன்று இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் 2303/51 ஆம் திகதிய 2022.10.29ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலைப் பார்க்கவும்.

**அட்டவணை**

| | | |
|---|---|---|
| 01. | மாகாணம் | : வடமேல் |
| 02. | மாவட்டம் | : குருநாகல் |
| 03. | பிரதேச செயலாளர் பிரிவு | : பன்னல |
| 04. | கிராம உத்தியோகத்தர் பிரிவு | : 1566 மாஹரகம |
| 05. | கிராமம் | : மல்கமுவ |
| 06. | காணியின் பெயர் | : வாகொல்லஹேன, இம்புல்கஹ முலவத்தை |
| 07. | வரைபட இல | : இ.கி.வ. 381 |
| 08. | துண்டு இல | : 126, 122 |
| 09. | விஸ்தீரணம் | : 0.7764 ஹெக்டயார் |

மேலதிக விபரங்களுக்காக மேலே குறிப்பிட்டுள்ள வர்த்தமானியைப் பார்க்கவும்.

..............................................
**ஆர்.எம்.எஸ்.வின்ரமரத்ன பண்டார**
**பிரதேச செயலாளர்,**
**பன்னல பிரதேச செயலகம், பன்னல.**

**திகதி : 2022.12.27**
**பன்னல பிரதேச செயலகம்**


## எல் பீ ஃபினான்ஸ் பி.எல்.சி பகிரங்க ஏலவிற்பனை

[illegible]

| ஏலவிற்பனைத் திகதி | முகவரி |
|---|---|
| [illegible] | [illegible] |

LB FINANCE

[illegible]

## மத்திய சுற்றாடல் அதிகாரசபை

## பாவனையிலிருந்து அகற்றப்பட்ட வாகனங்களை விற்பனை செய்தல்

**விலைக்கோரல் இலக்கம்: CEA/AD/PROC/CA/38/2018**

# கேள்வி அறிவித்தல்

1. மத்திய சுற்றாடல் அதிகார சபைக்குரித்தான பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள பாவனையிலிருந்து அகற்றப்பட்ட வாகனங்களை விற்பனை செய்வதற்காக ஆர்வமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| இலக்கம் | பதிவிலக்கம் | வாகனத்தின் வகுப்பு |
|---|---|---|
| 01 | பதிவு இரத்துச் செய்யப்பட்டுள்ளது | இலகுரக மோட்டார் கோச் - மிட்சுபிஷி L 300 |
| 02 | பதிவு இரத்துச் செய்யப்பட்டுள்ளது | மோட்டார் கார் - மிட்சுபிஷி பெஜரோ |
| 03 | 47 - 6881 | மோட்டார் லொறி - லேண்ட் ரோவர் டிபென்டர் (2019-06-29ஆம் திகதி முதல் வருமான அனுமதிப்பத்திரம் இல்லை) |

2. இதற்குரித்தான கேள்விப் படிவங்களை 2023-01-03ஆம் திகதி 2023-01-23ஆம் திகதி வரையில் வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான காலத்தினுள் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் நிர்வாகப் பிரிவில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம். ஒரு வாகனத்திற்காக மீளளிக்கப்படும் 2,000.00 ரூபா வைப்புத் தொகையொன்றைச் செலுத்தி குறித்த பற்றுச்சீட்டைச் சமர்ப்பிப்பதன் பின் கேள்விப் படிவங்களைக் கொள்வனவு செய்யலாம். பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் படிவங்களைச் சமர்ப்பிக்கும்போது ஒரு வாகனத்திற்கு மீளளிக்கப்படாத 20,000.00 வைப்புத் தொகையொன்றை மத்திய சுற்றாடல் அதிகார சபையின் நிதிப் பணிப்பாளருக்குச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் பிரதியொன்றை கேள்விப் படிவத்துடன் இணைத்து கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.
3. ஒரு கேள்விதாரருக்கு ஒரு வாகனத்திற்கு அல்லது சகல வாகனங்களுக்கும் விலைகளைச் சமர்ப்பிக்கலாம் என்பதுடன் ஒவ்வொரு வாகனத்திற்கும் வெவ்வேறாக விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கு ஏற்பாடு செய்துகொள்ளல் வேண்டும்.
4. முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட உறையில் உள்ளிட்ட கேள்வி மாதிரிப் படிவங்களை 2023-01-24ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு முன் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் நிர்வாகப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் திறக்கப்படாமலேயே நிராகரிக்கப்படும்.
5. 2023-01-24ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு கேள்விப் படிவங்கள் திறக்கப்படும் என்பதுடன் இந்நிகழ்வில் கலந்துகொள்ள விரும்பும் கேள்விதாரர் அல்லது அவரது பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.
6. கேள்விப்படிவங்களைத் தாங்கி வரும் முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் மோட்டார் வாகனங்களுக்காக கேள்வி கோரல் - CEA/AD/PROC/CA/38/2018 மற்றும் வாகன தொடர் இலக்கம் என்பவற்றைக் குறிப்பிடுதல் வேண்டும்.
7. இந்த வாகனங்களை 2023-01-03ஆம் திகதி முதல் 2023-01-23ஆம் திகதி வரையில் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பத்தரமுல்ல பிரதான அலுவலகத்தின் வாகன முற்றவெளி இடப்பரப்பில் வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான வேலை நேரங்களில் வருபவரின் ஆளடையாளத்தை உறுதி செய்துகொண்டதன் பின் பரீட்சித்துப் பார்க்கலாம்.
8. கேள்விகளைச் சமர்ப்பித்தவர்களில் தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரருக்கு அதிகார சபையினால் அறிவிக்கப்பட்டு 7 நாட்களுக்குள் (ஒரு வாரம்) சகல கொடுப்பனவுகளையும் செலுத்தி அதிகார இடப்பரப்பிலிருந்து வாகனத்தை அப்புறப்படுத்திக்கொள்ளல் வேண்டும்.
9. ஏதாவதொரு கேள்வியை அல்லது சகல கேள்விகளையும் ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமையை திணைக்களப் பெறுகைக்குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைக் குழு,**
**மத்திய சுற்றாடல் அதிகார சபை,**
**104, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,**
**பத்தரமுல்ல.**
**0112872278**

திகதி: 2023-01-03.

## வரையறுக்கப்பட்ட நிகவெரட்டிய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் நிகவெரட்டிய

### 2022.12.31ம் திகதிக்கு பூர்த்தியாகியுள்ள வாக்குரிமை பெற்ற பெயர் பட்டியலை காட்சிப்படுத்தல்.

வ/ப நிகவெரட்டிய பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் 2022.12.31ம் திகதிக்கு பூர்த்தியாகியுள்ள வாக்குரிமை பெற்ற அங்கத்தவர்களின் பெயர் பட்டியலை காட்சிப்படுத்தல் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் மற்றும் பதிவாளர் (வடமேல்) இனால் விநியோகிக்கப்பட்டுள்ள இல. 2131/54 எனும் 2019.07.12ம் திகதிய வர்த்தமானி அறிவித்தலில் திருத்தப்பட்ட 1981/2- 2016.08.22ம் திகதிய வடமேல் மாகாணத்தின் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் பிரதேச செயற்குழு உறுப்பினர்களை தேர்ந்தெடுக்கும் கூட்டுறவு வாக்கெடுப்பு கட்டணத் தொகுதியின் 5.1 கட்டளையின் பிரகாரம் தயாரிக்கப்பட்டுள்ள சங்கத்தின் கீழ்க்காணும கூட்டுறவு பிரதேசங்களில் வாக்குரிமை உடைய அங்கத்தவர்களின் பெயர் பட்டியல் 2023.01.11ம் திகதி முதல் 2023.01.25ம் திகதி வரையான காலத்திற்குள் சங்க தலைமையகத்தில் மற்றும் கீழ்க்காணும் இடங்களில் அலுவலக நேரங்களில் காட்சிப்படுத்தப்படும்.

| தொடர் இலக்கம் | பிரதேச இலக்கம் | பிரதேசம் | காட்சிப்படுத்தப்படும் இடம் |
|---|---|---|---|
| 1 | 1 | நிக/ வடக்கு | நிகவெரட்டிய கிராமிய வங்கிக் கிளை |
| 2 | 2 | கடகமுவ | கட்டகமுவ கிராம அதிகாரி அலுவலகம் |
| 3 | 3 | ஹல்மில்லேவ | ஹல்மில்லேவ கோப் சிட்டி |
| 4 | 4 | தண்டுவாவ | தண்டுவாவ கிராமிய வங்கிக் கிளை |
| 5 | 5 | ஹீலோகம | கிலோகம கிராம அதிகாரி அலுவலகம் |
| 6 | 6 | கிவுலேகம | கிபுலேகம கிராம அதிகாரி அலுவலகம் |
| 7 | 7 | ரஸ்நாயக்கபுர | ரஸ்நாயக்கபுர கிராமிய வங்கிக் கிளை |
| 8 | 8 | மொன்யகுளம | கொட்டவெளேர கிராமிய வங்கிக் கிளை |
| 9 | 9 | தம்பரொம்புவ | கும்புக்வெவ கிராமிய வங்கிக் கிளை |
| 10 | 10 | மீவெல்லேகம | மீவெல்லேவ கிராம அதிகாரி அலுவலகம் |
| 11 | 11 | கிரில்ல | கிரில்ல கிராமிய வங்கிக் கிளை |
| 12 | 12 | மத்தகிரிந்த | கிரிந்த கிராம அதிகாரி அலுவலகம் |
| 13 | 14 | வம்பட்டுவெவ | களுக்கொல்ல கிராம அதிகாரி அலுவலகம் |
| 14 | 15 | பிள்ளபொலேகம | பிள்ளபொலேகம கிராம அதிகாரி அலுவலகம் |
| 15 | 16 | கடிகாவ | கடிகாவ கிராம அதிகாரி அலுவலகம் |
| 16 | 17 | எலகம்மில்லவ | எலகம்மில்லவ கிராம அதிகாரி அலுவலகம் |
| 17 | 18 | நாவான திம்பிரியாவ | நாவான திம்பிரிய மின்கோப் சிட்டி |
| 18 | 19 | தளுக்கொல்ல | தளுக்கொல்ல கிராம அதிகாரி அலுவலகம் |
| 19 | 21 | எகலபல்லேவ | கெபெல்லேவ கிராம அதிகாரி அலுவலகம் |
| 20 | 28 | நிக/ தெற்கு | தலைமையகம் |
| 21 | 29 | நீராலியந்த | நீராலியந்த கிராம அதிகாரி அலுவலகம் |
| 22 | 30 | மஹமதவ | மஹமதவ மினி கோப் சிட்டி |
| 23 | 40 | கிரிந்திகல்ல | திவுல்லேகொட கிராமிய வங்கிக் கிளை |

**முக்கியம்:-**
இந்த வாக்குரிமை பெற்ற அங்கத்தவர்களின் பெயர் பட்டியலுக்கு பெயர் உள்ளடக்கப்படாதவர்கள் தமது பெயரை உள்ளடக்குதல் சம்பந்தமாக மேன்முறையீடொன்றை அல்லது பட்டியலுக்கு உள்ளடக்கப்பட்டுள்ள அங்கத்தவர் பெயர் பற்றிய பிழைகல் அல்லது எதிர்ப்புக்கள் இருப்பின் அவற்றை 2023.01.11ம் திதகி முதல் 2023.01.25 வரையான காலத்திற்குள் சங்கத்தின் செயலாளருக்கு எழுத்துமூலம் சமர்ப்பித்தல் வேண்டும்.

**கவனிக்கவும்:**
இந்த வாக்கெடுப்பு உரித்துடைய அங்கத்தவர்களின் பெயர் பட்டியலில் உள்ளடக்கப்பட்டள்ளது. 2012.12.31ம்திகதி பகுதித் தொகையை முழுமையாக பூர்த்தி செய்து முழு அங்கத்துவர் உடைய அங்கத்தவர்களின் பெயர்கள் மட்டுமே என்பதை தயவுடன் கவனிக்கவும்.

**கட்டளைப் பிரகாரம்**
**கௌரவ பணிப்பாளர் சபையின் செயலாளர்,**
**ஏ.எச்.எம். குமுது குமாரி தென்னக்கோன்**
**வரையறுக்கப்பட்ட நிகவெரட்டிய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் நிகவெரட்டிய.**
**037-2260215/ 037-4800791/ 077-4625656**

## பெறுகை அறிவித்தல்

**இலங்கை புடவை மற்றும் ஆடை நிறுவனம்**
**(கைத்தொழில்கள் அமைச்சு)**

### சுகாதார சுத்திகரிப்பு சேவைக்கான அழைத்தல்

**No.: SLITA/JS/01/2023**

1. சுகாதார சுத்திகரிப்பு சேவையை வழங்குவதற்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து இலங்கை புடவை மற்றும் ஆடை நிறுவனத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.
2. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியிலுள்ள இலங்கை புடவை மற்றும் ஆடை நிறுவன செயற்பாட்டிற்கான பணிப்பாளரிடமிருந்து 2023 சனவரி 3 ஆம் திகதியிலிருந்து 2023 சனவரி 23 ஆம் திகதி வரையும் வார நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3.30 மணி வரையும் பெற்றுக் கொள்ளலாம்.
3. விலைமனுக்கோரலானது தேசிய பெறுகை முகவராண்மையினால் பிரசுரிக்கப்பட்ட தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையின் கீழ் நடாத்தப்படும்.
4. 2023 சனவரி 23 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக மீளளிக்கப்படாத கட்டணமாக 1,000 ரூபாவைச் செலுத்திய பின்னர், கீழேயுள்ள முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். 2023 சனவரி 3 ஆம் திகதியிலிருந்து 2023 சனவரி 23 ஆம் திகதி வரையும் வார நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3.30 மணி வரையும் பணக்கொடுப்பனவானது ரொக்கப் பணத்தில் கணக்கிடல் பிரிவில் செலுத்தப்படல் வேண்டும்.
5. விலைமனுக்கள் 2023 சனவரி 24 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கீழேயுள்ள முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். 2023 சனவரி 24 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு கீழேயுள்ள முகவரியில் நேரடியாக சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களும் 75,000 ரூபா பெறுமதியான விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
6. ஒப்பந்தமானது இரு வருடங்களுக்கு கைச்சாத்திடப்படும்.

**பணிப்பாளர் நாயகம்,**
**இலங்கை புடவை மற்றும் ஆடை நிறுவனம்,**
**கந்தவள தோட்டம் இல.: 02,**
**ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல வீதி, இரத்மலான.**
**தொலைபேசி: 011 2632406. தொலைநகல்: 011 2612087. மின்னஞ்சல்: do@slita.lk**

## பெறுகை அறிவித்தல்

**இலங்கை புடவை மற்றும் ஆடை நிறுவனம்**
**(கைத்தொழில்கள் அமைச்சு)**

### பாதுகாப்பு சேவைக்கான அழைத்தல்

**No.: SLITA/SS/01/2023**

1. 2022/2023 ஆண்டிற்காக பாதுகாப்பு அமைச்சின் சிவில் பாதுகாப்பு பிரிவில் கம்பனியானது பதிவு பெற்றிருத்தல் வேண்டும். பாதுகாப்பு அமைச்சிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட செல்லுபடியாகும் தன்மையிலுள்ள உரிமத்தின் பிரதியொன்று பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கோரல் ஆவணங்களுடன் அனுப்பப்படல் வேண்டும்.
2. பாதுகாப்பு சேவையை வழங்குவதற்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து இலங்கை புடவை மற்றும் ஆடை நிறுவனத்தின் சார்பாக திணைக்களப் பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.
3. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியிலுள்ள இலங்கை புடவை மற்றும் ஆடை நிறுவன செயற்பாட்டிற்கான பணிப்பாளரிடமிருந்து 2023 சனவரி 3 ஆம் திகதியிலிருந்து 2023 சனவரி 23 ஆம் திகதி வரையும் வார நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3.30 மணி வரையும் பெற்றுக் கொள்ளலாம்.
4. விலைமனுக்கோரலானது தேசிய பெறுகை முகவராண்மையினால் பிரசுரிக்கப்பட்ட தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையின் கீழ் நடாத்தப்படும்.
5. 2023 சனவரி 23 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக மீளளிக்கப்படாத கட்டணமாக 1,000 ரூபாவைச் செலுத்திய பின்னர், கீழேயுள்ள முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். 2023 சனவரி 3 ஆம் திகதியிலிருந்து 2023 சனவரி 23 ஆம் திகதி வரையும் வார நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3.30 மணி வரையும் பணக்கொடுப்பனவானது ரொக்கப் பணத்தில் கணக்கிடல் பிரிவில் செலுத்தப்படல் வேண்டும்.
6. விலைமனுக்கள் 2023 சனவரி 24 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கீழேயுள்ள முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். 2023 சனவரி 24 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு கீழேயுள்ள முகவரியில் நேரடியாக சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களும் 40,000 ரூபா பெறுமதியான விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
7. ஒப்பந்தமானது இரு வருடங்களுக்கு கைச்சாத்திடப்படும். .

**பணிப்பாளர் நாயகம்,**
**இலங்கை புடவை மற்றும் ஆடை நிறுவனம்,**
**கந்தவள தோட்டம் இல.: 02,**
**ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல வீதி, இரத்மலான.**
**தொலைபேசி: 011 2632406. தொலைநகல்: 011 2612087. மின்னஞ்சல்: do@slita.lk**

# கேள்வி கோரல்

### தேசிய நூதனசாலைகள் திணைக்களம்

## பராமரிப்பு சேவை விடயங்களை நடத்திச் செல்லல்

இத்திணைக்களத்தின் பெறுகைக் குழுவின் தலைவரால் 2023ஆம் ஆண்டிற்காக தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தின் கீழ்க்காணும் பராமரிப்பு சேவை விடயங்களுக்காக தகைமையுள்ள கேள்விதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| தொடர் இல. | பிரிவு/ நூதனசாலை | கேள்வியின் தொடர் |
|---|---|---|
| 01 | தேசிய நூதனசாலை திணைக்கள வளாகம், கொழும்பு 07 | துப்புரவேற்பாடு மற்றும் சுத்திகரிப்பு விடயங்கள் |
| 02 | புராதன தொழிநுட்பநூதனசாலை பொலன்னாறுவை | துப்புறவேற்பாடு மற்றும் சுத்திகரிப்பு விடயங்கள் |
| 03 | புராதன தொழில்நுட்ப நூதனசாலை பொலன்னறுவை | பூங்கா பராமரிப்பு விடயங்கள் |
| 04 | இரத்தினபுரி தேசிய நூதனசாலை இரத்தினபுரி | துப்புவேற்பாடு, சுத்திகரிப்பு மற்றும் பூங்கா பராமரிப்பு விடயங்கள் |

01. இது பற்றி ஆர்வம் காட்டுகின்ற நபர்களால் ஒரு கேள்விக்காக கேள்வி ஆவணக் கட்டணமாக ரூ. 1,000.00 மீளளிக்கப்படாத விண்ணப்பப்படிவக் கட்டணத்தை தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தின் கணக்காளரிடம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டுடன் தலைமையகத்திலிருந்து 2023 ஜனவரி 03 முதல் 2023 ஜனவரி 17 வரையான சாதாரண அலுவலக நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரையான காலத்திற்குள் கேள்வி விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

02. கேள்வி விண்ணப்பங்கள் உள்ளிடும் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வி விண்ணப்பத்தில் தரப்பட்டுள்ளவாறு கேள்வியின் பெயரைக் குறிப்பிட்டு 2023 ஜனவரி 17 மு.ப. 10.00 இற்கு அல்லது அதற்கு முன் கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்பலாம். அல்லது கணக்குப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.

03. 2023 ஜனவரி 17 மு.ப. 10.00 இற்கு கேள்வி விண்ணப்பங்கள் திறக்கப்படுவதுடன் கேள்விதாரர்கள் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட ஒரு பிரதிநிதியொருவருக்கு அவ்வேளையில் சமுகமளிப்பதற்கு வாய்ப்பு வழங்கப்படும்.


04. அரச ஒப்பந்த நிபந்தனைகளை மீறி, அபகீர்த்தியானோர் பட்டியல்படுத்தப்பட்டுள்ள நபர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

05. விபரங்களை தொ.பே. இல: 011-2694767 மூலப் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**தேசிய நூதனசாலைகள் திணைக்களம்,**
**இல. 53, சேர் மார்கிஸ் பெர்ணான்டோ மாவத்தை,**
**கொழும்பு-07.**

## சிறு விளம்பரம்

### மோட்டார் வாகனங்கள்



**106 கார்கள் விற்பனைக்கு**


WP CAW -0009 BMW, 2017, Car. அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல.310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி: 0714542958 080371

**107 டொயோட்டா கார்கள் விற்பனைக்கு**

65-4083 Toyota Corolla, 1996, Car. அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல.310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி: 0714542958 080397

**110 மாருதி கார்கள் விற்பனைக்கு**

GX-4359 Maruti Wagon R Car, 2002, அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி , இல.310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி: 071 4 54295 8 080414



**117 வேன்கள் விற்பனைக்கு**

251-7342 Mistsubishi, 1993, Van. அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல.310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி: 0714542958 080382

51-4301 Toyota hiace, 1987.Van 58 - 4753 Toyota, 1992, Van. அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல.310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி: 071454295 8 080386




**118 ஜீப்புகள், பிக்கப்புகள் விற்பனைக்கு**

HO-4271 Land Cruiser, 2000, jeep. அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல.310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி: 0714542958 080375



**119 பஸ்கள், லொறிகள் விற்பனைக்கு**

SG Go-4112 Tata 1510, bus. அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல.310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி: 0714 5 4 2958. 080410



**122 மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு**

BIN - 7243 Yamaha R 15, 2019, motor Cycle. அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல.310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி: 0711 2 1 0810. 080390

NW YU-6757 Bajaj, 2011, WP HP-6488 Bajaj, 2003, QI-4418 Bajaj, 2006, YB-4071 Bajaj, 2010, AAX-6550 Bajaj, 2015, threewheel. அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல.310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி: 07 1121081 0 . 080475

WP AAZ-9308 Bajaj, 2015 - WP JQ - 7853 Bajaj, 2004, Sp AAS-2203 Bajaj, 2014, SP QM-0127 Bajaj, 2007, WP AA Z-3120 Bajaj, 2015, முச்சக்கரவண்டிக்கு. அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல.310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி: 071121081 0 . 080480

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk


SUNDAY OBSERVER Marriage Proposals
Decades of Trusted Service
for 15 Words - Rs.1,000/-
For each additional word Rs. 25/-
The easiest & convenient way to send your
Marriage Proposal Ads,
classified@lakehouse.lk
Easy way to make your payment :- BOC - Acc.No. 000000377 LAKE HOUSE BRANCH
Green Light for Online Transfer
For Inquiries - Piyumi - 011 2 429 383 | Ramani - 011 2 429 347 | Gayani - 011 2 429 342 / 343




# மலையக கல்வி வளர்ச்சிக்காக இலக்கை நோக்கி போராடுவேன்

## கல்வி இராஜாங்க அமைச்சர் அ. அரவிந்தகுமார் தெரிவிப்பு

ஹற்றன் சுழற்சி நிருபர்

"மலையக கல்வி வளர்ச்சிக்காக என்னால் முடிந்த அத்தனை விடயங்களையும் வெற்றிகரமாக செய்து முடிப்பேன். இது விடயத்தில் நான் உறுதியாகவே இருக்கின்றேன். எனவே, இலக்கை அடையும்வரை நிச்சயம் போராடுவேன்" என கல்வி இராஜாங்க அமைச்சர் அ. அரவிந்தகுமார் தெரிவித்தார்.

மலையக மக்கள் முன்னணியின் ஸ்தாபக தலைவரும், முன்னாள் அமைச்சருமான அமரர் பெ.சந்திரசேகரனின் 13ஆவது சிரார்த்த தின மற்றுமொரு நிகழ்வு, நேற்று முன்தினம் (01) தலவாக்கலை கதிரேசன் ஆலய மண்டபத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.

ஐக்கிய மக்கள் முன்னணி மற்றும் ஐக்கிய தொழிலாளர் முன்னணியின் தலைவரும் பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், கல்வி இராஜாங்க அமைச்சருமான அ.அரவிந்தகுமார் தலைமையில் நடைபெற்ற



இந்நிகழ்வில் முன்னாள் பிரதி அமைச்சரும், முன்னாள் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான பெ.இராதாகிருஷ்ணன், முன்னணியின் பிரதி பொது செயலாளர் எஸ்.அஜித்குமார், உப தலைவர்களான எஸ்.சதாசிவன், எஸ்.சுதாகர், வீ. மயில்வாகனம் உள்ளிட்ட ஆதரவாளர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது மேடையில் வைக்கப்பட்டிருந்த அமரர்.பெ.சந்திரசேகரனின் உருவப்படத்திற்கு மலர் மாலையை முன்னணியின் தலைவரும், அமைச்சருமான அரவிந்தகுமாரும், பெ.இராதாகிருஷ்ணனும் அணிவித்தார்கள்.

இதனையடுத்து முன்னணியின் முக்கியஸ்தர்களும் கலந்துகொண்ட பொது மக்களும் நினைவுச்சுடர்களை ஏற்றினர்.

இந்நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய கல்வி இராஜாங்க அமைச்சர் அ.அரவிந்தகுமார்,

"மறைந்த தலைவர் அமரர். பெரியசாமி சந்திரசேகரனுடன் 24 மணி நேரமும் இணைந்து பயணித்தவன் நான். அவரின் ஒவ்வொரு அசைவுக்கும் எனக்கு அர்த்தம் புரியும். அப்படிபட்ட ஒரு தலைவரின் ஆசியால்தான் எனது அரசியல் பயணம் நீடித்தது. அவரின் ஆசியால்தான் இன்று கல்வி இராஜாங்க அமைச்சு பதவிகூட கிட்டியது என கருதுகின்றேன்.

தற்போதைய அரசியல்வாதிகள் பதவிகளுக்காகவும், அரசாங்க தலைவரை திருப்திபடுத்துவதற்காகவும் ஆமாம் சாமி போட்டு ஜால்ரா அரசியலை முன்னெடுக்கின்றனர். ஆனால் அமரர். சந்திரசேகரனின் செயற்பாடுகள் வித்தியாசமானவை. அமைச்சரவையில் இருந்துகொண்டே அரசாங்கத்தை எதிர்த்தவர். அவசரகால சட்டத்துக்கு ஆதரவு வழங்க மறுத்தவர். அதற்கு சார்பாக ஒருநாள் கூட வாக்களித்தது கிடையாது.

பொங்குதமிழ் நிகழ்வில் பங்கேற்பதற்காக வெளிநாடு செல்வார். அவரின் உரை குறித்து இங்குள்ள புலனாய்வுதுறை கழுகுபார்வை செலுத்தும். ஆனாலும் சொல்ல வேண்டிய விடயங்களை பகிரங்கமாக சொல்லிவிடுவார். எக்காரணத்தை கொண்டும் பின் வாங்கமாட்டார். உணர்வுடன் செயற்பட்டவர் அவர். அவரின் வழிகாட்டலில் வந்த நான் இன்று கல்வி இராஜாங்க அமைச்சராக இருக்கின்றேன். கல்விதான் ஒரு சமூகத்தின் தலையெழுத்தை மாற்றும். அதனை நிச்சயம் செய்வதற்கு முயற்சிப்பேன்" என்றார்.

# அமரர் பெ.சந்திரசேகரனின் மலையக மக்களுக்கான சேவைகள் மகத்தானவை

## இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டமான்

மலையக மக்கள் முன்னணியின் ஸ்தாபக தலைவர் அமரர் பெ.சந்திரசேகரன் மலையக மக்களுக்காக ஆற்றிய சேவைகள் மகத்தானவை என தெரிவித்துள்ள இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டமான், அன்னாரது சில முன்மாதிரியான செயல்பாடுகள் கட்சிகளுக்கு அப்பால் அனைவராலும் பாராட்டப்பட்டவை எனவும் தெரிவித்துள்ளார்.



நேற்று முன்தினம் (01) அனுஷ்டிக்கப்பட்ட அமரர் பெ.சந்திரசேகரனின் நினைவு தினத்தை முன்னிட்டு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் செந்தில் தொண்டமான் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவது,

அமரர் பெ.சந்திரசேகரன் தனது ஆரம்ப கால அரசியலை அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான் அவர்களின் பாசறையில் ஆரம்பித்தார். இ.தொ.காவில் இருந்து மலையக மக்களுக்காக பல சேவைகளை ஆற்றிய அவர் பின்னர் மலையக மக்கள் முன்னணி என்ற கட்சியை உருவாக்கி சேவைகளை செய்தார். அமரர் பெ.சந்திரசேகரன், மறைந்த இ.தொ.காவின் தலைவர் ஆறுமுகன் தொண்டமானுடன் நெருங்கிய நட்பை பேணியதுடன், அவருடன் இணைந்து மலையக மக்களுக்காக பல போராட்டங்களை செய்து வெற்றிக் கண்டவர். அவர் மலையக மக்களுக்காக ஆற்றிய பணிகள் என்றும் மகத்தானவைகளாகும்.

அவரது சில முன்மாதிரியான செயல்பாடுகள் கட்சிகளுக்கு அப்பால் அனைவராலும் பாராட்டப்பட்டவை. அமரர் பெ.சந்திரசேகரன் அவர்கள் தன்னுடன் கலந்துரையாடல்களில் ஈடுப்பட்ட சந்தர்ப்பங்களில் மலையக மக்கள் வாழ்வாதரத்தை மேம்படுத்துவதில் அதிகம் அக்கறை செலுத்தினார் எனவும் செந்தில் தொண்டமான் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

## ஜனாதிபதியால் பெருந்தொகை நிதி ஒதுக்கீடு :

# இந்த வருடத்தின் முதல் காலாண்டில் மருந்து தட்டுப்பாடு முற்றிலும் நீக்கப்படும்

## சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல

எம்.ஏ.அமீனுல்லா



சுகாதார அமைச்சுக்கு ஜனாதிபதி பெருந்தொகை நிதியை ஒதுக்கீடு செய்துள்ளதாலும் மேலும் இன்னோரன்ன நிதி நிறுவனங்களின் உதவிகளினாலும் இந்த வருடத்தின் முதல் காலாண்டில் மருந்து தட்டுப்பாடு பூஜ்ஜியத்திற்கு கொண்டு வரப்படும் என சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்

ஆசிய அபிவிருத்தி வங்கி, இந்திய கடன் உதவி உட்பட பல சர்வதேச நிறுவனங்கள் இந்நாட்டின் மருந்துப்பொருள் பிரச்சினையை தீர்க்க தேவையான ஆதரவை வழங்கவுள்ளதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

கண்டியில் நேற்றுமுன்தினம் (01) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அமைச்சர் ரம்புக்வெல்ல இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்துரையாற்றிய அமைச்சர்,

மருந்தின்றி மருத்துவமனைகளில் நோயாளிகள் இறப்பதைக் காணவும் அதைத் தங்களுக்குச் சாதகமாக மாற்றிக்கொண்டு அரசியல் செய்பவர்கள் நாட்டில் இருக்கிறார்கள். அவர்கள் எப்போதும் மருந்து இறக்குமதி திட்டத்தை சீர்குலைக்கவே முயற்சி செய்கிறார்கள்

மேலும் 183 வகையான அத்தியாவசிய மருந்துகளை இறக்குமதி செய்வதற்கு டெண்டர் கோரப்பட்டபோது, மூன்று நிறுவனங்கள் மட்டுமே முன் வந்ததாகவும், ஒரு மாதத்திற்குப் பிறகு அவர்களும் அந்த நடவடிக்கையை கைவிட்டதாகவும் அமைச்சர் கூறினார்.

## மசாஜ் நிலையங்கள் என்ற போர்வையில் இயங்கிய

# கண்டியில் விபசார விடுதிகள் முற்றுகை; 08 யுவதிகள் கைது

எம்.ஏ.அமீனுல்லா

கண்டியில் மசாஜ் நிலையங்கள் என்ற போர்வையில் இயங்கி வந்த மூன்று விபசார விடுதிகளை கண்டி பொலிஸார் சுற்றிவளைத்து அதன் முகாமையாளர் உட்பட எட்டு யுவதிகளை கைது செய்துள்ளனர்.

கண்டியில் மசாஜ் நிலையங்கள் என்ற போர்வையில் நடத்தப்படும் விபசார நிலையங்கள் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியின் உத்தரவின் பேரில் சோதனையிடப்படுவதில்லை என ஊடகங்களில் வெளியானதையடுத்து பொலிஸார் இந்த அதிரடி சோதனைகளை மேற்கொண்டனர்.

கண்டி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தல்வத்த பிரதேசத்தில் கடந்த 31ம் திகதி மசாஜ் நிலையங்கள் என்ற போர்வையில் நடத்தப்பட்ட இரண்டு விபசார நிலையங்கள் சுற்றிவளைக்கப்பட்டு அங்கு நான்கு யுவதிகளையும் இரு முகாமையாளர்களையும் கைது செய்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் முகாமையாளர் ஒருவரிடம் இருந்து 2500 மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருளை மீட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்

விபசார நிலையத்தின் சேவையை பெற்றுக் கொள்வதற்காக வந்த நபர்களுக்கு போதைப்பொருள் விற்பனை செய்தாரா என்பது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

ஹேவாஹெட்ட பிரதேசத்தில் அமைந்துள்ள விபசார நிலையம் ஒன்றும் கண்டி பொலிஸ் நிலைய ஊழல் ஒழிப்பு அதிகாரிகள் குழுவினால் சுற்றிவளைக்கப்பட்டதுடன் அதன் முகாமையாளரும் இரண்டு யுவதிகளும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## நாட்டில் வறுமை இருக்கும் வரை

# வீட்டு வேலைத் தொழிலில் ஏற்படும் அநீதிகளையும் ஒழிக்க முடியாது

## வீட்டு வேலைத் தொழிலாளர் தேசிய மகாநாட்டில் தெரிவிப்பு

அக்குணை குறூப் நிருபர்

நாட்டில் வறுமை இருக்கும் வரை வீட்டு வேலைத் தொழிலை ஒழிக்க முடியாது. எனவே வறுமை ஒழிப்பு வேலைத்திட்டங்கள் மிக முக்கியம் என வீட்டு வேலைத் தொழிலாளர் சங்கத்தின் 9 வது மகாநாட்டில் தெரிவிக்கப்பட்டது. (1)

கண்டி கெப்பட்டிபொல நினைவு மண்டபத்தில் வீட்டுவேலைத் தொழிலாளர் தொழிற் சங்கத்தின் 9 வது தேசிய மகாநாடு இடம் பெற்றது. அதன் தலைவி சத்யவானி சரசகோபால் அங்கு உரையாற்றும் போதே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்தாவது

வீட்டு வேலையில் ஈடுபடும் தொழிலாளர்கள் வேலைக்காரி என்ற இழி சொல்லில் இருந்து மீட்சி பெற வேண்டும். எமது சங்கம் அதற்காகப் பாடுபடுகிறது. அதற்கு உரிய கௌரவம் வழங்கப்பட வேண்டும். வீட்டு வேலைப் பணியில் ஈடுபடுவோரது உரிமைகள் வழங்கப்பட்டால் மட்டுமே அது கௌரவமான ஒரு தொழிலாக மாற முடியும்.

உலகத்தில் அன்னறாட ஜீவனோபாயத்திற்காக மேற்கொள்ளப்படும் எத்தனையோ தொழில்கள் உண்டு. அதில் ஒன்றாகவே வீட்டு வேலைத் தொழிலையும் கருத வேண்டும். வறுமைக்காக இதனைச்செய்கிறார்கள்.

வீட்டுவேலைத் தொழில் என்றதும் மலையகத்திற்கு மட்டும் எல்லைப் படுத்தப்பட்ட ஒன்று என்று சிலர் நினைக்கிறார்கள். ஆனால் அப்படி இல்லை.

இன்று எமது சங்கத்தை எடுத்துக் கொண்டால் நாடளாவிய ரீதியில் மூவின மக்களும் அதில் அங்கம் வகிக்கின்றனர்.

காரணம் வெளி நாடுகளுக்கு வீட்டுப் பணிக்காக அதிகமானவர்கள் சென்றுள்ளனர். அவர்களுக்கு சில வேளைகளில் அநீதிகள் ஏற்பட்டுள்ளன, அத்தகையநேரம் அவர்களுக்காக குரல் கொடுக்க அமைப்புக்கள் தேவைப்பட்டன.

அந்த வகையில் இன்று எமது சங்கத்தை நாடி வருவோர் எண்ணிக்கை அதிகரித்துள்ளதுடன் வவுனியா, மட்டக்களப்பு, காத்தான்குடி, அம்பாறை, கொழும்பு உட்பட மலையகப் பகுதி பெண்கள் பலரும் அங்கத்துவம் பெற்றுள்ளனர். கொழும்பை சூழ உள்ள அனேக தொழிலாளர்கள் தமது உரிமைகளை எமது சங்கத்தினூடாக வென்றெடுத்துள்ளனர் என்றார்.

மேற்படி சங்கத்தால் தமது உரிமைகளை வென்றெடுத்த பலரும் அங்கு உரையாற்றினர். முன்பு இழிவாக அழைக்கப்பட்ட தாம் இச்சங்கத்திற்கூடாகப் போராடி சில உரிமைகளைப் பெற்றதன் காரணமாக இன்று நல்ல சம்பளத்துடன் கௌரவமாக தாம் நடத்தப்படுவதாகவும் அவர்கள் தெரிவித்தனர். நடப்பு வருடத்திற்கான புதிய செயற்குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

# எரிபொருள் நிலையத்தில் ரூ. 02 இலட்சம் கொள்ளை

## இரத்தினபுரி பகுதியில் சம்பவம்

பலாங்கொடை தினகரன் நிருபர்

இரத்தினபுரி திருவெனாகெட்டிய பிரதேசத்தில் உள்ள கோனகும்புர எரிபொருள் நிரப்பு நிலையத்தின் ஊழியர்களை இனந்தெரியாதோர் தாக்கி இரண்டு இலட்சம் ரூபா பணத்தை கொள்ளையடித்து சென்றுள்ளதாக இரத்தினபுரி பொலிஸார் தெரிவித்தனர்.

இரு இனந்தெரியாத நபர்கள் கடந்த 31 ஆம் திகதி அதிகாலையில் எரிபொருள் நிலையத்துக்கு வந்து அங்கு சேவையில் ஈடுபட்டிருந்த ஊழியர்களை பொல்லினால் தாக்கி ஊழியர் ஒருவரின் கையை கத்தியால் வெட்டி காயப்படுத்தி உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அதன் பின்னர் அவ்விருவரும் ஊழியர்களை பயமுறுத்தி இரண்டு இலட்சத்துக்கு அண்மித்த பணத்தை கொள்ளையடித்து தப்பி சென்றுள்ளதாக புகார் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் உள்ள சிசிடிவி கேமராவிலே கொள்ளையடிக்கும் சம்பவம் பதிவாகியுள்ளதாக தெரிவித்த பொலிஸார் சந்தேக நபர்களை கைது செய்ய ஆரம்பகட்ட விசாரணைகள் இடம் பெற்று வருவதாக தெரிவித்தனர்.





'எம்ப்பவர்' மகளிர் சங்கத்தின் ஏற்பாட்டில் கண்டி உடத்தலவின்னை, வத்தேகெதர, தென்னக்கும்புர வரக்காமுற அக்குறணை மற்றும் நுகவெல ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த பின் தங்கிய வறிய குடும்பங்களுக்கு வீடுகள் நிர்மாணப் பணிகளுக்கான நிதி உதவி, நீர் தாங்கிகள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்களுக்கான போசாக்கு உணவு வழங்கும் நிகழ்வு இடம் பெற்றது. உடத்தலவின்னை ஜாமிஉல் அஸ்ஹர் தேசிய பாடசாலை மண்டபத்தில் தலைவர் பாத்திமா ரியாஸா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிடிக்கப்பட்ட படம்.

(மாவத்தகம தினகரன் நிருபர்)

# சப்ரகமுவ மாகாண அரச ஊழியர்கள் கடமை உறுதிப்பிரமாணம்

காவத்தை தினகரன் விசேட நிருபர்



சுபீட்சமான நாட்டை கட்டி எழுப்பும் கொள்கை பிரகடனத்திற்கு அமைய சப்ரகமுவ மாகாண சபையில் கடமையாற்றும் அரச சேவையாளர்கள் தமது கடமைச் செயற்பாடுகளை உறுதிப்படுத்தும் நிகழ்வு நேற்று(02) சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ தலைமையில் சப்ரகமுவ மாகாண சபையின் கட்டிடத்தொகுதியில் இடம் பெற்றது.

இதன்போது சர்வமதத் தலைவர்களின் பிரார்த்தனைகள் இடம்பெற்றதுடன் அரச சேவையாளர்கள் தமது கடமைச் செயற்பாடுகளை உறுதிப்பிரமாணம் செய்து கொள்ளும் நிகழ்வும் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ, சப்ரகமுவ மாகாண சபையின் தலைவர் கஞ்சன ஜயரத்ன உட்பட அரச அதிகாரிகள், அரச உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்

# இரத்தினக்கல் அகழ்வு நடவடிக்கையால் ஆற்று நீரை பயன்படுத்த முடியாது சிரமம்

இரத்தினபுரி சுழற்சி நிருபர்



காவத்தையை ஊடறுத்து ஓடும் வேகங்கை ஆற்றில் இடம்பெற்று வரும் சட்டவிரோத இரத்தினக்கல் அகழ்வு நடவடிக்கையால் அந்த ஆற்று நீரைக் குடிநீராகவும் ஏனைய தேவைகளுக்காகவும் பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக இப்பிரதேச மக்கள் முறைப்பாடு செய்கின்றனர்.

இப்பிரதேச ஆற்றங்கரைவாழ் மக்களின் குடிநீர் மற்றும் ஏனைய சுத்தத் தேவைகளுக்காக இந்த ஆற்றின் நீரே பயன்படுத்தப்பட்டு வருகிறது.

எனினும் இரத்தினக்கல் அகழ்வு நடவடிக்கையில் ஈடுபடுவோர் இரத்தினக்கல் அதிகார சபையின் அனுமதிப் பத்திரம் பெற்றும் அனுமதி பத்திரம் பெறாமலும் ஆற்றின் நடுவிலும் ஆற்றங்கரை ஓரங்களிலும் இரத்தினக்கல் அகழ்வில் ஈடுபடுகின்றனர். இதனால் ஆற்றங்கரைகள் இடிந்து விழுந்து நீரில் கலந்து வருவதால் ஆற்று நீர் சேற்று நீராக மாறி விடுவதாகவும் இதனால் ஆற்று நீர் மாசடைந்து வருவதுடன் ஆற்று நீரை தேவைகளுக்காகப் பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக பிரதேச மக்களும் சூழலியலாளர்களும் முறையிடுகின்றனர்.

இவ்விடயமாக இரத்தினக்கல் அதிகார சபை, அரசாங்க நிறுவனங்கள், உட்பட பல தரப்பினருக்கு அறிவித்தும் எவ்வித பிரயோசனமும் ஏற்படவில்லை என அவர்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே பொறுப்பு வாய்ந்தவர்கள் இவ்விடயமாக முறையான நடவடிக்கை மேற்கொள்ளாவிட்டால் இதைவிடப் பாரதூரமான விளைவுகளை அனைவரும் சந்திக்க வேண்டி வரும் எனவும் இவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

# இலங்கை - இந்தியா மோதும் முதல் டி20 போட்டி இன்று



இலங்கை–இந்திய அணிகளுக்கு இடையிலான முதலாவது டி20 போட்டி இன்று (03) மும்பை வான்கடே அரங்கில் நடைபெறவுள்ளது.

புத்தாண்டின் முதல் தொடரான இதில் இலங்கை மற்றும் இந்திய அணி புதிய எதிர்பார்ப்புகளுடன் களமிறங்கவுள்ளது. இந்திய அணி மூத்த வீரர்களுக்கு ஓய்வு அளித்து இளம் வீரர்களுக்கு வாய்ப்பு வழங்கியுள்ளது.

அணித் தலைவர் ரோஹித் ஷர்மா மற்றும் விராட் கொஹ்லிக்கு இலங்கைக்கு எதிரான டி20 தொடரில் ஓய்வு அளிக்கப்பட்டுள்ளது. இதனால் சகலதுறை வீரர் ஹார்திக் பாண்டியா தலைமையிலேயே இந்திய அணி களமிறங்குகிறது. குறிப்பாக இளம் வீரர்களுக்கே இந்திய அணியில் வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

மறுபுறம் தசுன் ஷானக்க தலைமையிலான இலங்கை அணி டி20இல் இந்தியாவுக்கு எதிராக சிறப்பாக செயற்படும் நிலையில் இந்திய மண்ணில் முதலாவது டி20 தொடர் வெற்றி ஒன்றை எதிர்பார்த்து களமிறங்கவுள்ளது.

குறிப்பாக காயத்தில் இருந்து மீண்ட அவிஷ்க பெர்னாண்டோ இலங்கை அணியில் இணைந்திருப்பது துடுப்பாட்ட வரிசைக்கு வலுச் சேர்ப்பதாக உள்ளது. பந்துவீச்சிலும் டில்ஷான் மதுஷங்க அணிக்கு திரும்பி இருப்பதோடு சுழல்பந்தில் வனிந்து ஹசரங்க மற்றும் மஹீஷ் தீக்ஷன வலுச்சேர்ப்பார்கள்.

இந்திய மண்ணில் இலங்கை அணி இதுவரை ஐந்து முறை இரு தரப்பு டி20 தொடர்களில் ஆடியபோதும் ஒரு தொடரைக் கூட வென்றதில்லை. இந்தியா மற்றும் இலங்கை அணிகள் இதுவரை பலப்பரீட்சை நடத்திய 26 டி20 சர்வதேச போட்டிகளில் இந்திய அணி 17 போட்டிளில் வென்றிருக்கும் நிலையில் இலங்கையால் எட்டுப் போட்டிகளிலேயே வெல்ல முடிந்துள்ளது.

வான்கடே அரங்கு துடுப்பாட்ட வீரர்ளுக்கு சொர்க்கபுரியாகும். இங்கு பந்துவீச்சாளர்களுக்கு குறைந்த அளவே உதவுகிறது. குறிப்பாக வெற்றி இலக்கை துரத்தி அடிப்பது இலகு என்பதால் நாணய சுழற்சியும் முக்கியமாகும்.

இன்றைய போட்டி இலங்கை நேரப்படி இரவு 7 மணிக்கு ஆரம்பமாகும்.





கல்வி அமைச்சு மற்றும் இலங்கை பாடசாலைகள் மெய்வல்லுனர் சங்கத்தின் ஏற்பாட்டில் 51ஆவது தடவையாகவும் நடைபெற்ற சேர். ஜோன் டார்பட் கனிஷ்ட மெய்வல்லுனர் போட்டியின் ஆடவர் பிரிவில் சம்பியனான வென்னப்புவ புனித ஜோசப் வாஸ் கல்லூரி அணியையும் மகளிர் பிரிவில் சம்பியனான ஆவே மரியா கன்னியாஸ்திரிகள் மடம் அணியையும் படத்தில் காணலாம். இந்தப் போட்டிக்கு சிலோன் பிஸ்கெட் நிறுவனத்தின் ரிட்ஸ்பறி சொக்கலட்ஸ் நிறுவனம் அனுசரணை வழங்கியது.

## இலங்கை கிரிக்கெட் அணியில் உடற் பயிற்சியாளர் நியமனம்



இலங்கை கிரிக்கெட் அணியின் புதிய தலைமை உடற் பயிற்சி சிகிச்சையாளராக இங்கிலாந்தைச் சேர்ந்த கிரிஸ் கிலார்க் அயர்ன்ஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

கிலார்க் அயர்ன்ஸ் உடற் பயிற்சி சிகிச்சை நிபுணருக்காக பட்டப்படிப்பினை இங்கிலாந்தின் கிழக்கு பல்கலைக்கழகத்தில் நிறைவுசெய்துள்ளதுடன், எம்.எஸ்.சி. பட்டப்படிப்பினையும் இங்கிலாந்தின் கிங்ஸ் கல்லூரியில் பெற்றுள்ளார்.

கிரிஸ் கிலார்க் அயர்ன்ஸ் இதற்கு முன்னர் இங்கிலாந்தின் எசெக்ஸ் கவுண்டி அணியின் விஞ்ஞானம், வைத்தியம் மற்றும் உடற் சிகிச்சை பிரவுகளின் தலைமை பதவியை வகித்துள்ளார்.

புதிதாக நியமிக்கப்பட்டுள்ள கிரிஸ் கிலார்க் அயர்ன்ஸ் இந்தியாவுக்கு எதிராக இன்று (03) ஆரம்பமாகும் தொடரில் தன்னுடைய பணியை ஆரம்பிக்கவுள்ளதுடன், இரண்டு வருட ஒப்பந்தத்தின் அடிப்படையில் அணியில் இணைக்கப்பட்டுள்ளார்.

## சர்ச்சைக்குரிய பிடியெடுப்புக்கு எம்.சி.சி அமைப்பு விளக்கம்



அவுஸ்திரேலியாவின் பிக் பாஷ் லீக் (பி.பி.எல்) போட்டியில் சர்ச்சைக்குரிய விதத்தில் எல்லைக் கோட்டுக்கு அருகே பிடியெடுப்பு மேற்கொண்ட மைக்கல் நாசரின் செயல் குறித்து எம்.சி.சி விளக்கம் அளித்துள்ளது.

பி.பி.எல் டி20 போட்டியில் ஜனவரி 1 அன்று பிரிஸ்பேன் ஹீட் மற்றும் சிட்னி சிக்ஸர்ஸ் அணிகள் பிரிஸ்பேனில் மோதின.

இந்த ஆட்டத்தில் சிட்னி அணியின் ஜோர்டன் சில்க் பிடியெடுப்பை மைக்கல் நாசர் பிடித்தது சர்ச்சைக்கு ஆளாகியுள்ளது. லோங் ஒப் பகுதியில் சில்க் அடித்த பந்தை எல்லைக்கோட்டின் அருகே பிடிக்க முயன்றார் மைக்கல் நாசர்.


ஆனால் தடுமாறி விழ நேர்ந்ததால் பந்தைத் தூக்கி எல்லைக் கோட்டின் வெளியே எறிந்தார். பின்னர் பந்தை எகிறியபடி பிடித்து உள்ளே வீசினார். தொடர்ந்து கோட்டுக்கு உள்ளே வந்து பந்தை பிடியெடுத்தார். இந்தப் பிடியெடுப்பு நடுவரால அனுமதிக்கப்பட்டது

இதுபோன்ற பிடியெடுப்புகள் குறித்த விதிமுறைகளில் மாற்றம் தேவை என சில ரசிகர்கள் கருத்து தெரிவித்துள்ளார்கள். களத்தடுப்பாளரும் பந்தும் கோட்டுக்கு வெளியே இருப்பதால் இதை சிக்ஸர் என அறிவித்திருக்க வேண்டும் என்ற மாற்றுக்கருத்துகளும் வெளியாகியுள்ளன.

இது குறித்த சர்ச்சைக்கு கிரிக்கெட் விதிகளை நிர்ணயிக்கும் எம்.சி.சி அமைப்பு விளக்கம் அளித்துள்ளது. ட்விட்டரில் கூறியதாவது:

“பந்தை முதலில் பிடிக்கும்போது கோட்டுக்கு உள்ளே இருக்க வேண்டும். கோட்டுக்கு வெளியே ஒரே சமயத்தில் தரையில் காலை வைத்தபடி பந்தைத் தொடக்கூடாது” இவ்வாறு கூறியுள்ளது.

## முன்னாள் பாப்பரசர் பூதவுடல் மக்கள் அஞ்சலிக்காக வைப்பு



முன்னாள் பாப்பரசர் 16ஆம் பெனடிக்ட் பூதவுடல் வத்திக்கானில் அஞ்சலிக்காக வைக்கப்பட்ட நிலையில் ஆயிரக்கணக்கான மக்கள் இறுதி மறியாதை செலுத்துவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சுகவீனம் காரணமாக பாப்பரசர் பதவியில் இருந்து வெளியேறி கிட்டத்தட்ட ஒரு தசாப்தத்தை எட்டும் நிலையில் கடந்த டிசம்பர் 31ஆம் திகதி அவர் தனது 95 ஆவது வயதில் காலமானார்.

பதவியில் இருக்கும் பாப்பரசர் பிரான்ஸிஸ் முன்னிலையில் வரும் வியாழக்கிழமை அவரது இறுதிச் சடங்கு இடம்பெறவுள்ளது. பாப்பரசர் ஒருவர் தனக்கு பின்வந்த பாப்பரசர் ஒருவரால் நல்லடக்கம் செய்யப்படுவது இது முதல் முறையாக உள்ளது.

அந்நிலையில் நேற்று அதிகாலையில் இருந்து புனித பீட்டர்ஸ் சதுக்கத்தின் முனை வரையில் பாப்பரசருக்கு இறுதி அஞ்சலி செலுத்துவதற்காக மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்தனர்.

முன்னான் பாப்பரசரின் பூதவுடல் புனித பீட்டரின் பசிலிகா தேவாலயத்தில் திறந்த பெட்டி ஒன்றில் மக்கள் அஞ்சலிக்காக மூன்று நாட்கள் வைக்கப்படும். இதில் ஒவ்வொரு நாளும் இரவு 7 மணி வரை மக்கள் அஞ்சலி செலுத்த அனுதிக்கப்படுகின்றனர்.

புனித பீட்டர் சதுக்கத்தில் இறுதிக் கிரியை இடம்பெற்று, தொடர்ந்து பசிலிக்கா தேவாலயத்திற்கு கீழ் இருக்கும் கல்லறையில் அவரது பூத உடல் அடக்கம் செய்யப்படும்.

முன்னாள் பாப்பரசரின் பூத உடலின் புகைப்படத்தை வத்திக்கான் கடந்த ஞாயிற்றுக்கிழமை (01) வெளியிட்டது. அதில் தங்கத்தால் அலங்கரிக்கப்பட்ட சிவப்பு அங்கி பூத உடலுக்கு அணிவிக்கப்பட்டிருந்தது.

இந்த இறுதிக் கிரியையில் உலகெங்கும் இருந்து ஆயிரக்கணக்கான மக்கள் பங்கேற்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பாப்பரசர் ஒருவரின் இறுதிக் கிரியை 2005ஆம் ஆண்டே கடைசியாக இடம்பெற்றது. அப்போது இரண்டாம் ஜோன் போலின் இறுதிக் கிரியை வரலாற்றில் பதிவான மிகப்பெரிய கிறிஸ்தவ ஒன்றுகூடல்களில் ஒன்றாக இருந்தது. அப்போது ரோமுக்கு நான்கு மில்லியன் மக்கள் வந்ததாக கணிக்கப்பட்டது.

## புதிய பிறழ்வுகளைக் கண்டறிய இந்திய மத்திய அரசு உத்தரவு

சீனா, ஜப்பான், அமெரிக்கா உள்ளிட்ட பல நாடுகளில் தலைதூக்கியுள்ள கொரோனா வைரஸின் புதிய பிறழ்வுகளைக் கண்டறிவதற்கான பகுப்பாய்வுகளைத் துரிதப்படுத்துமாறு மாநிலங்களதும் யூனியன் பிரதேசங்களதும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு இந்திய மத்திய சுகாதார அமைச்சு அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளது.

அதேநேரம், சீனாவில் இத்தொற்றின் நிலைமைகளை இந்தியா உன்னிப்பாக கவனித்து வருவதாக அதிகாரிகள் தெரிவித்திருக்கின்றனர்.

ஜப்பான், அமெரிக்கா, தென் கொரியா, பிரேசில் மற்றும் சீனா ஆகிய நாடுகளில் கொரோனா வைரஸின் புதிய பிறழ்வுகளுக்கு உள்ளாவோரின் எண்ணிக்கையில் திடீரென அதிகரிப்பு ஏற்பட்டிருக்கிறது. அதனால் இந்த அதிகரிப்புக்கு காரணமாக அமைந்துள்ள பிறழ்வை சரியான முறையில் கண்டறிய வேண்டும் என சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

‘அவர் வேர்ல்ட்’ இணைய தளத் தரவுகளின் படி, ஜப்பானில் 150,000க்கு மேற்பட்டவர்களும் அமெரிக்காவில் 67,000க்கு மேற்பட்டவர்களும், தென் கொரியாவில் 65,000க்கு மேற்பட்டவர்களும், பிரேசிலில் 43,000க்கு மேற்பட்டவர்களும் இப்புதிய தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர்.

# சர்வதேச செய்திகள்

## உலகப் பொருளாதாரம் 2022ஐ விடவும் 2023 ஆம் ஆண்டு கடினமாக அமையும்

### சர்வதேச நாணய நிதியம் எச்சரிக்கை



அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் சீனா போன்ற பெரும்பாலான உலகப் பொருளாதாரங்களின் வளர்ச்சி மந்தமடைந்திருக்கும் நிலையில் 2022ஆம் ஆண்டை விடவும் இந்த ஆண்டு கடுமையானதாக இருக்கும் என்று சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்கீவா எச்சரிக்கை விடுத்துள்ளார்.

உலகப் பொருளாதாரங்களின் மூன்றில் இரண்டு பங்கு மந்தநிலையை பதிவு செய்வதால் 2023 “கடுமையான ஆண்டாக இருக்கும்” என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

“ஏனென்றால், அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், சீனா ஆகிய மூன்று மிகப்பெரிய பொருளாதாரங்களும் ஒரே நேரத்தில் மெதுவடைந்துள்ளன” என்று நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்று உரையாற்றும்போது ஜோர்கீவா தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியம் கடந்த ஜூலையில் உலகப் பொருளாதார வளர்ச்சி 2.9 வீதம் என எதிர்வுகூறிய நிலையில் கடந்த ஒக்டோபரில் 2.7 வீதமாக குறைத்துக் கொண்டது. உக்ரைன் போர் மற்றும் வட்டி வீதத்தின் வேகமான அதிகரிப்புக் காரணமாகவும் அந்த நிறுவனம் இந்த முன்னறிவித்தலை வெளியிட்டிருந்தது.

உலகின் மிகப்பெரிய பொருளாதரமான சீனாவில் கொவிட் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டு நோய்த் தொற்று அதிகரித்த நிலையில் 40 ஆண்டுகளில் முதல் முறையாக உலகப் பொருளாதார வளர்ச்சியை விடவும் பின்தங்கியுள்ளது என்பதை ஜோர்கீவா சுட்டிக்காட்டினார்.

கடந்த வாரம் நான் சீனா சென்றிருந்தேன். அங்கே கொரோனா தொற்றே இல்லாத வலயத்திற்கு சென்றேன். ஆனால் பயணத் தளர்வுகள் செயல்பாட்டுக்கு வந்த பின்னர் தொற்று பரவலைத் தடுக்க முடியாது.

அடுத்த 2 மாதங்கள் சீனாவுக்கு மிகவும் கடினமான காலம். சீனப் பொருளாதார வளர்ச்சியில் எதிர்மறை தாக்கங்கள் ஏற்படலாம். அந்த எதிர்மறை விளைவுகள் சர்வதேச பொருளாதாரத்திலும் எதிரொலிக்கலாம்.

ஆனால் அமெரிக்கப் பொருளாதாரம் நெருக்கடியையோ அல்லது மந்தநிலையையோ தவிர்க்கும் சூழலே இருக்கிறது. காரணம் அங்கு தொழிலாளர் சக்தி இன்னும் வலுவாகவே உள்ளதாக அவர் கூறினார்.

“பணவீக்கத்தை சந்திக்காத நாடுகள் கூட, பண வீக்க சூழலை சந்திக்கும்” என்றும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கை, சாட், எத்தியோப்பியா, நமீபியா, கானா, லெபனான், சுரினாம் போன்ற நாடுகள் முகம் கொடுத்திருக்கின்ற கடன் பிரச்சினை உலகளாவிய பிரச்சினை ஒன்றை ஏற்படுத்தும் அளவுக்கு குறிப்பிடும் படியான அளவுக்கு வரவில்லை என்றபோதும் அந்த நாடுகளின் மக்களுக்கு கடன் பிரச்சினைக்கு தீர்வு ஒன்றை பெற்றுக் கொடுப்பது மிக முக்கியம் என்று சர்வதேச நாணய நிதிய முகாமைத்துவ பணிப்பாளர் தெரிவித்தார்.

என்றாலும் கடன் பிரச்சினைக்கு முகம்கொடுத்திருக்கும் நாடுகளின் எண்ணிக்கை மேலும் அதிகரித்தால் சர்வதேச பொருளாதாரத்துக்கு பாதகமான தாக்கம் ஒன்று ஏற்படக் கூடும் என்றும் அதன் காரணமாக இந்த நாடுகளுக்கு கடன் பிரச்சினைக்கு தீர்வு ஒன்றை பெற்றுக் கொடுப்பதற்கு சர்வதேச நாணய நிதியம் கடுமையாக பாடுபடுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## யூரோ வலயத்தில் குரோசியா இணைவு



குரோசியா யூரோ நாணயத்திற்கு மாறியதோடு ஐரோப்பிய கடவுச்சீட்டு சுதந்திர வலயத்திற்குள் நுழைந்துள்ளது.

கடந்த ஞாயிறு (01) நள்ளிரவுடன் பல்கான் நாடான குரோசியா தனது குனா நாணயத்திற்கு விடைகொடுத்து யூரோ வலயத்தில் அங்கத்துவம் பெறும் 20ஆவது நாடாக பதிவானது.

அதேபோன்று 27அவது செங்கன் வலய நாடாகவும் அது அங்கத்துவம் பெற்றது. செங்கன் வலயம் உலகின் மிகப் பெரிய கடவுச்சீட்டு இன்றி பயணம் செய்ய முடியுமான பகுதியாக உள்ளது. இந்த வலயத்தில் 400 மில்லியனுக்கும் அதிகமான மக்களுக்கு உறுப்பு நாடுகளிடையே பயணிக்க முடியுமாக உள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தில் குரோசியா இணைந்து 10 ஆண்டுகளின் பின்னர் இந்த மாற்றங்கள் நடப்புக்கு வந்துள்ளன.

## பிரேசில் ஜனாதிபதியாக பதவியேற்றார் டா சில்வா



பிரேசிலின் புதிய ஜனாதிபதியாக லூலா டா சில்வா மூன்றாவது முறையாக பதவி ஏற்றுள்ளார்.

இடதுசாரி அரசியல்வாதியான லூலா, முன்னதாக 2003 மற்றும் 2010க்கு இடையே ஜனாதிபதியாக பதவி வகித்துள்ளார். கடந்த ஒக்டோபரில் நடந்த தேர்தலில் பதவியில் இருந்த ஜனாதிபதி ஜெயிர் பொல்சொனாரோவை அவர் தோற்கடித்தார்.

பொல்சொனாரோ பதவி ஏற்பு நிகழ்வை தவிர்க்கும் வகையில் கடந்த வெள்ளிக்கிழமை அமெரிக்காவுக்கு புறப்பட்டுச் சென்றார்.

மோசமான அழிவில் உள்ள நாட்டை மீண்டும் கட்டியெழுப்புவதாக தனது முதல் உரையில் அவர் உறுதி அளித்தார்.

நாட்டை பெரும் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்பது மற்றும் பொல்சனாரோ பதவிக் காலத்தில் மக்களிடையே ஏற்பட்ட பெரும் பிளவை சரிசெய்வது என லூலா பெரும் சவாலை எதிர்கொண்டுள்ளார்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஜனவரி மாதம் 3ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.